
மலர் : 9

# சத்தியத்தின் குரல்




THE

# VOICE OF TRUTH

INTERNATIONAL

TAMIL EDITION

Volume - 9

# சத்தியத்தின் குரல்

THE VOICE OF TRUTH INTERNATIONAL

| EDITORIAL TEAM | ஆசிரியர்கள் குழு |
|---|---|
| Founding Editor | நிறுவன ஆசிரியர் |
| J.C. CHOATE | J.C. சோட் |
| Managing Editor | நிர்வாக ஆசிரியர் |
| S. RAJANAYAGAM | S. ராஜநாயகம் |
| Translating Editor | மொழி பெயர்ப்பு ஆசிரியர் |
| B. BENNY MARTIN | B. பென்னி மார்ட்டின் |
| Guest Editors | சிறப்பு ஆசிரியர்கள் |
| BYRON NICHOLS<br>JERRY BATES<br>LOUIS RUSHMORE | பைரன் நிக்கோல்ஸ்<br>ஜெர்ரி பேட்ஸ்<br>லூயிஸ் ரஷ்மோர் |

Publishing Consultant

BETTY CHOATE

| Copies can be had from | தேவையான பிரதிகளுக்கு |
|---|---|
| Tamil world soul winning Campaign<br>86-A, Dharapuram Road,<br>KANGAYAM - 638 701.<br>T.N. India. | தமிழ்க உலக ஆத்தும ஆதாயத் திட்டம்<br>86-A, தாராபுரம் ரோடு,<br>காங்கயம் – 638 701.<br>தமிழ்நாடு, இந்தியா. |


நிறுவன ஆசிரியர் உரை



## ராஜ்யத்தைப் பிரசங்கித்தல்

## Preaching The Kingdom

*J.C. Choate*

**ப**ழைய ஏற்பாடு முழுவதிலும் வரப் போகிற *ஆவிக்குரிய ராஜ்யம்* பற்றி அதிகமாக சொல்லப்பட்டிருக்கிறது. கடைசி நாட்களில் **கர்த்தருடைய ராஜ்யம்** ஸ்தாபிக்கப்படும் என்று ஏசாயா முன்னறிவித்தார் (ஏசாயா 2:2,3). தேவன் என்றென்றைக்கும் அழியாத ஒரு *ராஜ்யத்தை* எழும்பப் பண்ணுவார் என்று தானியேல் சொன்னார். (தானி. 2:44) அந்நேரத்தில் கர்த்தருடைய ஆவி மாம்சமான யாவர் மேலும் ஊற்றப் படும் என்று யோவேல் சொல்லியுள்ளார். (யோ. 2:28,29), யோவேலின் தீர்க்கதரிசனம் அப்போஸ்தலர் இரண்டாம் அதிகாரத்தில் பதிவு செய்யப்பட்டிருக்கிற முக்கிய நிகழ்வுகளில் நிறைவேறியது என்று பேதுரு விளக்கினார்.

யோவான் ஸ்நானன் *பரலோக ராஜ்யம்* சமீபித்திருக்கிறது என்று பிரசங்கம் பண்ணினார் (மத். 3:1,2). மேலும், கிறிஸ்து தன்னுடன் நிற்கிறவர்களில் சிலர் தேவனுடைய *ராஜ்யம்* பெலத்தோடே வருவதைக் காணுமுன், மரணத்தை ருசி பார்ப்பதில்லையென்று சொன்னார் (மாற். 9:1). கடைசியாக, கிறிஸ்து தாம் "தேவனுடைய குமாரன்" என்கிற உண்மையாகிய கல்லின் மீது தமது *சபையைக்* கட்டுவதாகச் சொன்னார் (மத். 16:18,19; 1 கொரி. 3:11). அவர் *ராஜ்யத்தின்* திறவுகோல்களை அதாவது, *ராஜ்யம்* அல்லது *சபையில்* பிரவேசிப்பதற்கு ஒவ்வொரு வரும் என்ன செய்ய வேண்டும் என்பதைச் சொல்வதற்கான அதிகாரத்தை அப்போஸ்தலர்களிடம் கொடுப்பதாக வாக்குத்தத்தம் செய்தார்.

அப்போஸ்தலர்களெல்லாரும் பரிசுத்த ஆவியினாலே நிரப்பப் பட்டு ஆவியானவர் தங்களுக்குத் தந்தருளின வரத்தின்படியே வெவ்வேறு பாஷைகளிலே பேசத் தொடங்கின போது *ராஜ்யம்* ஸ்தாபிக்கப்படுவது சம்பந்தமான தீர்க்கதரிசனங்கள் நிறைவேற்றப் பட்டதை அப்போஸ்தலர் இரண்டாம் அதிகாரத்தில் நாம் காண்கி றோம். இந்த ராஜ்யம் தான் சீக்கிரமாக ஸ்தாபிக்கப்படப்போகிறது

என்று யோவான் சொல்லியிருந்தார், இதைத்தான் கிறிஸ்து தாம் கட்டப்போவதாகச் சொன்னார். அப்போது, அப்போஸ்தலர்கள், முதல் முறையாக சுவிசேஷத்தைப் பிரசங்கித்து, பாவமுள்ள மனிதன் எப்படி இரட்சிக்கப்பட முடியும் என்பதை வெளிப்படுத்தி இதன் வாயிலாக *ராஜ்யம் அல்லது சபையின் திறவுகோல்களை* பயன் படுத்தினர். அதைக் கேட்டு விசுவாசித்து தங்கள் பாவங்களிலிருந்து மனந்திரும்பி, பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற்றவர்கள் இரட்சிக்கப்பட்டு கர்த்தராலேயே *சபையில்* சேர்க்கப்பட்டார்கள்.

*ஆகையால், ராஜ்யமும், சபையும், ஒரே அமைப்பாக* இருந்து *தேவனுடைய வீடாகவும் அல்லது* கிறிஸ்துவின் *ஆவிக்குரிய சரீரமாக வும் இருக்கிறது* (1 தீமோத். 3:15; 1கொரி. 12:27). பவுல், கொலேசே பட்டணத்து சபைக்கு தேவனைப் பற்றி இவ்விதமாகச் சொல்கிறார், "இருளின் அதிகாரத்தினின்று நம்மை விடுதலையாக்கி, தமது அன்பின் குமாரனுடைய **ராஜ்யத்திற்கு** உட்படுத்தினவருமாயிருக்கிற பிதாவை ஸ்தோத்திரிக்கிறோம் " என்று (கொலோ. 1:13). எபிரெயர் ஆசிரியர் சொல்லும்போது, " *ஆதலால் அசைவில்லாத ராஜ்யத்தைப்* பெறுகிற *வர்களாய் நாம் பயத்தோடும், பக்தியோடும் தேவனுக்கு பிரியமாய் ஆராதனை செய்யும்படி கிருபையைப் பற்றிக் கொள்ளக்கடவோம்*" என்று சொல்கிறார் (எபி. 12:28). அப்படியானால், அவர் இங்கே எந்த **ராஜ்யம்** பற்றிப் பேசிக் கொண்டிருக்கிறார்? பரலோகத்திலிருந்து வந்த தேவனுடைய ராஜ்யம். அதாவது, கர்த்தர் இரட்சித்து சபையில் சேர்த்துக் கொண்ட மக்கள் அடங்கிய *கர்த்தருடைய சபை, கிறிஸ்து வின் ஆவிக்குரிய சரீரமாகிய சபையைப் பற்றித்தான்* பேசுகிறார் (எபே. 1:22, 23; கொலோ. 1:18).

கர்த்தருடைய மரணம், அடக்கம், உயிர்த்தெழுதலுக்குப் பிறகு வேத வசனம் கிறிஸ்துவைப் பற்றி இவ்விதமாகச் சொல்லுகிறது, " *அவர் பாடுபட்ட பின்பு, நாற்பது நாளளவும் அப்போஸ்தலர்களுக்கு தரிசன மாகி, தேவனுடைய **ராஜ்யத்துக்குரியவைகளை** அவர்களுடனே பேசி அநேகம் தெளிவான திருஷ்டாந்தங்களினாலே அவர்களுக்குத் தம்மை உயிரோடிருக்கிறவராகக் காண்பித்தார்* " (அப். 1:3). வேறு விதமாகச் சொன்னால், எருசலேமிலே விரைவில் ஸ்தாபிக்கப்பட விருந்த தமது **ராஜ்யம்** அல்லது **சபையைக்** குறித்து கிறிஸ்து தம்முடைய அப்போஸ்தலர்களுக்கு இறுதி போதனைகளைச் செய்து கொண்டிருந்தார். கிறிஸ்து தொடர்ந்து, "*பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும் போது நீங்கள் பெலனடைந்து, எருசலேமிலும், யூதேயா*



*முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசி பரியந்தமும், எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள்* " என்றார் (அப். 1:8).

எனவே, அப்போஸ்தலர் இரண்டாம் அதிகாரத்தில் *அந்த ராஜ்ஜியம்* அல்லது *சபை* ஏறக்குறைய மூவாயிரம் பேரால் ஸ்தாபிக்கப் பட்டது (அப். 2:40). சுவிசேஷம் மறுபடியும், மறுபடியும் எருசலேமி லும், யூதேயாவிலும் பிரசங்கிக்கப்பட்டது. ஆயிரக்கணக்கானோர் கர்த்தருக்குக் கீழ்ப்படிந்து *அதே சபையிலேயே* கர்த்தரால் சேர்க்கப் பட்டு வந்தார்கள். இந்த வேளையில், " *பிலிப்பென்பவன் சமாரியாவி லுள்ள ஒரு பட்டணத்திற்குப் போய், அங்குள்ளவர்களுக்குக் கிறிஸ்து வைக் குறித்து பிரசங்கித்தான்* " என்று வேத வசனம் சொல்கிறது. (அப். 8:5) தொடர்ந்து நாம் இவ்விதமாக வாசிக்கிறோம், " *தேவனுடைய ராஜ்யத்துக்கும் இயேசு கிறிஸ்துவினுடைய நாமத்துக்கும் ஏற்றவை களைக் குறித்து, பிலிப்பு பிரசங்கித்ததை அவர்கள் விசுவாசித்த போது, புருஷரும் ஸ்திரீகளும் ஞானஸ்நானம் பெற்றார்கள்* " (அப். 8:12)

*தேவனுடைய ராஜ்யம்* சம்பந்தமாக அப்போஸ்தலர்களுக்கு கர்த்தர் எப்படி போதித்தார் என்பதை நாம் காண்கிறோம், அதன்பின்பு, பிலிப்பு கிறிஸ்துவைக் குறித்து சமாரியர்களுக்கு பிரசங்கித்தார். அவர் அப்படி போதித்ததன் மூலமாக *தேவனுடைய ராஜ்யத்தைப்* பற்றியும் அவர்களுக்குப் பிரசங்கித்தார்! *ராஜ்யம் அல்லது சபை* என்பது ஏன் இவ்வளவு அதிகமாக வலியுறுத்தப்பட்டது? ஏனென்றால், தேவ்ன் மனித இனத்துக்காக மேற்கொண்ட முயற்சிகள் மிக அதிகமானது. இரட்சிப்பை அளிக்கும் ஒரு வாகனமாக சபையானது தேவனுக்கு பயன்பட்டது. அது தேவனிடத்திலிருந்து வந்து, தீர்க்கதரிசனமாக உரைக்கப்பட்டது. இரட்சிக்கப்பட்டவர்கள் அதில் சேர்க்கப்பட்டார் கள்! ஆகவே, அதன் முக்கியத்துவத்தை அழுத்தமாகச் சொல்லாமல் இருக்க முடியாது.

*சிலவேளைகளில் சிலர் சபை முக்கியமானதல்ல. சபை பற்றி* நாம் அதிகமாக வலியுறுத்தக்கூடாது என்று பேசக்கேட்கிறோம். சபை மனிதர்களை உள்ளடக்கிய இரட்சிக்கப்பட்டவர்களின் கூட்டமாக இருக்கிறபடியால், சபை நம்மை *இரட்சிக்காது* என்பது உண்மைதான், ஆனால், *கிறிஸ்து* சபைக்கு *இரட்சகராயிருக்கிறார்,* கிறிஸ்து சபைக்காக மரித்து தம்முடைய சுய இரத்தத்தினாலே அதை வாங்கினார், ஆகவே,

நாம் இரட்சிக்கப்பட வேண்டுமென்றால், பரலோகம் போக வேண்டுமென்றால் கிறிஸ்து வாக்களித்துக் கட்டின கிறிஸ்துவின் சபையில் நாம் அங்கத்தினர்களாக இருக்க வேண்டும்.

*ராஜ்யம் அல்லது சபை* பற்றிச் சொல்லப்பட்டிருக்கும் எல்லாக் காரியங்களையும் வேத வசனங்களிலிருந்து நாம் எடுத்து விட்டால், எஞ்சியது எவ்வளவு இருக்கும்? மேலும், *கிறிஸ்து சபையைக்* கட்டி, அதற்கு அவர் தலைவராகவும், இரட்சகராகவும் இருந்து, அதற்கு அவர் அஸ்திபாரமாக இருந்து தம்முடைய பெயராலேயே அதை அழைத்து, அதற்காகவே திரும்ப வருவதாக வாக்குத்தத்தம் செய்திருக்கும்போது அது முக்கியமற்றது என்று எப்படி ஒருவரால் எண்ண முடியும்? நாம் இந்த உலகிற்கு அந்த சபையைப் பற்றி பிரசங்கிக்கவில்லையென்றால், அதன் தெய்வீக ஆரம்பம் பற்றி, அதன் நோக்கம் மற்றும் பணி பற்றி, தேவனுடைய ஒட்டுமொத்த திட்டத்தில் அதன் அதீத முக்கியத்துவம் பற்றி மனிதர்கள் எப்படி அறிந்து கொள்வார்கள்?

முடிவாக, சபையின் மதிப்பை நாம் உணர்ந்து கொண்டு, கர்த்தர் அதை நேசித்ததுபோல நேசித்து, அதில் அங்கத்தினர்களாக இருப்பதற்காக நன்றி செலுத்திக் கொண்டு, அது முழு உலகத்திற்கு உண்மையாகவே பரம்பத்தக்கதாக அதைப்பற்றி ஆர்வமுடன் எல்லோரிடமும் சொல்ல வேண்டும். பவுல் சொன்ன விதமாக, " *சபையிலே கிறிஸ்து இயேசுவின் மூலமாய்த் தலைமுறை தலைமுறைக்கும் சதாகாலங்களிலும் மகிமை உண்டாவதாக ஆமென்* " (எபே. *3:21*).

**ஜெபிக்கும் போது தவிர்க்க வேண்டியவை**

1. மனிதரால் வரும் புகழ்ச்சிக்காக ஜெபிப்பது (மத். 6:5,8)
2. வீண் வார்த்தைகளை அலப்புவது (மத். 6:7)
3. அதிக வார்த்தைகளைக் கொண்டு ஜெபிப்பது (மத். 6:7)

**நம்முடைய ஜெபங்களுக்கான தடைகள்**

1. சுய நலத்தோடு ஜெபிப்பது (யாக். 4:3)
2. மன்னிக்கும் சுபாவமில்லாமல் ஜெபிப்பது (மாற். 11:25-26)
3. விசுவாசக் குறைவுடன் ஜெபிப்பது (யாக். 1:6,7)
4. பாவத்தோடு ஜெபிப்பது (ஏசா. 59:1-2, யோவான் 9:31)

**நிர்வாக ஆசிரியர் உரை**

# மகா மேன்மையும், அருமையுமான வாக்குத்தத்தங்கள்

## Exceedingly Great And Precious Promises

*S. RAJANAYAGAM*

**மு**தலாவது, " வாக்குத்தத்தம் " என்ற வார்த்தையின் பொருள் காண்போம். " ஒன்றைச் செய்வேன் அல்லது செய்யமாட்டேன் என்று வாய்மொழியாகவோ அல்லது எழுத்துப் பூர்வமாக செய்யும் ஓர் ஒப்பந்தமே வாக்குத்தத்தம் " என்பது. பிதாவாகிய தேவனை அறிந்தவர்களுக்கு வாக்குத்தத்தம் என்பது புதிதானதாகவோ அல்லது புதிரானதாகவோ இருக்காது. ஏனெனில், இரண்டு ஏற்பாடுகளிலும் வாக்குத்தத்தங்கள் மலைபோல் குவிந்துள்ளது. ஆனால், அவ்வாக்குத்தத்தங்களுக்குப் பேதுரு இங்கே கொடுக்கும் அடைமொழியின் காரணமாக இங்கே அவை அதிமுக்கியத்துவம் பெறுகிறது. ஆம், அவைகளை அவர் வெறுமனே " வாக்குத்தத்தங்கள் " என்று சொல்லாமல், அருமையான "வாக்குத்தத்தம்" என்றும் கூட நிறுத்தாமல், மேன்மையும், அருமையுமான "வாக்குத்தத்தம்" என்பதிலும் திருப்திபடாமல், இன்னும் ஒருபடி மேலே சென்று, "மகாமேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்கள் " என்று வர்ணிக்கிறார்.

அப்படியானால், அந்த தேவ மனிதன், ஏன் இவ்வார்த்தைகளை இவ்வாறாகப் பயன்படுத்தினார் என்று ஆராய்ந்து பார்ப்பது அவசியமாகிறது. ஏனெனில், மகா மேன்மை, அருமை ஆகிய இச்சிறப்பு வார்த்தைகளெல்லாம் எடுத்த எடுப்பில் சாதாரணமாகப் பயன்படுத்தப் படும் வார்த்தைகள் அல்ல. ஒரு கவனமான கணிப்பிற்குப் பின்னும், சரியான ஒப்பிடுதலுக்குப் பிறகும் பயன்படுத்தப்படும் அரிய வார்த்தைகள். சராசரி மனிதர்களே இவ்வார்த்தைகளை நீண்ட சிந்தனைக்குப்பின் காரணகாரியத்தோடு பயன்படுத்தும்போது, ஆவியானவரின் துணையோடு எழுதின பேதுரு அப்போஸ்தலன் பொருள் தெரியாமல் இவ்வார்த்தைகளைப் பயன்படுத்தியிருமாட்டார்.

இந்த இரண்டாம் நிருபம் எழுதப்பட்ட நாட்களில், கிறிஸ்தவம் ஒரு கடும் தாக்குதலுக்குள்ளான நிலையிலிருந்தது. மனிதன் தனது அறிவின் மிகுதியால், தத்துவங்களை தனக்குத்தானே ஏற்படுத்தி, அவைகளின் அடிப்படையில் மார்க்க சித்தாந்தங்களை வகுத்துக் கொண்டான். " மார்க்க காரியங்கள் " என்ற போர்வையின் மறைவில்,

மனிதனின் உள் உணர்வுகளுக்கும், சரீர உணர்ச்சிகளுக்கும் தீனிபோடக் கூடிய கொள்கைகள் பரப்பப்பட்டது. சாரமில்லாத அக்கொள்கைகளைக் கொண்டு, சற்றும் சாத்தியமில்லாத வாக்குத்தத்தங்களும் வாரி வழங்கப்பட்டது.

இப்படிப்பட்ட ஓர் அவலச் சூழலில் தான் பேதுரு தனது இரண்டாம் நிருபத்தை எழுதினார். அதில் தான் நம்முடைய சிந்தனைக்கான வார்த்தைகள் வடிக்கப்பட்டுள்ளது. இதில், மனிதனின் அறிவு குறைவானது என்றும், அவை கொடுக்கும் வாக்குத்தத்தங்கள் பொய்யானது என்றும் காட்ட முற்படுகிறார். நாளை என்ன நடக்குமென்று தெரியாத மனிதன், தனது சூது மதியால் கொடுக்கும் வாக்குத்தத்தங்கள் முக்காலங்களையும் அறிந்த, அநந்த ஞானமுள்ள தேவனுடைய வாக்குத்தத்தங்களோடு ஒப்பிடுவதற்கு லாயக்கற்றவைகள் என்று திடமாக வாதிடுகிறார். ஒருவேளை, ஒப்பிட விரும்பினால், அவைகளைக் காட்டிலும் தேவனுடைய வாக்குத்தத்தங்கள், மகாமேன்மையும், அருமையுமானது என்று மிகத் தெளிவாக, ஆணித்தரமாக எடுத்துக் கூறுகிறார்.

பேதுரு அப்போஸ்தலன் அப்படிச் சொல்வதற்குப் பலமான காரணங்கள் பல உண்டு. அவைகளில் சிலவற்றை இங்கே காண்போம்.

### I இரட்சிப்பின் நம்பிக்கை

மனிதன் தேவனிடத்திலிருந்து பெற்றுக் கொண்ட மிகச் சிறப்பான ஈவுகளில் தலையாயது இரட்சிப்பு தான். மனிதன் படைக்கப்பட்ட பொழுது செம்மையானவனாகவே படைக்கப்பட்டான். அவன் தேவசாயலிலே படைக்கப்பட்டான் என்றே வசனம் கூறுகிறது. (ஆதி. 1:26). அதாவது, பாவம் இல்லாத ஒரு நிலையோடு. ஆனால், பாவத்தினால் ஏற்பட்ட வீழ்ச்சிக்குப்பின் அவன் பாடு பரிதாபமான ஒன்றாக மாறியது. தேவனோடு இருந்தவன், தேவனற்றவனாகவும், முற்றிலும் இழந்து போனவனாகவும் காணப்பட்டான். இனி மீட்பு என்பதே சாத்தியமில்லாத ஒன்று எனக் கருதப்பட்டது. தேவனுக்கும், மனிதனுக்கும் ஒரு போதும் ஒட்டும் இல்லை, உறவும் இல்லை என்றே தீர்மானிக்கப்பட்டது.

இச்சமயத்தில் தான், பாவியான மனிதனுக்கு இரட்சிப்பைக் கொடுக்கும் ஓர் அற்புதத் திட்டம் தேவனால் வெளிப்படுத்தப்பட்டது. இது குறித்து அப்போஸ்தலன் பவுல் தீத்துவுக்கு எழுதும் போது இப்படியாகக் குறிப்பிடுகிறார். “ ஏனெனில், எல்லா மனுஷருக்கும் இரட்சிப்பை அளிக்கத்தக்க தேவ கிருபையானது பிரசன்னமாகி...” என்று. (தீத். 2:11). மனிதனுக்காகத் தீட்டப்பட்ட இந்தத் திட்டம் மிகவும் ஆச்சரியமான ஒன்றாக இருந்தது என்பதற்கு ஆதாரமாக பேதுருவின் வேறொரு



வசனத்தை நாம் குறிப்பிட முடியும். ஆம், தேவ கிருபையால் கிடைத்த இரட்சிப்பின் நற்செய்தியை உற்றுப்பார்க்க தேவ தூதரும் ஆசையாயிருக்கிறார்கள் என்று (1 பேது. 1:10-12).

அப்படியானால், அருமையானவர்களே மகாமேன்மையும், அருமையுமான வாக்குத்தத்தமாகிய இரட்சிப்பின் நம்பிக்கையை நீங்கள் பெற்று விட்டீர்களா?

### II உங்களுடனே கூட இருக்கிறேன்

அவர் கொடுக்கும் இரட்சிப்பின் வாக்கை நம்பி ஏற்றுக் கொள்கிறவர்களுக்குக் கொடுக்கப்படும் அடுத்த வாக்குத்தத்தம், “ நான் உங்களுடனே கூட இருக்கிறேன் ” என்பது.

நமதாண்டவராகிய இயேசு கிறிஸ்து, இப்பூவுலகில் நன்மை செய்கிறவராய்ச் சுற்றித் திரிந்து ஊழியம் செய்த நாட்களில், வாக்குத்தத்தமாகக் கொடுத்த ஒரு வசனத்தை உங்களுக்கு நினைப்பூட்டுகிறேன். ஏனெனில், இரண்டு பேராவது, மூன்று பேராவது என் நாமத்தினாலே எங்கே கூடியிருக்கிறார்களோ அங்கே அவர்கள் நடுவிலே இருக்கிறேன் என்றார் (மத். 18:20). மீண்டும், மரித்து உயிர்த்தபின், தன்னுடைய சீடர்களுக்கு பிரதான கட்டளையைக் கொடுத்துவிட்டு, அத்தோடு ஒரு வாக்குத்தத்தையும் சேர்த்துக் கொடுத்தார். “ நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள். இதோ உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனே கூட இருக்கிறேன் ” என்று (மத். 28:20).

மேற்சொன்ன இரண்டு வசனங்களையும் நாம் ஊன்றிக் கவனித்தால், இவ்வாக்குத்தத்தத்தில் அடங்கியுள்ள ஓர் உண்மை புலப்படும். அங்கே இருப்பேன் என்று கூடச் சொல்லாமல், “ இருக்கிறேன் ” என்றே கூறுகிறார். எவ்வளவு அருமையான வாக்குத்தத்தம் பார்த்தீர்களா?.

### III கிறிஸ்துவின் சபை நிலைத்து நிற்கும்

“ இரட்சிக்கப்படுகிறவர்களைக் கர்த்தர் அனுதினமும் சபையிலே சேர்த்துக் கொண்டு வந்தார் ” என்று அப்போஸ்தலர் நடபடிகளில் காண்கிறோம் (அப். 2:47).

புதிய ஏற்பாடு, சபை பற்றிச் சொல்லும் போதெல்லாம் ஒருமையிலே தான் சொல்கிறது. அப்படியானால், “சபை” என்பது வேத வசனங்களின்படி ஒன்றே ஒன்று தான். அந்த “ஒரு சபையிலே” தான் இரட்சிக்கப்படுகிறவர்களைக் கர்த்தர் அனுதினமும் சேர்த்துக்கொண்டு வந்தார். அந்த ஒரு சபையை அடையாளம் கண்டு கொள்ள முடியாமல்

கிறிஸ்தவ சமுதாயம் தடுமாறிக் கொண்டுள்ளது. ஐந்து குருடர்கள்
யானையின் ஒவ்வொரு உறுப்பைத் தொட்டுப் பார்த்துவிட்டு, ஒட்டு
மொத்த யானையே அந்த உறுப்பைப் போன்றுதான் இருக்கிறது என்று
சாதித்ததைப் போல சாதித்துக் கொண்டுள்ளது. இப்படிப்பட்ட வேத
புரட்டர்களைக் குறித்து பவுல் அப்போஸ்தலன் தீமோத்தேயுவுக்கு
எப்படி எழுதுகிறார் பாருங்கள். "....தாங்கள் சொல்லுகிறது இன்னதென்
றும், சாதிக்கிறது இன்னதென்றும் அறியாதிருந்தும், நியாயப்பிரமாணப்
போதகராயிருக்க விரும்புகிறார்கள் " என்று ( 1 தீமோத். 1:7).

புதிய ஏற்பாட்டில் "சபை" என்ற வார்த்தை, முதன் முதலாக மத்
16:18ல் இடம் பெற்றுள்ளது. அங்கே, இயேசு கிறிஸ்து வாக்குக்
கொடுத்தபோது, "..... என் சபையைக் கட்டுவேன்", பாதாளத்தின் வாசல்
கள் அதை மேற்கொள்வது இல்லை என்றே சொன்னார். "என் சபை
களை " என்று அவர் சொல்லவேயில்லை. கிறிஸ்து, என் சபை என்று
சொல்லும் போது, அதைக் " கிறிஸ்துவின் சபை " என்றழைப்பது தானே
நியாயமானது. அது மாத்திரமல்லாமல், கிறிஸ்து தான் சபைக்காக
இரத்தம் சிந்தினார் (அப். 20:28) அவர்தான் இரட்சிக்கப்படுகிறவர்
களை சபையிலே சேர்க்கிறார் (அப். 2:47) மேலும், அவர்தான் சபைக்கு
தலைவராயிருக்கிறார் (எபே. 5:23). இன்னும், கிறிஸ்து மறுபடியும்
வருவதே சபைக்காகத்தான் (எபே. 5:27). கிறிஸ்துவுக்கும், சபைக்கும்
இவ்வளவு தொடர்பு இருக்கும் போது, சபையை அவர் பெயரில்
அழைப்பதற்கு என்ன கஷ்டம்?

கிறிஸ்துவின் சபையாகிய இராஜ்யம் அசைக்கப்பட முடியாதது
என்பதை எபிரெய ஆசிரியர் எப்படி எழுதுகிறார் பாருங்கள். " ஆதலால்
அசைவில்லாத இராஜ்யத்தைப் பெறுகிறவர்களாகிய நாம் பயத்தோ
டும், பக்தியோடும் தேவனுக்குப் பிரியமாய் ஆராதனை செய்யும்படி
கிருபையைப் பற்றிக் கொள்ளக்கடவோம் ". (எபி. 12:28) என்கிறார்.

நீங்கள் எப்படிப்பட்ட ஒரு சபையில் அங்கம் வகிக்கிறீர்கள்?
நிலைத்திருக்கக் கூடிய ஒன்றா? அசைக்கப்பட முடியாததா? அல்லது
கொஞ்ச காலம் இருந்து பின்பு காணாமலே போகக் கூடிய ஒன்றா?
உங்கள் நிலையைக் கொஞ்சம் சீர்தூக்கிப் பாருங்கள்.

## எச்சரிக்கையாயிருங்கள்

- ஒருவனும் உங்களை வஞ்சியாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள் (மாற். 13:5).
- பொருளாசையை குறித்து எச்சரிக்கையாயிருங்கள் (லூக். 12:15).
- உன்னிலுள்ள வெளிச்சம் இருளாகாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள் (லூக். 11:35).
- பொல்லாத வேலையாட்களுக்கு எச்சரிக்கையாயிருங்கள் (பிலி. 3:2)



# உள்ளடக்கம்


சிறப்பு ஆசிரியர் உரை ..... 11

**தேவன்**

நம் மீதான நம் தேவனுடைய அன்பு ..... 14
எளிமையாக்குதல் ..... 18
இயேசு, ஒரு தலைசிறந்த போதகர் ..... 21

**சாட்சியங்கள்**

நீங்கள் விசுவாசிக்கும்படி ..... 24
கிறிஸ்தவம் : எல்லா கலாச்சாரங்களுமான சுவிசேஷம் ..... 26

**தேவனுடைய வார்த்தை**

புத்தகத்தைக் கண்டுபிடித்தல் ..... 30
வேதாகமத்தின் நேர்மை ..... 32
வேதாகமம் தேசத்தின் நம்பிக்கை ..... 34

**வாழ்வதற்கான உபதேசங்கள்**

கர்த்தருக்குள் ஐக்கியம் ..... 36
திரைச்சீலையைத் திறத்தல் ..... 38

**இரட்சிப்பு**

கிறிஸ்துவுக்குள்ளான இரட்சிப்பு அவருடைய சபைக்குள்ளான இரட்சிப்பாயிருக்கிறது ..... 41
சிலர் சுவிசேஷத்திற்கு கீழ்ப்படியாததற்கான காரணங்கள் ..... 43

**சபை**

நாம் தான் சபை .... 46
சபை முக்கியமானது .... 48

**அனுதின கிறிஸ்தவ ஜீவியம்**

வியாபார உலகில் நேர்மை .... 50
புத்தி சொல்லுதல் .... 53
ஒருவனுக்கும் கடன்படாதிருங்கள் .... 55
வாலிபனே, தேவனிடத்தில் திரும்பு! .... 57

**ஆராதனை**

புதிய ஏற்பாட்டில் குறிப்பிடப்பட்டிருக்கும் நான்கு வகையான ஆராதனைகள் .... 61
மெய்யான ஆராதனை .... 64

**கிறிஸ்தவ இல்லம்**

பெற்றோர்களைப் பராமரித்தல் .... 66
தகப்பனைக் கனம் பண்ணுதல் என்பதன் உட்பொருள் என்ன .... 68
தகப்பன்மார்களே : உங்கள் வீட்டில் அவர்கள் என்னத்தைப் பார்த்தார்கள்?.. 70
நாம் உள்ளே அனுமதித்த அந்நியன்... 73

**செயலில் கிறிஸ்தவம்**

தனி நபர் ஊழியம் .... 76

அனுப்புகிற தேவன் .... 80

ஊழியப் பணியில் ஒரு கிறிஸ்தவப் பெண்ணின் பங்கு .... 82

சிறையில் இருப்பவர்களுக்கும் சுவிசேஷம் தேவை .... 86

குடும்பத்தில் தம்பதியினிடம் எழும்பும் பிரச்சனைகளுக்கு வேதாகமத்தின் பதில் .... 89

ஒரே இருதயமும், ஒரே மனமும் .... 93

**வேதாகம கதாப்பாத்திரங்கள்**

முதல் மனிதனாகிய, ஆதாம் .... 97

ஊசாவிடமிருந்து மூன்று பாடங்கள் .... 100

அசுத்த ஆவிகளிடமிருந்து விடுபட்ட நன்றியுள்ள மரியாள் .... 102

பிரிந்து சென்ற தேமா .... 105

**பிரசங்கக் குறிப்புகள்**

கிறிஸ்துவின் இரண்டாம் வருகை .... 107

ஒருவர் எப்போது இரட்சிக்கப்படுகிறார்? .... 108

தேவனைப் பிரியப்படுத்தும் சபை .... 111



**சத்தியம்**

★ சத்தியத்தைக் கைக்கொள் (எபே. 4:25)

★ சத்தியத்தில் நட (III யோவான் 3,4)

★ சத்தியத்தைப் பேசு (அப். 26:25)

★ சத்தியத்தோடு ஆராதனை செய் (யோவான் 4:23,24)

★ சத்தியத்தை அறிந்து கொள் (I தீமோத். 2,4)

★ சத்தியத்தைப் பகுத்து போதி (II தீமோத். 2,15)

★ சத்தியத்திற்குக் கீழ்ப்படி (I பேதுரு 1:22)

★ சத்தியத்தில் உறுதிப்படு (II பேதுரு)

நம்முடைய நித்தியத்தைத் தீர்மானிக்கும் இச்சத்தியத்திற்கு நம்முடைய வாழ்க்கையில் நாம் எந்தளவு முக்கியத்துவம் தருகிறோம்?

**சிறப்பு ஆசிரியர் உரை**

# நானும் என் வீட்டாருமோவென்றால்

## "...But As For Me And My House..."

*Byron Nichols*

**நி**ச்சயமாகவே நாமனைவரும் கடந்த காலங்களில் உலகின் புகழ் பெற்ற தலைவர்களின் தலைசிறந்த பேச்சுக்களாலே கவரப்பட்டிருப் போம். அவைகளில் பேட்ரிக் ஹென்றியின், " எனக்கு விடுதலையைத் தாருங்கள் அல்லது எனக்கு மரணத்தைத் தாருங்கள் ", வின்ஸ்டன் சர்ச்சிலின், " என்னிடம் இரத்தம், வியர்வை மற்றும் கண்ணீரைத் தவிர தருவதற்கு ஒன்றுமில்லை ", இன்னும், ஹென்றி க்ளேயின், " நான் ஜனாதிபதியாக இருப்பதை விட சரியானவனாக இருப்பதையே விரும்புகிறேன் " போன்றவைகள் பிரசித்தி பெற்றவைகள். சிந்தையைத் தூண்டக்கூடிய அர்ப்பணிப்புடன் கூடிய இப்படிப்பட்ட பேச்சுக்கள் தோல்வியைத் தவிர்த்து வெற்றியை எட்டிப்பிடிக்க உதவியிருக்கிறது.

அர்ப்பணிப்பும், தைரியமும் நிறைந்த இந்த அறிவிப்புகளெல்லாம் அன்றும் மகத்தானவைகளாக இருந்தன, இன்றும் மகத்தானவைகளாகத் தான் இருக்கின்றன. ஆனாலும், அவைகள் வேதாகமத்தில் இடம் பெற்றிருக்கிறவைகளின் அளவுக்கு முக்கியமானவைகளல்ல. மாபெரும் தேவ மனிதனாகிய யோசுவா தான் மரிப்பதற்கு முன்பாக தேவனுடைய ஜனங்களிடத்தில் பேசிய அந்த வார்த்தைகளைப் போல ஊக்கமளிக்கக் கூடிய வார்த்தைகளை வேறெங்கும் கண்டுபிடிப்பது கடினம். யோசுவா இருபத்திநான்காம் அதிகாரத்தில் இஸ்ரவேலர்களின் உண்மையுள்ள தலைவனாகிய யோசுவா தேவன் அவர்களுக்கும், அவர்களுடைய முற்பிதாக்களுக்கும் செய்தவைகளையெல்லாம் நினைப்பூட்டுகிறார். மேலும், யோசுவா அவர்களிடம் தொடர்ந்து பேசுகையில், அவர்கள் ஒரு மாபெரும் தீர்மானத்தை எடுக்க வேண்டும் என்று நெருக்கினார்; உங்கள் பிதாக்கள் சேவித்த அந்நிய தேவர்களை சேவிக்கப் போகிறீர்களோ, அல்லது உங்களை விடுவித்து உங்களை அன்பாக போஷித்து வருகிற தேவனை உண்மையாக சேவிக்கிப் போகிறீர்களோ? என்று கேட்டு, அதன் பிறகு 15 ஆம் வசனத்தின் கடைசிப் பகுதியில்,

யோசுவா, வைராக்கியம், ஒப்புக் கொடுத்தல், தீர்மானம் ஆகியவைகளை உள்ளடக்கிய, "...நானும் என் வீட்டாரு மோவென்றால் கர்த்தரையே சேவிப்போம்" என்ற ஒரு மகத்தான பிரகடனத்தை வெளிப்படுத்தினார்.

யோசுவாவுக்கு தேவன் மீதும், தன்னுடைய இஸ்ரவேல் சகோதரர்கள் மீதும், அவர்களுடைய குடும்பத்தின் மீதும் அளவற்ற அன்பு இருந்தபடியால்தான் இப்படிப்பட்ட குறிப்பிடத்தக்க அறிவிப்பை வெளிப்படுத்த முடிந்தது. யோசுவாவின் வார்த்தைகள் தேவன் தனக்கும், தான் நேசிக்கிற யாவருக்கும் செய்த எல்லாவற்றுக்காகவும் நன்றியை வெளிப்படுத்துவதாகவே இருந்தது. அங்கே, யோசுவா புரிந்து கொண்டதை நாமும் புரிந்து கொண்டால், நிச்சயமாகவே நம்மில் அநேகர் அவரோடு சேர்ந்து அதே வார்த்தைகளை சொல்வோம். தேவன் நமக்குச் செய்திருக்கிற, செய்து கொண்டிருக்கிற எல்லா வற்றையும் முழுமையாகப் புரிந்து கொண்டாலும் கூட நம்மில் சிலர் தேவனை விட்டு வெகுதூரம் விலகிச் சென்று விடுகிறோம்.

நமக்காக ஒன்றைச் செய்யும்படியாகத் தீர்மானிப்பது ஒரு வகை. அதே நேரத்தில் மற்றவர்களுக்காக ஒன்றைச் செய்வேன் என்று தீர்மானிப்பது இன்னொரு வகை. யோசுவாவால், "*நானும் என் வீட்டாருமோவென்றால்*" என்று தன் குடும்பத்திற்காக எப்படிப் பேச முடிந்தது? தன்னுடைய குடும்பத்தாரும் தன்னைப் போலவே அர்ப்பணிப்புடன் உண்மையாகவே கர்த்தருக்கு ஊழியம் செய்வார்கள், அந்தவிதமாக அவர்களை வழி நடத்தும் வல்லமை தனக்கிருக்கிறது என்பதை அவன் கண்டபடியால் தான் இவ்விதமாகப் பேச முடிந்தது. அவனுடைய குடும்பத்தார் தங்கள் விருப்பப்படி செய்ய அவர்களுக்கு முழு சுதந்திரம் இருந்தது; அவர்கள் தேவனை சேவிக்காமல் இருப்பதைத் தெரிந்து கொண்டால் அவர்களும் தங்களைச் சுற்றிலும் இருந்த அந்நிய தேவர்களைச் சேவிப்பவர்கள் போல ஆகியிருப்பார்கள், ஆனால், தனக்கு தேவன் மீதிருந்த மிகுந்த அன்பு மற்றும் தேவனிடத்தில் தனக்கிருந்த நன்றியுணர்வு போன்றவைகளை தன்னுடைய குடும்பத் தாரும் பகிர்ந்து கொள்ளும்படி அவர்களை வழி நடத்துவதால் அவ்விதமாக நடக்காது என்பதை அறிந்திருந்தான்.

அநேக கணவன்மார்களும், தகப்பன்மார்களும் யோசுவாவின் மாதிரியைப் பின்பற்றுவது அவசியமாயிருக்கிறது. எண்ணற்ற குடும்பங் கள், குறிப்பாக கிறிஸ்தவ குடும்பங்கள் கூட ஆவிக்குரிய பிரகாரமாக



பழுது பார்க்கப்பட வேண்டிய நிலையில் உள்ளன. தேவன் கணவன்மார் களுக்கும், தகப்பன்மார்களுக்கும் இந்தக் காரியங்களில் முக்கியப் பொறுப்புகளைக் கொடுத்திருக்கிறார், இது தெளிவாக எபேசியர் 5:22-6:4 வசனங்களில் கொடுக்கப்பட்டிருக்கிறது.

இன்றைய நிலையில், எவ்வித பயமுமில்லாமல் யோசுவா போல தீர்மானம் எடுத்து, அதை எதிரொலிக்கக் கூடிய மூப்பர்களும், பிரசங்கிகளும் அதிகதிகமாகத் தேவைப்படுகிறார்கள். மத சம்மந்தமான கூட்டமாக இருந்தாலும் சரி அல்லது வேறெந்த ஒரு கூட்டமாக இருந்தாலும் சரி சிறந்த தலைமைத்துவம் இல்லையென்றால் பெரிய அளவில் வெற்றி பெற முடியாது என்பது ஓர் அடிப்படை உண்மை யாகும். கர்த்த ருடைய சபையில், யோசுவாவின் தீர்மானத்தைப் பிரதி பலிக்கிற, எதிர்ப்புகளைப் பற்றிக் கவலைப்படாத, சபைக்குள்ளிருந்து எதிர்ப்புகள் வந்தால் கூட அது பற்றி அச்சப்படாத மனிதர்கள் தலைவர் களாக இருப்பது அவசியம். தேவனுடைய ஜனங்கள் தேவனுக்கு விசுவாசமாக சேவை செய்வதை சாத்தான் ஒருபோதும் சுலபமாக்க மாட்டான். சில வேளைகளில், அவன் தேவனுடைய ஜனங்களைக் கொண்டே சபையில் அநேகரை வழி தப்பிப் போகும்படி செய்வான். இது வேதாகமக் கால கட்டத்தில் உண்மையாயிருந்திருக்கிறது. அதன் விளைவாக, முன்பு எப்போதையும் விட, *அப். 20:28-31; தீமோ. 3:45; தீத்து. 1:9-16* ஆகிய வசனங்களில் உள்ளபடி அன்பாகவும், தைரியமாகவும் வழி நடத்தக்கூடிய மூப்பர்கள் அவசியப்படுகிறார்கள். அதுபோல், பிரசங்கிமார்களும் கூட II தீமோத்தேயு 4:1-5 மற்றும் தீத்து 2:1 வசனங் களுக்கேற்ப அந்த வசனங்களின் போதனைகளுக்கேற்ப உண்மையாக வாழும்படி அழைக்கப்பட்டிருக்கிறார்கள்.

நியாயத்தீர்ப்பு நாளில் நாம் ஒவ்வொருவரும் கர்த்தருக்கு முன்பாக நிற்கும்படியாக அழைக்கப்படுவோம் என்பதை அறிந்து விசுவாசமும், உண்மையுமுள்ள ஊழியக்காரனாகிய யோசுவாவைப் போல அர்ப்பணிப்புடன் வாழ வேண்டும். எங்கும் வாழும் தேவனு டைய பிள்ளைகள் ஒவ்வொருவரும் அவரிடத்தில் அன்பு கூர்ந்து, இப்பூமியெங்கும் அவருடைய பணி விரிவடையும்படி அர்ப்பணிப் புடன் செயல்படுவது அவசியமாயிருக்கிறது. இதற்காக தேவன் நம்மை சார்ந்திருக்கத்தக்கதான அளவில் நாம் அதில் நிச்சயமாயிருப் போம்.

தேவன்

# நம் மீதான நம் தேவனுடைய அன்பு

## Our God's Love for US

O.P. Baird

*" **தேவன்** தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார் " (யோவா 3:16).*

தேவனுடைய குமாரனாகிய இயேசு, ஜனங்களுடைய பாவங்களை மன்னிக்கும்படியாகவும், அவர்களுக்கு நித்திய ஜீவனை அளிக்கும்படியாகவும் வந்தார். அப்படிச் செய்யும்படி நமக்காக பலியாக சிலுவையில் மரிக்க வேண்டியதாயிருந்தது. நமக்காக இயேசு சகித்த பாடுகளை நினைக்கும் போது, நம் மீதான தேவனுடைய அன்பு எவ்வளவு பெரியது என்பதை நம்மால் புரிந்து கொள்ள ஆரம்பிக்க முடியும்.

சிலுவையில் அறையப்பட்டு மரித்தவர்கள் பட்டபாடுகளை நம்மால் கற்பனை செய்து பார்ப்பது கூட கடினமாகும். சிலுவையில் அறையப்பட்ட குற்றவாளிகள் தாங்கள் சிலுவையில் அறையப்பட்டபோது, கூச்சலிட்டு அலறி சிலுவையில் அறைந்தவர்களை சபித்தார்கள். ஆனால், இயேசுவோ முற்றிலும் வேறுபட்டவராக இருந்தார். ஆம், இயேசு அந்த மாபெரும் வேதனையை பொறுமையுடன் சகித்தார். இயேசு வலியால் கதறியபோது அது பகைமை மற்றும் கோபத்தின் கதறுதலாக இல்லை. மாறாக, அது அன்பின் கூக்குரலாயிருந்தது. அவர் பரலோகத்திலிருக்கிற பிதாவைப் பார்த்து கூக்குரலிட்டு இவ்விதமாகச் சொன்னார். " *பிதாவே, இவர்களுக்கு மன்னியும், தாங்கள் செய்கிறது இன்ன தென்று அறியாதிருக்கிறார்களே* " *என்று (லூக். 23:34).*

இவ்விதமான அன்பை தம்மை வெறுத்த, மரண பரியந்தம் வேதனைப்படுத்திய சத்துருக்களிடத்தில் இயேசுவால் எப்படிக் காட்ட முடிந்தது? அவர் பாவிகளை இரட்சிக்கும்படி வந்ததால் தான் அது முடிந்தது. அது தெய்வீக அன்பின் செயலாக இருந்தது (யோவா. 3:16). பாவிகளை இரட்சிக்கும்படி அவர்களுக்காக மரிக்க வேண்டும் என்பதை இயேசு அறிந்திருந்தார். அவர்கள் மீது அவர் கொண்டிருந்த அன்பு அவர் முழுமனதோடு அப்படிச் செய்யக் காரணமாயிருந்தது. அவர்கள் அவரை மிக மோசமான, பயங்கரமான முறையில் நடத்திய போதும் கூட, அவர்கள் மீது கொண்டிருந்த அந்த அன்பை அவர் விட்டு விடவில்லை. இதை நாம் நினைவு கூரும் போது, அவர் நம்மீது கொண்டிருக்கும் பூரண அன்பை நம்மால் சந்தேகிக்க முடியாது.

எல்லோரும் சத்தியத்தை அறிந்து, மனந்திரும்பி, இரட்சிக்கப்படவேண்டுமென்பதற்காகத் தான் தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை மரிப்பதற்காக அனுப்பி வைத்தார். " *நம்முடைய இரட்சகராகிய தேவனுக்கு முன்பாக அது நன்மையும், பிரியமுமாயிருக்கிறது. எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும், சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும், அவர் சித்தமுள்ளவராயிருக்கிறார்* " .(I தீமோ. 2:34). "*தாமதிக்கிறார் என்று சிலர் எண்ணுகிறபடி, கர்த்தர் தமது வாக்குத்தத்தைக் குறித்துத் தாமதமாயிராமல்; ஒருவரும் கெட்டுப் போகாமல் எல்லாரும் மனந்திரும்பவேண்டுமென்று விரும்பி, நம்மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார்* ". (II பேதுரு 3:9).

இப்போது, தேவனுடைய அன்பை மனதில் கொண்டவர்களாக, இந்த மிக முக்கியமான கேள்வியை ஜாக்கிரதையாக சிந்திப்போம். " யார் தேவனை உண்மையாக நேசிக்கிறார்கள்?" இது மிக முக்கியமான கேள்வி. ஏனென்றால், தேவனுடைய ஆசீர்வாதங்களெல்லாம் அவரிடத்தில் அன்பு கூருகிறவர்களுக்குத்தான் கிடைக்கும்.

இயேசு, பிதாவாகிய தேவனை நமக்குக் காட்டினார். மேலும், அவர், "*என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டான்*" என்று சொன்னார் (யோவா. 14:9). வேதாகமம் இயேசுவைப் பற்றிச் சொல்வதை நாம் கற்றுக் கொள்ளும் போது, நாம் அவரைக் காண்கிறோம். அது நாம் அவரையும், பிதாவையும் நேசிக்கும்படி செய்கிறது. தேவனை நேசிப்பது என்பது ஆழமான பாச உணர்வை

உள்ளடக்கும். ஆனால், அது அப்படிப்பட்ட உணர்வுகளை விட மேலானது. தேவனிடத்தில் அன்பு கூருகிறவன் யார் என்பதை இங்கே இயேசுவே சொல்லட்டும். *"என் கற்பனை களைப் பெற்றுக் கொண்டு அவைகளைக் கைக் கொள்ளுகிறவனே என்னிடத்தில் அன்பாயிருக்கிறான். என் பிதாவுக்கு அன்பாயிருப்பான்; நானும் அவனில் அன்பாயிருந்து அவனுக்கு என்னை வெளிப் படுத்துவேன்"* என்றார், *"ஒருவன் என்மேல் அன்பாயிருந்தால் அவன் என் வசனத்தைக் கைக்கொள்ளுவான் அவனில் என் பிதா அன்பாயிருப்பார்; என்னில் அன்பாயிராதவன் என் வசனங்களை கைகொள்ளமாட்டான், நீங்கள் கேட்கிற வசனம் என்னுடையதாயிராமல் என்னை அனுப்பின பிதாவினுடையதாயிருக்கிறது"* (யோவா 14:21, 23,24). *"நாம் தேவனுடைய கற்பனைகளைக் கைக் கொள்வதே அவரிடத்தில் அன்பு கூருவதாம்"* என்று அப்போஸ்தலனாகிய யோவான் சொல்கிறார் (1 யோவா 5:3).

நமக்குள்ளிருக்கும் தேவ அன்பு நாம் பாவத்தை நேசிப்பதை விட்டு விட்டு நீதியின் மீது கொள்ளும் அன்பால் நம்மை நிரப்புகிறது. கிறிஸ்துவின் ஆவி அன்பின் ஆவியாயிருக்கிறது. *"....கிறிஸ்துவின் ஆவியில்லாதவன் அவருடையவனல்ல"* (ரோமர் 8:9). தேவ ஆவி அல்லது கிறிஸ்துவின் ஆவி தான் பரிசுத்த ஆவி. இருதயத்திலிருக்கும் ஆவி தேவ அன்பால் இருதயத்தை நிரப்பும்; *"மேலும், நமக்கு அருளப்பட்ட பரிசுத்த ஆவியினாலே தேவ அன்பு நம்முடைய இருதயங்களில் ஊற்றப்பட்டிருக்கிறபடியால், அந்த நம்பிக்கை நம்மை வெட்கப்படுத்தாது"* (ரோம 5:5).

தேவனுடைய அன்பால் நம் இருதயங்கள் நிரப்பப்படும் பொழுது ஒரு கிறிஸ்தவன் எவ்விதமாக இருக்க வேண்டுமென்பதை நம்மால் புரிந்து கொள்ளமுடியும். நமக்குள் இருக்கும் தேவ அன்பு நாம் மற்றவர்களை நேசிக்க வைக்கும். அது நம்மை சத்துருக்களை சிநேகிக்க வைத்து இயேசு எப்படி தம்மை சிலுவையிலறைந்தவர்கள் மன்னிக்கப்பட வேண்டுமென்று விரும்பினாரோ அது போல நம் சத்துருக்களும் மன்னிக்கப்பட வேண்டுமென்கிற ஆசையை நமக்குள் ஏற்படுத்தும்.

நாம் தேவனில் அன்பு கூரும்படி தேவனுடைய அன்புக்கு நம் இருதயங்களைத் திறப்போம். அப்போது, நாம் நம் பாவங்களிலிருந்து மனந்திரும்பி, வேதாகமத்திலிருந்து தேவனுடைய சத்தியத்தை தொடர்ந்து கற்றுக் கொண்டு, அவருடைய கற்பனைகளுக்குக் கீழ்ப்படிவோம்.



# ஓர் உயிருள்ள விசுவாசம்

***Hebert A. White***

நனவாகாத கனவுகள் பல கண்டேன்
விடியலுக்கு முன் அவைகள் மறைந்து போவதையும் நான் கண்டேன்,
ஆனால், போதுமான அளவுக்கு நான் கனாக்களை உணர்ந்திருக்கிறேன்
நான் தொடர்ந்து கனாக்காணும்படி என்னை ஆக்கியதால் தேவனுக்கு நன்றி செலுத்துகிறேன்.

பதில்கள் இல்லாத நிலையிலும் அநேக ஜெபங்கள் செய்தேன்
என் ஜெபங்களுக்கு பொறுமையோடே நான் நீண்ட நாட்கள் காத்திருந்தேன்; ஆயினும் போதுமான பதில்கள் கிடைத்தன.
அது என்னை மேலும் ஜெபம் செய்ய ஏவுகிறது

நான் பல நண்பர்களிடத்தில் வைத்த நம்பிக்கை தோற்றுப்போனது
அவர்கள் என்னை தனியே அழும்படி விட்டுச் சென்றார்கள்
ஆனால், நான் தொடர்ந்து நம்பும்படி
போதுமான அளவில் உண்மையான நண்பர்களைக் கண்டுபிடித்தேன்.

நான் விதைத்த அநேக விதைகள் வழியருகே விழுந்தன
அவைகளை பறவைகள் தின்று போட்டது
ஆனால், நான் தொடர்ந்து விதைக்கும்படி என்கைகளில்
போதுமான தங்கக் கதிர்களைப் பிடித்தேன்


நான் பாத்திரத்திலிருந்து ஏமாற்றத்தையும், வேதனையையும் குடித்தேன்
பாடல்கள் இல்லாமல் அநேக நாட்களைக் கழித்தேன்
ஆனால் நான் தொடர்ந்து வாழும்படி
வாழ்வின் அமுதத்தைப் பருகினேன்.

தேவன்

# எளிமையாக்குதல்

## Simplifying

*Jeril (Polly) Cline*



அது ஒரு கடினமான நாளாக இருந்தது. அவர் பசியாக இருந்தார். ஆனால், அவரால் சாப்பிட முடியவில்லை (மத். 21:18,19). அவர் தேவாலயத்தில் பிரவேசித்தபோது அவருடைய அதிகாரத்திற்கு சவால் விடப்பட்டிருந்தது (மத். 21:23). அதன் பின்பு, பிரதான ஆசாரியர்களும், பரிசேயர்களும் அவரைப் பிடிக்க வகைதேடினார்கள். ஆனால், ஜனங்களுக்குப் பயந்திருந்தார்கள் (மத். 21:45, 46). ஆகவே, அவர்கள் தங்கள் முந்தைய சத்துருக்களோடு சேர்ந்து, அதாவது எரோதியர்களோடு சேர்ந்து இயேசுவை சிக்க வைக்கும்படி சிக்கலான கேள்வி கேட்பதைத் தெரிந்து கொண்டார்கள். *"இராயனுக்கு வரிக்கொடுக்கிறது நியாயமோ, அல்லவோ? அதை எங்களுக்குச் சொல்லும் என்று கேட்டார்கள்"* (மத். 22:17) இந்த கேள்வி உணர்வுகளைத் தூண்டும் வகையில் அமைந்ததால் அவருடைய பதில் என்னவாக இருந்தாலும் அது பகைமை உணர்வையும், சண்டையையும் நிச்சயமாக ஏற்படுத்தக் கூடியதாக இருந்தது.

அந்நாட்களில் தேசிய இயக்கம் ஒன்றிருந்தது. அது ராயனுக்கு ஒருவர் வரிக் கொடுத்தால் அவனுடைய ராஜரீக அதிகாரத்தை ஏற்றுக் கொண்டு, யெகோவா மட்டுமே இஸ்ரவேலின் ராஜா என்பதை மறுக்கிறார் என்று சொன்னது. எனவே, இயேசு "ஆம்" என்று பதிலளித்தால் ஜனங்களின் உணர்வுகளுக்கு அதிர்ச்சியளிப்பது மட்டுமல்ல, இஸ்ரவேலின் மேசியா இவராக இருக்க முடியுமா என்கிற சந்தேகத்தை ஜனங்கள்



மத்தியில் ஏற்படுத்திவிடும். அதே நேரத்தில், "இல்லை" என்று பதிலளித்தால், இந்த பதிலுக்காகத் தான் அந்தத் தலைவர்களெல்லாம் காத்துக் கொண்டிருந்தார்கள். இயேசுவை ரோம அதிகாரிகளிடம் நேரடியாக மோதவிட்டு கலகத்தை ஏற்படுத்தலாம் என வெறிபிடித்த யூதர்கள் திட்டமிட்டிருந்தார்கள்.

இப்படியாக கிளர்ச்சி ஏற்பட வாய்ப்பாக இருந்த சூழ்நிலையில், நம் கர்த்தர் சிக்கலான சூழ்நிலையை சுமுகமான சூழ்நிலையாக மாற்றினார்; *" மாயக்காரரே, நீங்கள் என்னை ஏன் சோதிக்கிறீர்கள்? வரிக்காசை எனக்குக் காண்பியுங்கள் என்றார்; அவர்கள் ஒரு பணத்தை அவரிடத்தில் கொண்டு வந்தார்கள். அப்பொழுது அவர்; இந்தச் சுரூபமும் மேலெழுத்தும் யாருடையது என்று கேட்டார். இராயனுடையது என்றார்கள். அதற்கு அவர், அப்படியானால், இராயனுடையதை இராயனுக்கும், தேவனுடையதை தேவனுக்கும் செலுத்துங்கள் என்றார்"*. இங்கே இயேசு சிக்கலானதை எளிமையாக்கி பிரச்சனையின் மையப் பகுதிக்கே சென்று விட்டார். அங்கே அவருடைய பதில் " அது அல்லது இது " என்றில்லாமல் இரண்டுமே என்றிருந்தது; *"அவர்கள் அதைக் கேட்டு ஆச்சரியப்பட்டு அவரை விட்டுப் போய் விட்டார்கள்"* (மத். 22:22).

இயேசு தன்னுடைய நாட்களில் காணப்பட்ட பிரச்சனைகளின் சிக்கல்களை தீர்த்து வைத்தார். அது ஏழு பேருக்கு வாழ்க்கைப்பட்டிருந்த பெண்ணாக இருந்தாலும் சரி அல்லது மத சம்மந்தமான கேள்வியான *"நியாயப்பிரமாணத்தில் எது பிரதானமானது"* என்கிற கேள்வியாக இருந்தாலும் சரி - தேவ குமாரனுடைய எளிமையான பதில் மனிதனுடைய குழப்பத்தை தீர்த்தது.

*" நீங்கள் வேத வாக்கியங்களையும், தேவனுடைய வல்லமையையும் அறியாததினாலல்லவா தப்பான எண்ணங் கொள்ளுகிறீர்கள்? "* என்று கூறி பிரச்சினையை சுலபமாக்குகிறார் (மாற். 12:24; மத். 22:29).

வேறுவிதமாகச் சொன்னால், வாழ்க்கையின் என்ன, ஏன் போன்ற கேள்விகளோ அல்லது அவைகளை செயல்படுத்துவதற்கு நமக்கு கிடைத்திருக்கும் வல்லமை பற்றியோ உங்களுக்குத் தெரியாது என்று அவர்களைப் பார்த்துச் சொன்னார்.

இறுதியாக, இயேசு ஒரு கேள்வியுடன் அவர்களுடனான

அந்த விவாதத்தை முடிக்கிறார். " கிறிஸ்துவைக் குறித்து நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? அவர் யாருடைய குமாரன்? என்று கேட்டார். அவர் தாவீதின் குமாரன் என்றார்கள். அதற்கு அவர் அப்படியானால் தாவீது பரிசுத்த ஆவியினாலே அவரை ஆண்டவர் என்று சொல்லியிருக்கிறது எப்படி"? என்றார் (மத். 22: 42,43).

யார், என்ன, ஏன் போன்ற கேள்விகளுக்கு தேவன் பதிலளிப்பது மட்டுமல்ல. நாம் சுலபமாகப் புரிந்து கொள்ளும்படி பதில்களை எளிமையாக்கியும் தருகிறார். அதன்பிறகு நாம் விருப்பப்பட்டால் அவருடைய சித்தத்தை நிறைவேற்ற வல்லமையையும் தருகிறார் (II கொரி. 3:5; 4:7).

## அப்போஸ்தலர் நடபடிகள் புத்தகத்தில் "முதன் முதலாக"

1. முதன் முதல் பரிசுத்த ஆவி இறங்குதல் (அப். 2ம் அதி.)
2. முதன் முறை சபை ஸ்தாபிக்க படுதல் (அப். 2ம் அதி.)
3. முதல் சுவிசேஷ பிரசங்கம் (அப். 2ம் அதி.)
4. இயேசுவின் நாமத்தில் முதல் ஞானஸ்நானம் (அப். 2:38)
5. முதல் புதிய ஏற்பாட்டு ஆராதனை (அப். 2:42)
6. சபையில் முதல் களங்கம் (அப். 5ம் அதி.)
7. முதல் இரத்த சாட்சி (ஸ்தேவான்) (அப். 7ம் அதி)
8. முதல் புறஜாதியான் மன மாற்றம் (அப். 10ம் அதி.)
9. முதல் புறஜாதி சபை (அப். 11ம் அதி.)
10. முதல் சுவிசேஷ சுற்றுப் பயணம் (அப். 13ம் அதி.)
11. ஐரோப்பா கண்டத்தில் முதல் சபை (அப். 16ம் அதி.)





# இயேசு, ஒரு தலைசிறந்த போதகர்

## Jesus, The Master Teacher

*Kenneth Tipton*

**இ**யேசு ஒரு மேசியாதான் என்பதைப் பல மதங்கள் மறுத்தாலும், அவர் ஒரு தலைசிறந்த போதகர் என்பதை ஒத்துக் கொள்கின்றன. அப்படியானால் இயேசு கிறிஸ்துவை அப்படி ஒரு தலைசிறந்த போதகராக எது மாற்றியது? ஒரு நல்ல போதகராக அவரை எந்த முறைகள், நுணுக்கங்கள் ஆக்கின? இயேசு கையாண்ட போதக பாணியை ஆராய்வதற்கு மிகச் சிறந்த வழி, நம்மால் "மலைப் பிரசங்கம் " என்றழைக்கப்படும், அந்த நீண்ட பிரசங்கத்திற்குச் செல்வது தான்.

மத். 5:2-ல், " *அவர் தமது வாயைத் திறந்து அவர்களுக்கு உபதேசித்துச் சொன்னது* " என்று உள்ளது. இயேசு அங்கே காரணத்திற்கும், விளைவுக்கும் இடையேயுள்ள தொடர்பு பற்றி பேசத் தொடங்கினார். இதை மத். 5:3-11 வசனங்களில் நாம் காணலாம். உதாரணத்திற்கு, சிலவற்றை நாம் பார்க்கலாம். துயரப்படுகிறவர்கள் .... ஆறுதலடைவார்கள்; சாந்த குணமுள்ளவர்கள் பூமியைச் சுதந்தரித்துக் கொள்வார்கள்; பசி தாகமுள்ளவர்கள் திருப்தியடைவார்கள்; இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள்... தேவனை தரிசிப்பார்கள்.

சீடர்கள் உலகத்திற்கு *வெளிச்சமாகவும், பூமிக்கு உப்பாகவும் அழைக்கப்பட்டார்கள்.* மத். 5:13-16 வசனங்களில், இயேசு தம்முடைய கருத்தை விளக்குவதற்கு மக்கள் சாதாரணமாகப் பயன்படுத்தும் காரியங்களைப் பயன்படுத்தினார். வார்த்தை ஜாலங்களுக்கு அங்கே அவசியமில்லை.

மத். 5:17-48 வசனங்களில், இயேசு தாம் மேற்கோள் காட்டப் போகிறவைகளை அறிமுகப்படுத்துவதற்காக " நீங்கள் கேள்விப்பட்டிருக்கிறீர்கள்" போன்ற சொற்றொடர்களை பயன்படுத்தினார். அதுபோல, இயேசு ஜனங்களுக்கு மத்தியில் நிலவி வந்த கொலை, விபச்சாரம், விவாகரத்து, ஆணையிடுதல் போன்றவைகளை போதகத்தில் பயன்படுத்தினார். அவருடைய போதனையில்

நடைமுறை காரியங்களை சம்மந்தப்படுத்தி பேசினார்.

இயேசு ஏற்கனவே நல்ல நடத்தையுடைய சீடர்கள் இன்னும் உயரிய நிலையை அடைய அவர்களுக்கு போதித்தார். (மத். 6:1-18). அவைகளில், தான தர்மம், ஜெபம், உபவாசம் போன்றவை அடங்கும்.

மத். 6:19-34 வசனங்களில் இயேசு தம்முடைய சீடர்களிடம் தங்கள் உடைமைகளை எப்படிக் கையாள வேண்டுமென்றும், கவலைகளை எப்படிக் கையாள வேண்டுமென்றும் போதிக்கிறார். இந்தக் கருத்துக்களெல்லாம் கற்றுக் கொள்கிற ஒவ்வொரு தனிப்பட்ட நபருக்கும் தனிப்பட்ட முறையில் பொருந்துவதாக இருந்தது.

மத்.7:1-23 வசனங்களில் இயேசு தம்முடைய முடிவுரையில், தம் போதனைகளை கடைப்பிடிக்கிறவர்கள் புத்தியுள்ளவர்களென்றும், தம் போதனைகளை கடைபிடிக்காதவர்கள் புத்தியில்லாதவர்கள் என்றும் விவரிக்கிறார்.

மத்தேயு ஆசிரியர் தொடர்ந்து 7:28-ல், " அதிகாரமுள்ளவராய் அவர்களுக்கு போதித்தபடியால், ஜனங்கள் அவருடைய போதகத்தைக் குறித்து ஆச்சரியப்பட்டார்கள் ".

காலமெல்லாம் போதிக்கிறவனாக இருக்கும் நான் கொடுக்கிற ஆலோசனை என்னவென்றால், ஒருவர் வெற்றிகாரமான போதகர்களாக இருக்க வேண்டுமென்றால், நாம் இயேசுவின் மாதிரியைப் பின்பற்றி காரணம் மற்றும் விளைவுக்குண்டான தொடர்பு பற்றி போதிக்க வேண்டும். நம் கருத்துக்களை விவரிப்பதற்கு சுலபமான, பொதுவான காரியங்களைப் பயன்படுத்தி, சீடர்களுக்கு பரிச்சயமானவைகளை மேற்கோள் காட்ட வேண்டும்.

நம்மிடம் உள்ளவர்கள் ஏற்கனவே நல்ல முறையில் இருந்தால், இன்னும் உயரிய நிலையை அடைய அவர்களுக்குப் போதிக்க வேண்டும். ஒவ்வொரு பாடமும் தனிப்பட்ட முறையில் எப்படிப் பொருந்தி வருகிறது என்று பார்க்க வேண்டும்.

இயேசு தம்முடைய போதகத்தில் செய்தது போல நாமும் செய்திருந்தால் நம் மாணவர்கள் புத்தியில்லாதவர்களாக அல்ல புத்தியுள்ளவர்களாக இருப்பார்கள்.

நாம் விரும்பினாலும், விரும்பாவிட்டாலும் நாமெல்லாரும் போதகர்களாக இருக்கிறோம், அதிகாரப்பூர்வமாகவோ, அப்படியில்லாமலோ நாமனைவரும் போதகர்களாக இருக்கிறோம். மத். 28:19-20 வசனங்களின் சுருக்கமான சாரம்சம் என்னவென்றால் (1) போதித்து



(2) ஞானஸ்நானம் கொடுத்து (3) இன்னும் அதிகமாக போதிக்க வேண்டும் என்பதாகும்.

ஆகவே, இயேசு கிறிஸ்துவைப் போல ஒரு தலைசிறந்த போதகராயிருக்க நாம் விரும்பினால் நம் போதக பாணியையும், நுணுக்கங்களையும் மேம்படுத்தப் பாடுபட வேண்டும். ❖

## போதகர் என்பவர் யார்?

1. ஒரு போதகர் மற்றவர்களின் நித்தியத்தில் தாக்கத்தை ஏற்படுத்துகிறவர்.
2. ஒரு போதகர் மற்றவர் கற்றுக் கொள்ள உதவி செய்கிறவர்
3. ஒரு போதகர் அறிவைப் புகட்டுகிறவர்
4. ஒரு போதகர் தன் தேவைகளுக்கு மற்றவர்களை எழுப்பி விடுகிறவர்.
5. ஒரு போதகர் மற்றவர்களை திருத்துகிறவராக, தூண்டுகிற்வராக, வழிகாட்டுகிறவராக இருக்கிறவர்.
6. ஒரு போதகர் போதகத்தை விட, போதிக்கும் முறையை விட, போதிக்கும் சூழ்நிலையை விட அல்லது போதிக்கும் போது காட்டப்படுபவைகளை விட முக்கியமானவர்.
7. ஒரு போதகர் ஜாக்கிரதையுள்ள பிரயாசத்தின் விளைவாயிருக்கிறவர்.
8. ஒரு போதகர் கொடுக்கப்பட்டிருப்பவைகளிலிருந்து திறமைகளை வெளியே கொண்டு வரும் திறன் பெற்றவர்.
9. ஒரு போதகர் கொடுக்கப்பட்டிருக்கிற பாடத்திட்டத்தின் 90 சதவீதமாயிருக்கிறவர்.
10. ஒரு போதகர் ஆத்துமாக்களைச் செதுக்குகிறவர்
11. ஒரு போதகர் பூமியில் தேவனுடைய தூதராக செயல்படுகிறவர் (II கொரி. 5:20)

# நீங்கள் விசுவாசிக்கும்படி

## That You May Believe

*Hollis Miller*

அப்போஸ்தலனாகிய யோவான் தன்னுடைய சுவிசேஷப் புத்தகத்தில்: *"இந்தப் புஸ்தகத்தில் எழுதியிராத வேறு அநேக அற்புதங்களையும் இயேசு தமது சீஷருக்கு முன்பாகச் செய்தார். இயேசு தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நீங்கள் விசுவாசிக்கும்படியாகவும், விசுவாசித்து அவருடைய நாமத்தினாலே நித்திய ஜீவனை அடையும்படியாகவும், இவைகள் எழுதப்பட்டிருக்கிறது"* (யோவா. *20:30,31*).

இன்று புதிதாக எதையும் கற்றுக் கொள்ளவில்லை என்பதை மனிதர்கள் புரிந்து கொள்ளும் போது வாழ்க்கையில் ஒரு மைல் கல்லை கடக்கிறார்கள், ஆயினும், இது கடந்தகால உண்மைகளை ஒன்றுமில்லாமல் போகச் செய்திடும். ஆகவே, ஒருவர் ஆவிக்குரிய அறியாமையில் விழுந்து போகாத படிக்கு அறிவு தடுக்கிறது. ஏற்கனவே உலகத்தில் நடைபெற்ற சம்பவங்கள் காலச் சுவட்டில் அழிக்க முடியாதபடிக்கு பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. யூதர்கள், இயேசு, அப்போஸ்தலர்கள், வேதாகமம், சபை, மற்றும் அநேக சம்பவங்கள் கிறிஸ்தவ விசுவாசத்தைச் சுற்றிலும் நடைபெற்றபடியால் அவைகள் அழியாதவைகளாக இருக்கின்றன. அவைகளை விவாதிக்க முடியும், விசுவாசிக்க முடியும், விசுவாசியாமல் இருக்க முடியும், அவைகளைக் கண்டுகொள்ளாமல் இருக்க முடியும். ஆனால், அவைகளை காலச் சுவட்டிலிருந்து அழிக்கவே முடியாது.

சில விநோதமான காரணத்தை அடிப்படையாகக் கொண்டு, வேதாகமத்தில் பதிவு செய்யப்பட்டிருக்கும் உண்மைகள், மனிதர்களால் எழுதி வைக்கப்பட்டிருக்கிற கொள்கைகள், கோட்பாடுகள் ஆகியவைகளோடு ஒத்துப்போகிறதா இல்லையா என்று பார்த்து, அவை சரியென்றும், தவறென்றும் தீர்மானிக்கப்படுகிறது. ஆனால், அது ஏன் அவ்விதமாகத் தீர்மானிக்கப்பட வேண்டும்? ஆபிரகாம், ஈசாக்கு யாக்கோபு, யோசேப்பு போன்றவர்களை வரலாற்று நாயகர்கள் என்பதை ஏற்க மறுக்கும் சிலர், பழங்காலத்தில் வாழ்ந்த புகழ் பெற்றவர்களின் வரலாற்றை ஏற்றுக்கொள்வதற்கு சிரமப்படுவதே இல்லை. அப்படியென்ன இஸ்ரவேல் ஜனங்கள் முற்பிதாக்கள் இல்லாதவர்களா? அப்படி இல்லையென்றால் ஏன் அவர்களுடைய முற்பிதாக்களை வரலாற்று நாயகர்களாக ஏற்றுக் கொள்ளக் கூடாது?

இயேசு கிறிஸ்துவை மதிப்பீடு செய்வதில், ஆதிக் கிறிஸ்தவர்கள் சரியாக இருந்தார்களா? தவறு செய்து விட்டார்களா என்பதை யார் முடிவு செய்வது? அந்த முடிவை இயேசுவை ஒரு போதும் சந்தித்திராத, கண்டிராத, தொட்டிராத அவருடைய அற்புதங்களைப் பார்த்திராத அல்லது வேதாகமத்திற்கு எதிரான கொள்கைகளை கொண்டிருக்கும் ஒருவர் ஏன் எடுக்க வேண்டும்?

ஒரு கிறிஸ்தவன் தன்னுடைய நம்பிக்கையை இவ்வுலகத்தின் சந்தேகப் பேர்வழிகளிடம் ஒப்படைப்பதற்கு எவ்வித நியாயமான காரணமுமில்லை. அப்போஸ்தலனாகிய பவுல் இன்றும் பேசுகிறார். *" பிற்காலங்களிலே மனச்சாட்சியில் சூடுண்ட பொய்யருடைய மாயத்தினாலே சிலர் வஞ்சிக்கிற ஆவிகளுக்கும் பிசாசுகளின் உபதேசங்களுக்கும் செவிகொடுத்து, விசுவாசத்தை விட்டு விலகிப் போவார்கள்"* (I தீமோத். *4:1*). அன்பான வாசகர்களே, இந்த ஆவியானவரின் வார்த்தைகளாலே நாமெல்லாரும் எச்சரிக்கப்படுவோமாக!. ❖

## கிறிஸ்தவ மார்க்கம்

| | | |
|---|---|---|
| 1. | ஜீவ மார்க்கம் | (அப். 2:28) |
| 2. | விசுவாச மார்க்கம் | (கலா. 3:9) |
| 3. | உத்தம மார்க்கம் | (நீதி. 11:20) |
| 4. | ஞான மார்க்கம் | (நீதி. 4:11) |
| 5. | நீதியின் மார்க்கம் | (II பேதுரு 2:21) |
| 6. | கர்த்தருடைய மார்க்கம் | (அப். 18:25) |
| 7. | தேவனுடைய மார்க்கம் | (அப். 18:26) |




# கிறிஸ்தவம் : எல்லா கலாச்சாரங்களுக்குமான சுவிசேஷம்

## Christianity : The Gospel for All Cultures

*Roger E. Dickson*

கிறிஸ்தவத்தை எடுத்துச் செல்லும்படியாக லூக்கா, அப்போஸ்தலர் நடபடிகள் புத்தகத்தில், ஆதி சீடர்கள் முதலில் யூதர்களிடத்திற்கும், அதன் பின்பு புறஜாதிகளிடத்திலும் போனார்கள் என்று அறிவிக்கிறார். சபை ஸ்தாபிக்கப்பட்ட பிறகு, சீஷர்கள் யூதர்களுக்கு மட்டுமே பிரசங்கித்தார்கள் (அப். 11:19). ஆயினும், சுவிசேஷம் சகல தேசத்தாருக்கும் பிரசங்கிக்கப்படும் என்று இயேசு சொன்னார் (லூக். 24:47). இது சீடர்களின் வாழ்நாளிலேயே நிறைவேறியது என்று லூக்கா நிரூபிக்கிறார். அந்த ஊழியம் எப்படி நிறைவேறியது என்பதற்கான காரணங் களையும் கொடுக்கிறார். புறஜாதிகள் சுவிசேஷச் செய்தியை பெற்றுக் கொள்ள வேண்டுமென்பதற்காக தேவன் எப்படி சீஷர்களிடம் அற்புதவிதமாகப் பேசினார் என்பதற்கான சாட்சியங்களைப் பதிவு செய்கிறார்.



ஒட்டுமொத்த மனித இனத்துக்கும் மெய் தேவனாக இருக்கிறவர், எல்லா காலத்திலும் எல்லா மனிதர்களுக்கும் பொருந்தக்கூடிய அளவில் ஒரு மார்க்கம் ஸ்தாபிக்கப்படத்தக்கதாகவே தம்மை வெளிப் படுத்துவார். உண்மையான கிறிஸ்தவம் இந்த வகையான மார்க்கமாயி ருக்கிறது. ஏனென்றால், இது எல்லா மனிதர்களுக்கும் பொருந்தக் கூடியதாக இருக்கிறது. மேலும், இது ஒன்றான மெய் தேவனிடமிருந்து வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது என்பதற்கு நிரூபணமாயிருக்கிறது.

ஒரே தேவன், ஒரே கர்த்தர் இயேசுகிறிஸ்து. மனித இனத்தின் சகோதரத்துவம் சாத்தியப்படுவதற்கான வழி இயேசுவும், அவருடை சபையும் தான் என்பதே லூக்கா ஆசிரியரின் மைய வாதமாக உள்ளது. ஒரே தேவன், ஒரே கர்த்தராகிய இயேசு கிறிஸ்து என்னும் உண்மை, மார்க்க ரீதியாக எல்லா மனிதர்களும் ஒன்றாயிருக்க முடியும் என்பதற்கான அஸ்திபாரத்தை ஏற்படுத்தியிருக்கிறது. சபை என்கிற அமைப்பின் கீழாக, உலகின் எல்லாக் கலாச்சாரங்களை உடையவர்களும் வந்து ஒன்றான மெய் தேவனை ஆராதிக்கலாம். சகோதரத்துவமானது உலகிலுள்ள எல்லா கலாச்சாரக்காரர்களிடையே சமாதானத்தை ஏற்படுத்தும். பரலோகத்தின் தேவனால் மட்டுமே இப்படிப்பட்ட ஒரு சமத்துவ சமுதாயத்தை ஏற்படுத்தியிருக்க முடியும் என்பது தான் லூக்காவின் வாதம்.

A. சுவிசேஷம் சமாரியர்களிடத்தில் சென்றது. லூக்கா முதலில் சுவிசேஷம் எப்படி சமாரியர்களிடத்தில் சென்றது என்பதைப் பதிவு செய்கிறார். இந்த சமாரியர்களை யூதர்கள் சமுதாய அடிப்படையில் நிராகரித்தார்கள். *"அப்பொழுது பிலிப்பென்பவன் சமாரியாவிலுள்ள ஒரு பட்டணத்திற்குப் போய் அங்குள்ளவர்களுக்கு கிறிஸ்தவை குறித்து பிரசங்கித்தான்" (அப். 8:5). "பிலிப்பு செய்த அதிசயங்களை ஜனங்கள் கேள்விப்பட்டுக் கண்டு, அவனால் சொல்லப்பட்டவைகளை ஒருமனப்பட்டுக் கவனித்தார்கள்" (வச 8:6) " தேவனுடைய ராஜ்ஜியத் துக்கும், இயேசு கிறிஸ்துவினுடைய நாமத்துக்கும் ஏற்றவைகளைக் குறித்து, பிலிப்பு பிரசங்கித்ததை அவர்கள் விசுவாசித்த போது, புருஷரும், ஸ்திரீகளும் ஞானஸ்நானம் பெற்றார்கள் "* (வச. 8:12).

B. சுவிசேஷம் புறஜாதிகளிடத்தில் சென்றது. அப்போஸ்தலர் 10 மற்றும் 11 ஆகிய அதிகாரங்களில், பேதுருவும் ஆறு யூதர்களும்

ஒரு புறஜாதியானுடைய
கொர்நேலியு என்னும் பேர் கொண்ட ஒரு புறஜாதியானுடைய
வீட்டிற்குச் சென்றார்கள். அவர்கள் கொர்நேலியுவின் வீட்டில் இருந்த
போது பரிசுத்த ஆவியானவர் கொர்நேலியுவின் வீட்டார் மீது இறங்கி
னார் (11:15-17). பேதுருவும், அவரோடிருந்தவர்களும் எருசலேமுக்குத்
திரும்பிய போது, எருசலேமிலிருந்த யூத கிறிஸ்தவர்கள் பேதுரு புறஜாதி
யானுடைய வீட்டிற்கு சென்றதைக் குறித்து அவரோடு வாக்குவாதம்
பண்ணினார்கள். *விருத்தசேதனமில்லாத மனுஷரிடத்தில் நீர் போய்,*
*அவர்களோடே போஜனம் பண்ணினீர்* என்று எதிர்த்தார்கள் (11:3).
ஆயினும், பேதுரு தான் தரிசனம் கண்டதையும், அந்த தரிசனத்தில்
தேவன் எல்லாவற்றையும் சுத்தமாக்கினதையும் அவர்களிடத்தில்
விளக்கினார் (10:9-16). அந்த தரிசனத்தின் சத்தம் இவ்விதமாக
எதிரொலித்தது, *தேவன் சுத்தமாக்கியவைகளை நீ தீட்டாக எண்ணாதே*
(10:15) பேதுரு அந்த தரிசனத்தில் சொல்லப்பட்டவைகளை அப்படியே
பின்பற்றினான். அவர் ஒரு புறஜாதியினுடைய " வீட்டிற்குச் சென்று
அங்கே சுவிசேஷத்தைப் பிரசங்கித்தார். எருசலேமிலிருந்த யூதக் கிறிஸ்த
வர்கள் பேதுரு உத்தரவு சொன்னதைக் கேள்விப்பட்ட போது, *ஜீவனுக்*
*கேதுவான மனந்திரும்புதலைத் தேவன் புறஜாதியாருக்கும் அருளச்*
*செய்தார் என்று சொல்லி, தேவனை மகிமைப்படுத்தினார்கள்*" (11:18).

C. பவுல் மூலமாக சுவிசேஷம் புறவின உலகத்திற்குச் சென்றது. பவுல் தமஸ்குவுக்குச் செல்லும் வழியில் இயேசுவால் தனிப்பட்ட முறையில் அழைக்கப்பட்டார். அந்த அழைப்பிற்கான நோக்கம் சுவிசேஷச் செய்தியோடு பவுலை புறஜாதிகளிடத்தில் அனுப்புவதாக இருந்தது (அப். 9:15). பவுலின் ஊழியம் முழுவதும் அவர் இந்த விசேஷித்த ஊழியத்தை நிறைவேற்றிய போது நடந்த சம்பவங்களை லூக்கா அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகத்தில் பதிவு செய்துள்ளார்.

விசுவாசியாத யூதர்கள் அந்தியோகியாவில் சுவிசேஷத்தை நிராகரித்த போது பவுலும், பர்னபாவும் யூதர்களிடம் தாங்கள் புறஜாதிகளிடத்தில் போவதாகக் கூறினார்கள். " *முதலாவது உங்களுக்கே தேவ வசனத்தைச் சொல்ல வேண்டியதாயிருந்தது நீங்களோ அதைத் தள்ளி உங்களை நித்திய ஜீவனுக்கு அபாத்திரராகத் தீர்த்துக் கொள்கிறபடியினால், இதோ, நாங்கள் புறஜாதியாரிடத்தில் போகிறோம்* " (லூக். *13:46*). *மேலும், லூக்கா இவ்விதமாகச் சொல்கிறார்.* " *புறஜாதியார் அதைக் கேட்டு சந்தோஷப்பட்டு, கர்த்தருடைய வசனத்தை மகிமைப் படுத்தினார்கள்*" (லூக். 13:48).



மேலே குறிப்பிடப்பட்டிருக்கிற சம்பவம் போன்று தான் கொரிந்து பட்டணத்திலும் நடந்தது. விசுவாசியாத யூதர்கள் பவுலை எதிர்த்து தேவதூஷணம் செய்தபோது " *பவுல் தன் வஸ்திரங்களை உதறி உங்கள் இரத்தப்பழி உங்கள் தலையின் மேல் இருக்கும். நான் சுத்தமாயிருக்கிறேன்; இது முதல் புறஜாதியாரிடத்திற்குப் போகிறனென்று அவர்களுடனே சொல்லி*" என்று .(அப். 18:6) அதன் விளைவாக, கொரிந்து பட்டணத்தாரில் அநேகர் விசுவாசித்து ஞானஸ்நானம் பெற்றார்கள் (அப். 18:8).

ரோமாபுரியில் யூதர்கள் சுவிசேஷத்தை நிராகரித்தபோது, பவுல் அவர்களிடம் இவ்விதமாகச் சொன்னார், " *ஆதலால் தேவனுடைய இரட்சிப்பு புறஜாதியாருக்கு அனுப்பப்பட்டிருக்கிறதென்றும், அவர்கள் அதற்கு செவி கொடுப்பார்ளென்றும் உங்களுக்குத் தெரிந்திருக்கடவது*" என்றான் (அப். 28:28).


பவுலின் சார்பாகவும், கிறிஸ்தவத்தின் சார்பாகவும் லூக்காவின் வாதம் என்னவென்றால், சுவிசேஷம் முழு உலகத்திற்கும் என்பதாகும். அது யூதர்களுக்கு மட்டுமாயிருக்கவில்லை. உண்மையில், பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகள் யூதர்கள் சுவிசேஷத்திற்கு எதிராக தங்கள் இருதயங்களைக் கடினப்படுத்துவார்கள் என்று தீர்க்கதரிசனம் உரைத்தார்கள். (அப். 13:47; 28:26,27; ஏசாயா 6:9,10; 42:1,6; 49:6; எரேமியா 5:21; எசேக்கியா 12:2). யூதர்களின் இந்த மனக்கடினம் உலக முழுவதும் புறவினத்தாரிடத்தில் சுவிசேஷம் பரவ ஏதுவாயிருந்தது.

கிறிஸ்தவத்திற்கு ஆதாரமாயிருக்கிற அடிப்படை உண்மைகள் இரட்சிப்பிற்கு அவசியமாயிருக்கிறது. இத்தகைய உண்மைகள் உலகின் எல்லா கலாச்சாரங்களுக்கும் பொருந்துகிறது. அந்த உண்மைகள் கலாச்சாரத்திற்குத் தொடர்பில்லாதவைகளாக இருக்கிறது; அதாவது, அந்த உண்மைகள் உலகின் எந்த ஒரு கலாச்சாரத்தைக் கொண்டும் அடையாளப்படுத்தப்படுவதில்லை. ஏனென்றால், கிறிஸ்தவத்தின் அடிப்படை நம்பிக்கைகள் கிறிஸ்தவம் ஒன்றான மெய் தேவனிடமிருந்து வெளிப்படுத்தப்பட்டது என்பதற்குச் சாட்சியாக இருக்கிறது. லூக்கா மற்றும் அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகங்களில் வெளிப்படுத்தப்படுகிற அடிப்படை நம்பிக்கைகள் இரட்சிப்பிற்கு அவசியமாயிருக்கிறது. அவைகள் கிறிஸ்தவ விசுவாசத்தின் எளிமையான தன்மையை முழுமையாக்குகிறது. அவைகள் எல்லா வரலாற்றுக்கும், உலகின் எல்லாக் கலாச்சாரங்களுக்கும் பொருந்தக் கூடிய தேவ பக்தியுள்ள வாழ்க்கை மற்றும் பரிசுத்தத்திற்கான தேவனுடைய வழிநடத்துதலாயிருக்கிறது.

# புத்தகத்தைக் கண்டுபிடித்தல்

## Finding the Book

*Jack Harriman*



**யோ**சியா ராஜாவின் நாட்களில், தேவனுடைய நியாயப் பிரமாணப் புத்தகம் கண்டுபிடிக்கப்பட்டது. யார் அதைத் தொலைத்தது, எத்தனை நாட்களாக அது காணாமல் போயிருந்தது போன்ற விவரங்கள் யாருக்கும் தெரியாது. ஆனால், அது கண்டு பிடிக்கப்பட்டது இஸ்ரவேல் மற்றும் யூதா தேசத்திலிருந்த ஒவ்வொருவருடைய வாழ்க்கையும் தொட்டது மல்லாமல் அவர்களுடைய வாழ்க்கையில் ஒரு தொடர் சம்பவங்களுக்கான தொடக்கமுமாயிருந்தது. (II ராஜா 22,23) யோசியா ராஜா அந்தப் புத்தகத்தை வாசித்த போது மிகவும் பயந்தான். அவர்களுடைய வாழ்க்கையும், வாழ்க்கை நெறிகளும் புத்தகத்தின் உபதேசத்தோடு இசைவாக இல்லாத காரணத்தால் ராஜா மிகவும் பயந்தான். அதன் பிறகு ஜனங்களெல்லாரும் அந்தப் புத்தகத்தில் எழுதியிருக்கிறவைகளை நிறைவேற்றுவதாக தேவனோடு உடன்படிக்கை செய்து கொண்டார்கள். அந்தப் புத்தகத்தில் எவைகளெல்லாம் கடிந்து கொள்ளப்பட்டிருக்கிறதோ அவைகளையெல்லாம் ஜனங்களுடைய வாழ்க்கையிலிருந்து நீங்கிப் போகத்தக்கதாக ராஜா அவர்களை வழி நடத்தினான். அது மட்டுமல்ல அந்த புத்தகத்தில் கட்டளையிடப்பட்டிருக்கிறவைகளை ஜனங்கள் கைக் கொள்ளத்தக்கதாக ராஜா அவர்களை வழிநடத்தினார். அதன் விளைவாக, மாபெரும் சீர்திருத்தம் ஏற்பட்டது.

அதைப் போன்ற சீர்திருத்தம் நம்முடைய சமுதாயத்தில் ஏற்பட்டிருந்தால் எவ்வளவு அருமையாயிருந்திருக்கும்? இச்சம்பவத்தில் சீர்திருத்தத்திற்கு மிக எளிய சூத்திரம் தரப்பட்டுள்ளது.

முதலாவது, பழைய ஏற்பாட்டு யோசியாவைப் போல தேவனுடைய நியாயப்பிரமாணத்தைக் கண்டுபிடித்து அதை வாசிக்க வேண்டும்.



நம்முடைய நாட்களில் அந்தப் புத்தகம் புதிய ஏற்பாடாயிருக்கிறது. நம்முடைய பார்வையிலேயே படாத அளவில் புதிய ஏற்பாடு தொலைந்து போய் விடவில்லை. எப்படியெனில், ஒரு வகையில், தொலைந்து போயிருக்கிறது என்பதும் சரி தான். புத்தகங்கள் அடுக்கி வைக்கப்படுகிற இடத்திலும், ஒரு போதும் தொடப்படாமல் மேசைகளின் மீது தொலைந்து போய் இருக்கிறது. நாம் பார்க்கக் கூடிய அளவில் தான் அது தொலைந்து போயிருக்கிறது. அது வாசிக்கப்படாதபடியினால் தொலைந்து போனதாகவே இருக்கிறது. இன்று நமக்கு அவசியம் தேவைப்படுவது புதிய ஏற்பாட்டை வாசிப்பதும், அது வாசிக்கப்படும் போது நாம் கேட்பதுமாகும். புதிய ஏற்பாடு தான் இன்று உங்களுக்கும் எனக்கும் தேவனுடைய செய்தியாயிருக்கிறது. ஆகவே, புதிய ஏற்பாட்டை வாசியுங்கள்!

இரண்டாவதாக, பழைய ஏற்பாட்டு யோசியாவைப் போல, அதற்குக் கீழ்ப்படிய தேவனோடு உடன்படிக்கை பண்ண வேண்டும். வேதாகமத்தை நாம் வாசித்து, அவை எல்லாவற்றிற்கும் நாம் கீழ்ப்படியவில்லையென்றால் அது பெரியதாக நமக்கு எவ்வித நன்மையும் செய்யாது. இதற்கு ஆத்தும ஆராய்ச்சியும், செல்லுஞ் செலவைக் கணக்குப் பார்ப்பதும் அவசியமாயிருக்கிறது. (லூக். 9:57-62).

மூன்றாவதாக, பழைய ஏற்பாட்டு யோசியாவைப் போல வேதாகமம் எவைகளையெல்லாம் கண்டிக்கிறதோ அவைகளை நாம் செய்யாமல் புத்தகம் எவைகளைக் கட்டளையிடுகிறதோ அவைகளை செய்யத் தொடங்க வேண்டும். செயல்படுவது தான் முக்கியமான காரியமாக இருக்கிறது. செயலில் நாம் சிலவற்றைத் தவிர்க்க வேண்டும், சிலவற்றை சேர்க்க வேண்டும். சிலவற்றை நிறுத்த வேண்டும், சிலவற்றைத் தொடங்க வேண்டும்.

போராட்டம் நிறைந்த இல்லங்களுக்கும், முறிந்து போன திருமணங்களுக்கும் இது தான் பதிலாகும். தவறான போதை பயன்பாட்டிற்கும், தற்கொலைக்கும் இதுதான் பதிலாகும். பெருங் குற்றங்களுக்கும், வன்முறைக்கும் இதுதான் பதிலாகும். பொய்க்கும், ஏமாற்றுக்கும் இது தான் பதிலாகும். கற்பழிப்புக்கும், குழந்தைகள் பலாத்காரம் செய்யப்படுவதற்கும் இதுதான் பதிலாகும். பசிக்கும், சண்டைக்கும் இது தான் பதிலாகும். ஆகவே, வேத புத்தகத்தைக் கண்டுபிடியுங்கள்!

தேவனுடைய வார்த்தை

# வேதாகமத்தின் நேர்மை

## The Bible`s Honesty

*David Deffenbaugh*

நோவா திராட்சை ரசம் குடித்தான், ஆபிரகாம் பொய் சொன்னான், யாக்கோபு தந்திர முள்ளவனாக இருந்தான், மோசே தயக்கமுள்ளவனாக இருந்தான், கிதியோன் பயந்தாங்கொள்ளி யாக இருந்தான். தாவீது சதி செய் திறவனாக இருந்தான். ஆனால், இவர்களெல்லாரும் இந்தப் பண்புகளுக்காக நம்மால் நினைக் கப்படுவதில்லை. ஆயினும், வாழ்க்கையின் சில சூழ்நிலை களில் இவர்கள் இத்தீய குணங் களைப் பிரதிபலித்திருக்கிறார்கள். இது தான் வேதாகமத்தின் நேர்மைக்கு சாட்சியமாக இருக் கிறது. மாபெரும் புத்தகமாகிய வேதாகமம் தேவனையும், மனித னுக்கான தேவனுடைய சித்தத் தையும் மாத்திரம் வெளிப்படுத்த வில்லை. அத்தோடு, அந்த சித்தத் திற்குக் கீழ்ப்படியும்படி மனித னுக்கு அழைப்பும் விடுக்கிறது. அந்த சித்தத்தை நிறைவேற்று வதற்கான ஒரு வழி தேவன் யாரோடெல்லாம் நேரடியாக இடைப்பட்டார், அதற்கு அவர்கள் எவ்விதமாக பதிலளித்தார்கள் என்பது. வேதாகமம் நேர்மையாக இருக்கிறபடியால், தேவ மனிதர் களின் தவறுகளையும், குறை களையும் மறைப்பதில்லை. அந்த நேர்மை ஒரு பெரும் நோக்கத்தை நிறைவேற்றுகிறது.

முதலாவது, தேவனுடைய தயவைப் பெற்ற இந்த தனிப் பட்ட நபர்கள் நம்மைப் போல மனிதர்கள் தான். அவர்களிடத் தில் குற்றம் குறைகள் இருந்தது என்கிற உண்மையை நம்மால் புரிந்து கொள்ள முடிகிறது. அதே வேளையில் அவர்களுடைய பல வீனங்களை நம்மால் அடையாளங் காண முடிவது போல, அவர்க ளுடைய பலத்தையும் நாம் அடையாளம் காண வேண்டும். நோவா கீழ்ப்படிந்தார், ஆபிரகாம் மாபெரும் விசுவாசத்தைக் காட்டி னார், மோசே தேவனுடைய வழி நடத்துதலின்படி பின் சென்றார், கிதியோன் தேவனுடைய பலத் தின் மேல் நம்பிக்கைக் கொண் டார், தாவீது மனந்திரும்பினார், எலியா மீண்டும் பழைய நிலைக்கு வந்தார். ஆகையால், நாம் மனிதர் களாக இருப்பது உண்மையாக இருந்தாலும் கூட, நாம் தேவனு டைய சித்தத்தை நிறைவேற்ற முடியும்.


இரண்டாவதாக, மிகப் பெரிய மனிதர்கள்கூட தவறு செய்கிறார்கள். மற்றவர்களிடத் தில் மிக அதிகமாக எதிர்பார்ப்பது வெகுசுலபம். நாம் பெரும்பாலும் மூப்பர்கள், உதவிக்காரர்கள், பிரசங்கியார்கள், வேதாகமப் பள்ளி ஆசிரியர்கள் மற்றும் சக கிறிஸ்தவர்கள் வேதாகமத்தின் மிகப் பெரும் பக்திமான்கள் கூட வாழ முடியாத அளவில் வாழ வேண்டுமென்று எதிர்பார்க்கி றோம். தேவன், மனிதர்கள் செய்யும் தவறுகளைக் கண்டு கொள்ளாமல் இருப்பதில்லை. மாறாக, அவர்கள் மறுபடியும் பழைய நிலைக்கு திரும்புவதற் கான வழியைக் கொடுக்கிறார்.

நிச்சயமாக, வேதாகமம் உண்மையாக இருக்க வேண்டு மென்று நாம் எதிர்பார்க்கிறோம். அப்படியில்லையென்றால், அது வேதாகமமாயிருக்காது. நாம் பல வீனர்களாக இருக்கிறோம் என்பதை முழுமையாக அறிந்த வர்களாக, தேவனுடைய சித்தத்தை நம் வாழ்வில் அப்படியே பின் தொடர வேதாகமத்தின் உண்மைத் தன்மை நமக்கு சவால் விடுகிறது. ஏனென்றால், நம்மைப் போல பலவீனமுள்ளவர் கூட தேவனைப் பிரியப்படுத்தியிருக்கிறார்கள் என்பதை நாம் அறிந்திருக்கிறோம். மேலும், தேவன் நம்முடைய பலவீனங்களில், அவருடைய பொறுமை, இரக்கம், ஊக்கம் போன்றவைகளால் நம்மைத் தாங்கி வழிநடத்தியது போல மற்ற வர்களுடைய பலவீனங்களில் நாம் உதவி செய்ய வேண்டுமென்று வேதாகமம் நமக்கு சவால் விடுகிறது...

## ஸ்தேவானின் மரணம்

1. பயமுறுத்தும் கூட்டத்தின் நடுவே எத்தனை வைராக்கியமான முகம்
2. கர்த்தரின் மேல் எத்தனை அன்பு, எவ்வளவு விசுவாசம்
3. அவனுக்கு நியமிக்கப்பட்டதில் எத்தனை பொறுப்பும், அர்ப்பணிப்பும்
4. எந்த நிலையிலும் உண்மையைப் பேசக்கூடிய தைரியம்
5. கர்த்தருக்குள் மரிப்பதில் எத்தனை சந்தோஷம், சமாதானம்
6. உண்மையாகவே ஸ்தேவானின் வைராக்கியமுள்ள வாழ்க்கையிலும், மரணத்திலும் கிறிஸ்து மகிமைப்பட்டார் (பிலி. 1:21,28)

சந்தேகம், அவிசுவாசம், எம் மதத்தையும் பின்பற்றாமை, ஒழுக்கக் கேடு, தேவனையும் பரிசுத்தமுள்ள எல்லாவற்றையும்




வெளிப்படையாகக் கேலி செய்தல் போன்றவைகள் தலைவிரித்தாடுகிற இக்கால கட்டத்தில் வேதாகமத்தை நம்புவதற்கான சில காரணங்களை நாம் கவனிப்போம்.

பரிணாமக் கொள்கைக்காரர்களின் பலவித கூப்பாடுகளுக்கும் மத்தியில், வேதாகமம் மட்டுமே, எல்லாவற்றின் ஆரம்பம் பற்றி நியாயமான மற்றும் அறிவுப் பூர்வமான விளக்கத்தைத் தருகிறது.

காலங்காலமாக தன் மீது தொடுக்கப்படும் தாக்குதல்களுக்கு வேதாகமம் ஈடு கொடுத்து வருகிறது. அதை அழிக்கவும், பொய்யென நிரூபிக்கவும் எடுக்கப்பட்ட முயற்சிகளெல்லாம் துக்ககரமான தோல்விகளைத் தான் தழுவி வந்திருக்கிறது. எனவே தான், இயேசு இவ்விதமாகச் சொன்னார். " *வானமும், பூமியும் ஒழிந்துபோம், என் வார்த்தைகளோ ஒழிந்து போவதில்லை*" (மத். 24:35) என்று.

வேதாகமம் தன்னைப் படித்து, வாழ்க்கையில் அதன்படி வாழ்கிறவர்களுக்கு ஆறுதலையும், பலத்தையும் வழங்குகிறது. அத்தோடு மரணத்தில் நம்பிக்கையையும் ஏற்படுத்துகிறது. இது பற்றி பவுல் 1தெச. 4:13-18 வசனங்களில் பேசுகிறார். அடுத்த வாழ்க்கைக்கு ஆயத்தப்படுபவர்களுக்கு உண்மையாகவே அது மேலான இடத்தைப் பற்றிச் சொல்கிறது (மத். 25:34).

வேதாகமத்திற்குக் கீழ்ப்படியும் போது அது இப்போது மகிழ்ச்சியையும், சமாதானத்தையும் பின்பு இதை விட மேலானவைகளுக்கான நம்பிக்கையையும் கொண்டு வருகிறது (சங். 1; பிலி. 4:7).

வேதாகமத்தை அவமதிக்கிறவர்கள், அதன் உபதேசத்தை உதாசீனம் செய்கிறார்கள். அதன் மூலம் மகிழ்ச்சியின்மையையும், துக்கத்தையும் தங்களுக்கு வருவித்துக் கொள்ளுகிறார்கள். பவுல் எழுதினது போல, " *மோசம்போகாதிருங்கள், தேவன் தம்மைப் பரியாசம் பண்ணவொட்டார்; மனுஷன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான். தன் மாம்சத்திற்கென்று விதைக்கிறவன் மாம்சத்தினால் அழிவை அறுப்பான்; ஆவிக்கென்று விதைக்கிறவன் ஆவியினாலே நித்திய ஜீவனை அறுப்பான்* " (கலாத். 6:7,8).

தேவனுடைய வார்த்தையை விசுவாசிக்க, அதற்குக் கீழ்ப்படிய, அதன்படி உண்மையாக வாழ மறுக்கிறவர்கள் நிச்சயமாக நித்தியத்தை இழந்து போவார்கள்.

வேதாகமம் மனிதனுடைய நம்பிக்கையாக இருக்கிறது. வாழ்க்கையில் மனிதனுடைய வழிகாட்டியாக இருக்கிறது. அதற்கு நீங்கள் கீழ்ப்படிந்துவிட்டீர்களா?

**புதிய ஏற்பாட்டில் சபை என்பது கீழ்காணும் பெயர்களையும் கொண்டது**

| | | |
|---|---|---|
| 1. | தேவனுடைய ஆலயம் | (1 கொரி. 3:16) |
| 2. | கிறிஸ்துவின் மணவாட்டி | (எபே. 5:21,32) |
| 3. | கிறிஸ்துவின் சரீரம் | (கொலோ. 1:24; எபே. 1:22,23) |
| 4. | தேவனுடைய ராஜ்யம் | (கொலோ. 1:13) |
| 5. | தேவனுடைய வீடு | (1 தீமோ. 3:15) |
| 6. | முதற்பேறானவர்களின் சங்கம் | (எபி. 12:33) |
| 7. | கிறிஸ்துவின் சபை | (ரோமர் 16:16) |

# கர்த்தருக்குள் ஐக்கியம்



## Fellowship in the Lord

*Rick Cunningham*

உண்மையான கிறிஸ்தவர்களை நாம் எப்படி அடையாளம் காண்பது? இதற்காக மத உலகில் பெரும்பாலும் பயன்படுத்தப்படுகிற குணாதிசயங்களின் பட்டியல் இதோ:

மக்கள் தங்கள் மத நம்பிக்கைகளில் நம்பிக்கையுடையவர்களாயிருந்து, தாங்கள் செய்கின்ற எல்லா காரியங்களிலும் தங்களை பக்தியாகக் காட்டி சரியாக உடை உடுத்திக் கொண்டு, வழிபாட்டுக் காரியங்கள் எல்லாவற்றிலும் பங்கு கொண்டு, தாங்கள் எதை உண்மையென்று நம்புகிறார்களோ அதைப் போதிக்கக்கூடியவர்களாக இருந்து தங்கள் நம்பிக்கைகளிலும், நடைமுறை வாழ்க்கையிலும் ஜாக்கிரதையாக இருந்து, ஊழிய முயற்சிகளில் அக்கறை கொண்டு ஆத்தும ஆதாயம் செய்பவர்களாக இருந்தால், அவர்கள் சிறந்ததென நினைக்கிற மத சம்மந்தமான கடமைகளைச் செய்தால்; தங்களுடையவைகளில் எல்லாவற்றிலும் தேவனுக்குப் பத்தில் ஒரு பங்கைக் கொடுத்தால்; தூய்மையான தோற்றத்தைப் பற்றி அக்கறைப்படுகிறவர்களாக இருந்தால்; சரித்திரத்தில் இடம் பிடித்துள்ள பக்திமான்கள் பற்றி மதிப்புடையவர்களாக இருந்தால், அவர்களுடைய பக்தி நிலை மாற்ற முடியாததாக இருந்தால், சுதந்திரமாகச் சிந்தித்து தேவனை இப்படித்தான் சேவிப்போம் என்பதில் தீர்மானம் உடையவர்களாக இருந்தால், இப்படிப்பட்ட மக்கள் தான் நேர்மையான முறையில் ஆராதிப்பவர்களாக எண்ணப்படுகிறார்கள். இவர்கள் தான் சபையில் ஐக்கியம் கொள்வதற்கு தகுதியுள்ளவர்களாகக் கருதப்படுகிறார்கள்.

ஆனால், இயேசு இத்தகைய மக்கள் கூட்டத்தை மாயக்காரர்கள், நரகத்தின் குமாரர்கள், குருட்டு முட்டாள்கள், குருட்டு வழி காட்டிகள், வெள்ளையடிக்கப்பட்ட கல்லறைகள், தீர்க்கதரிசி களைக் கொலை செய்தவர்கள், சர்ப்பங்கள், விரியன் பாம்புகுட்டிகள் எனக் கடுமையாகக் கடிந்து கொண்டார். மத்தேயு 23 ஆம் அதிகாரத்தில் பரிசேயர்களைப் பற்றி இயேசு இவ்விதமாகத் தான் சொல்கிறார். அந்த அதிகாரத்தை வாசித்துப் பாருங்கள்.




உண்மையான கிறிஸ்தவர்கள் இயேசுவுக்குக் கீழ்ப்படிவதினால் அடையாளம் கண்டு கொள்ளப்படுகிறார்கள். ஒரு கிறிஸ்தவனுக்கு இதைவிட வேறு அளவுகோல் எதுவுமில்லை. மேற்சொல்லப்பட்ட பண்புகளுக்குப் பொருத்தமானவர்களுடனெல்லாம் நாம் ஐக்கியம் கொள்வதில் தவறில்லையென்று சொன்னால் கிறிஸ்துவின் சபையில் பரிசேயர்களை ஐக்கியத்தில் சேர்த்தது போல் ஆகிவிடும். அது எப்படிப்பட்ட ஒரு தவறான முன்னுதாரணமாக இருக்கும்!

ஐக்கியம் என்பது, பக்தியுள்ள எல்லோரோடும் கொள்வதல்ல. அது இயேசுவே கர்த்தரென்று அவருக்குக் கீழ்ப்படிபவர்களோடு மட்டுமே சாத்தியமானது. பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோக ராஜ்யத்தில் பிரவேசிப்பானேயல்லாமல் என்னை நோக்கி: கர்த்தாவே! கர்த்தாவே! என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை (மத். 7:21).

### வேதாகமத்தில் சபை உறுப்பினர்கள் பின்வரும் பெயர்களால் அழைக்கப்படுகிறார்கள்.

1. அங்கத்தினர்கள் (1 கொரி. 12:27)
2. சீடர்கள் (அப். 6:1)
3. விசுவாசிகள் (அப். 5:14; 6:15)
4. பரிசுத்தவான்கள் (அப். 9:13. ரோமர் 1:7)
5. ஆசாரியர்கள் (1 பேதுரு 2:9. வெளி. 1:16)
6. கிறிஸ்தவர்கள் (அப். 11:26,26:28, 1 பேதுரு 4:16)

# திரைச்சீலையைத் திறத்தல்



## Opening the Curtain

*Arthur Ohanov*

சுமார் இரண்டு வருடங்களுக்கு முன்பு அமெரிக்காவிலிருந்து ஒரு புத்தகம் ரஷ்ய மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்டு உக்ரைனில் மக்கள் மத்தியில் பரபரப்பை ஏற்படுத்தியது. அந்தப் புத்தகத்தின் தலைப்பு, வாழ்க்கைக்குப் பிறகு வாழ்க்கை. அதன் ஆசிரியர் டாக்டர். ரேமாண்ட் மூடி என்பவர். ஏறக்குறைய மரிக்கும் தருவாயில் உறுப்புகள் செயலிழந்து போன நிலையிலிருந்த மக்களை டாக்டர் மூடி சந்தித்து அவர்களுடைய அனுபவங்களையும், உணர்வுகளையும் விசாரணை செய்தார்.

அநேக மக்கள் இப்புத்தகத்தைப் பாத்து மிகவும் கவரப்பட்டார்கள், அதே நேரத்தில் அதிர்ச்சியும் அடைந்தார்கள், ஆனால், கிறிஸ்தவர்களுக்கு அது எவ்வித பாதிப்பையும் ஏற்படுத்தவில்லை. ஏனென்றால், கிறிஸ்தவர்களுக்கு எவ்வித விஞ்ஞான விசாரணையோ அல்லது அதற்கான நிருபணமோ தேவையில்லை. ஏனெனில், பூமிக்குரிய வாழ்க்கைக்குப் பிறகு என்ன நடக்கும் என்பது அவர்களுக்குத் தெரியும்.

இக்குறிப்பிட்டக் காரியத்தைக் குறித்து தேவன் என்ன சொல்கிறார் என்று கவனிப்போம். ஆம், இயேசுவிடம், அவரிடம் மட்டுமே நாம் இந்த கேள்வியைக் கேட்க முடியும், “ மரணத்திற்கு பிறகு என்ன நடக்கும் ”? என்று.



மத். 10:28-ல் இயேசு “ *ஆத்துமாவைக் கொல்ல வல்லவர்களாயிராமல், சரீரத்தை மாத்திரம் கொல்லுகிறவர்களுக்கு நீங்கள் பயப்படவேண்டாம்* ” என்றார். மனித ஆத்துமா நித்தியமானது மற்றும் அழிவில்லாதது என்று முன் சந்ததியர் கற்பனை செய்து கொண்டும், எவ்வித ஆதாரமுமில்லாமல் கணித்துக் கொண்டுமிருந்தவைகள் சரிதான் என்று வெளிப்படுத்தி உறுதி செய்தார். கல்லறைக்குப் பிறகும் வாழ்க்கை உண்டு என்பதை நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து, வேதவாக்கியங்களின்படி மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்ததன் மூலம் மிகச் சிறந்த முறையில் நிரூபித்தார்.

நித்தியத்திற்கான இந்த மாற்றம் கிறிஸ்துவுக்கு இரகசியமான ஒன்றாயிருக்கவில்லை. வருங்கால வாழ்க்கை பற்றி அவர், உலக முழுவதும் அங்கீகரிக்கப்பட்ட, வெளிப்படையாக ஏற்றுக் கொள்ளப்பட்ட ஓர் உண்மையைப் பேசினார். இயேசு தாம் சொன்னதை அறிந்திருந்தார். “ *நான் பிதாவினிடத்திலிருந்து புறப்பட்டு உலகத்திலே வந்தேன்; மறுபடியும் உலகத்தை விட்டுப் பிதாவினிடத்திற்குப் போகிறேன் என்றார்* ” (யோவா. 16:28). மேலும், இயேசு இவ்விதமாகச் சொன்னார், “ *நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன் என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான்* ”; “ *உயிரோடிருந்து என்னை விசுவாசிக்கிறவனெவனும் என்றென்றைக்கும் மரியாமலும் இருப்பான்* ”; (யோவா 11:25,26).

இயேசு, வருங்கால வாழ்வு பற்றிய தன்னுடைய வெளிப்பாட்டை உவமைகள் மூலமாகவும், உண்மைக் கதைகள் மூலமாகவும் விளக்கினார். அவருடைய அருமையான உவமைகளில் ஒன்று லாசரு ஐசுவரியவான் உவமை. (லூக். 16:19-31). இங்கே கர்த்தர் காணக் கூடாதவைகளிலிருந்து காணக் கூடியவைகளைப் பிரிக்கிற திரைச் சீலையைத் திறக்கிறார், இங்கே நம்முடைய கண்களுக்கு முன்பாக ஓர் இரகசியமான சித்திரம் தோன்றுகிறது.

இந்த உவமையில், இயேசு மனிதர்களுடைய ஜீவன் தொடரக் கூடிய இரண்டு இடங்களைக் காட்டுகிறார், மேலும், மரணத்திற்குப் பின்னான இரண்டு வேறுபட்ட நிலைகளைச் சுட்டிக்காட்டுகிறார்; நித்திய மகிழ்ச்சி மற்றும் முடிவேயில்லாத நித்திய வேதனைகள்.

இந்த உவமையை அடிப்படையாகக் கொண்டு சில முக்கியமான முடிவுகளை எடுக்கலாம்:

1. பாதாளம் பாடுகளுள்ள ஓர் இடம் : " *இந்த அக்கினி ஜுவாலையில் வேதனைப்படுகிறேனே*" (வசனம் 24).

2. பாதாளம் துக்கம் நிறைந்த நினைவுகளின் இடமாக இருக்கிறது; "*...அதை நினைத்துக் கொள்*" ... (வசனம் 25). நாம் அவ்விடத்திற்கு நம்மோடு எடுத்துச்செல்வது இந்த நினைவை மட்டும் தான். நாம் எல்லாவற்றையும் நினைத்துப் பார்ப்போம்.

3. பாதாளம் உணர முடியாத ஆசைகளையும், திரும்பப் பதில் கிடைக்காத ஜெபங்களையும் உள்ளடக்கிய ஓர் இடமாகும்; "*தகப்பனாகிய ஆபிரகாமே நீர் எனக்கு இரங்கி*" (வசனம் 24).

4. பாதாளம், இந்த பூமியில் வாழ்ந்த போது மற்றவர்களுக்கு சிறந்த ஒரு மாதிரியாக இருக்கவில்லை என்பதற்காக நம் பொறுப்புகளை உணர்ந்து பார்க்கும் ஓர் இடமாக இருக்கிறது; "*நீர் அவனை என் தகப்பன் வீட்டுக்கு அனுப்பும்படி உம்மை வேண்டிக்கொள்ளுகிறேன்*" *(வசனம் 27).*

5. பாதாளம் பாவிகளுக்கான தற்காலிக இடம். இதில் இருக்கிற தவறிழைத்த சமுதாயம் நரகத்தைப் பின்வரும் நித்திய குடியிருப்பாக பெற்றுக் கொள்ளக் காத்திருக்கிறது (வெளி. 21:8). அது பிசாசுக்காகவும், அவனுடைய தூதனுக்காகவும் ஆயத்தம் செய்யப்பட்ட இடமாக இருக்கிறது (மத். 25:41).

மறு வாழ்க்கை பற்றிய படிப்பில், மீட்கப்பட்டவர்களுக்காக நம் தேவன் ஆயத்தமாக்கியிருக்கிற நித்திய மகிழ்ச்சி நம் கற்பனைக்கு எட்டாதது என்பதை நாம் உணர்ந்து கொள்கிறோம். "*தேவன் தம்மில் அன்பு கூருகிறவர்களுக்கு ஆயத்தம் பண்ணினவைகளைக் கண் காணவுமில்லை, காது கேட்கவுமில்லை, அவைகள் மனுஷருடைய இருதயத்தில் தோன்றவுமில்லை*" (1 கொரி. 2:9). நாம் நம் வார்த்தைகளாலும், உணர்வுகளாலும் விவரிக்க முடியாத இடத்தை தேவன் நமக்காக ஆயத்தம் செய்திருக்கிறார். அதுதான் நம் வீடு, நமது குடியுரிமையும் அங்கே தான் இருக்கிறது (பிலிப். 3:20).

நமதாண்டவருடைய உவமையிலிருந்து நாம் கவனிக்காமல் விட்ட இன்னொரு காரியம்: பரலோகத்திலுள்ள நம்முடைய வீட்டில் தவறான, பாவமான, அநீதியான எதுவும் இருக்காது. ஏனெனில், நம்மை மற்றவர்களிடமிருந்து பிரிக்கும் "*பெரும் பிளவு*" அங்கே உண்டு.

**தேவனுடைய இரக்கங்களுக்காக அவரைத் துதி!**
**அவருடைய திட்டங்களுக்காக அவருக்கு நன்றி சொல்!**
**அல்லேலூயா! ஆமென்!**





# கிறிஸ்துவுக்குள்ளான இரட்சிப்பு அவருடைய சபைக்குள்ளான இரட்சிப்பாயிருக்கிறது

## *Salvation in Christ Is Salvation in His Church*

**Basil Overton**

"*ஆகையால் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் கிறிஸ்து இயேசுவினால் உண்டான இரட்சிப்பை நித்திய மகிமையோடே பெற்றுக் கொள்ளும்படி, சகலத்தையும் அவர்கள் நிமித்தமாகச் சகிக்கிறேன்*" (II தீமோத். 2:10). இரட்சிப்பு கிறிஸ்து இயேசுவுக்குள் இருக்கிறது. *அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை* (அப். 4:12) கிறிஸ்து இயேசுவைத் தவிர வேறெங்கும் பாவத்திலிருந்து இரட்சிப்பைப் பெற முடியாது.

கிறிஸ்துவுக்குள் இருப்பதும் கிறிஸ்துவின் சபையிலிருப்பதும் ஒன்று தான். " கொலேசெ பட்டணத்தில் கிறிஸ்து இயேசுவுக்குள் பரிசுத்தவான்களும் விசுவாசிகளுமாயிருக்கிற சகோதர்களுக்கு.... *தேவ சமாதானம் உங்கள் இருதயங்களில் ஆளக்கடவது, இதற்கென்றே நீங்கள் ஒரே சரீரமாக அழைக்கப்பட்டீர்கள்*" (கொலோ. 1:2; 3:15). கொலேசெ பட்டணத்தில் கிறிஸ்துவுக்குள் இருந்தவர்கள் ஒரே சரீரமாக இருந்தார்கள். "*அவரே சபையாகிய சரீரத்துக்குத் தலையானவர்; எல்லாவற்றிலும் முதல்வராயிருக்கும்படி, அவரே ஆதியும் மரித்தோரிலிருந்து எழுந்த முதற்பேறுமானவர்*" (கொலோ. 1:18).

கிறிஸ்து எல்லா மனுஷருக்கும் இரட்சகராயிருக்கிறார் என்பதன் பொருள், இரட்சிக்கப்பட விரும்புபவர்கள் தான் இரட்சிக்கப்படமுடியும் என்பதே. கிறிஸ்து, புதிய ஏற்பாட்டில் இரட்சிக்கப்படும்படியாக என்ன சொல்லியிருக்கிறாரோ அதன்படி செய்கிறவர்களே இரட்சிக்கப்படுவார்கள். *அவர் குமாரனாயிருந்தும் பட்டபாடுகளினாலே கீழ்ப்படிதலைக் கற்றுக்கொண்டு, தாம் பூரணரான*

பின்பு, தமக்குக் கீழ்ப்படிகிற யாவரும் நித்திய இரட்சிப்பை அடைவதற்குக் காரணரானார் (எபி. 5:8,9).

ஒருவர் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படியும்போது, அவர் சுவிசேஷத்தை விசுவாசிக்கிறார்; கிறிஸ்துவை தேவனுடைய குமாரனென்று விசுவாசிக்கிறார் (1 யோவா 3: 23). தன்னுடைய பாவங்களிலிருந்து மனந்திரும்புகிறார் (அப். 17:30); கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெறுகிறார் (ரோமர் 6:3). இவ்விதமாக ஒருவர் கிறிஸ்துவுக்குள் வரும் போது கிறிஸ்துவால் இரட்சிக்கப்படுகிறார், ஏனென்றால், இரட்சிப்பு கிறிஸ்துவுக்குள் தான் இருக்கிறது. அதனால் தான் ஞானஸ்நானம் அவசியமாயிருக்கிறது; ஞானஸ்நானம் ஒருவரை கிறிஸ்துவுக்குள் இருக்கச் செய்கிறது (கலாத். 3:27). எனவே தான், பேதுரு " நீங்கள் மனந்திரும்பி பாவ மன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள் " என்று சொன்னார் (அப். 2:38). ❖

## நாம் மறந்து விட்டோமா?

### ஆபிரகாம் லிங்கன் அமெரிக்கர்களைப் பற்றிச் சொன்னது?

" நாம் வானத்தின் மிகச் சிறந்த அபரிமிதமான ஆசீர்வாதங்களை பெற்றுக் கொண்டு வருகிறோம், நாம் எந்த ஒரு தேசமும் ஒருபோதும் வளர்ந்திராத அளவுக்கு எண்ணிக்கையிலும், செல்வத்திலும், வல்லமையிலும் வளர்ந்திருக்கிறோம்.

ஆனால், நாம் தேவனை மறந்துவிட்டோம். நாம் நம்மை சமாதானத்தோடு பாதுகாத்து, நம்மைப் பெருகச் செய்து, வளமாக்கிப் பலப்படுத்திய கிருபையுள்ள கரத்தை மறந்துவிட்டோம். இந்த ஆசீர்வாதங்களெல்லாம் நம்முடைய மேலான அறிவினால் உண்டானதென்று வஞ்சனையுள்ள இருதயங்களில் வீணாக கற்பனை செய்து விட்டோம். வெற்றிப் போதையில் மிகவும் தன்னிறைவு அடைந்து மீட்கும் மற்றும் பாதுகாக்கும் கிருபையின் அவசியத்தை உணராமல், நம்மை உண்டாக்கின தேவனிடத்தில் ஜெபிக்கப் பெருமையுள்ளவர்களாயிருக்கிறோம் இதற்கான விலையைக் கொடுப்போம்".





# சிலர் சுவிசேஷத்திற்கு கீழ்ப்படியாததற்கான காரணங்கள்

## Reasons Why Some Do Not Obey the Gospel

*John Thiesen*

ஏன் சுவிசேஷத்தை கேள்விப்பட்ட எல்லா ஜனங்களும் அதற்குக் கீழ்ப்படிந்து கிறிஸ்தவர்களாவதில்லை?

ஏன் அப்படிச் செய்வதில்லை என்பதை புரிந்து கொள்வதற்குக் கடினமாக இருக்கிறது. குறிப்பாக, தேவனுடைய பிள்ளையாக மாறுவதன் ஆச்சரியமான நன்மைகளை எண்ணிப் பார்க்கும் போது, இதைப் புரிந்து கொள்வதற்குக் கடினமாக இருக்கிறது. பாவ மன்னிப்பு, மன சமாதானம், அர்த்தமுள்ள வாழ்க்கை, மரித்த பிறகு நித்திய நித்தியமாக அணிந்து கொள்வதற்கு உயிர்த்தெழுதலில் கொடுக்கப்படும் மகிமையான சரீரம் என்று ஒன்றா, இரண்டா! இப்படிப்பட்ட நன்மையான காரியங்களை யார் அறிந்தே நிராகரிப்பார்?

சுவிசேஷ அழைப்புக்குக் கீழ்ப்படியாமல் போனதற்கு பல்வேறு காரணங்கள் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவைகளில் சிலவற்றை நாம் பார்க்கலாம்.

**பாவத்தை விரும்புதல் :** அநேகர் தாங்கள் செய்கின்ற பாவங்களை கிறிஸ்துவுக்காக விட்டு விட விரும்புவதில்லை. அவைகள் அவர்களுக்கு மிக முக்கியமாகக் காணப்படுகிறது, அவர்கள் கொண்டிருக்கும் தவறான சகவாசத்திலிருந்து பிரிவதென்பது அவர்களால் நினைத்துப் பார்க்க முடியாத ஒன்றாயிருக்கிறது. இதை மனதில் கொண்டு தான் இயேசு, ஒளியானது உலகத்திலே வந்திருந்தும் மனுஷருடைய கிரியைகள் பொல்லாதவைகளாயிருக்கிறபடியினால் அவர்கள் ஒளியைப் பார்க்கிலும் இருளை விரும்புகிறதே அந்த ஆக்கினைத் தீர்ப்புக்குக் காரணமாயிருக்கிறது (யோவான் 3:19). பாவ மோகம் அவர்களை மிக இறுக்கமாகப் பிடித்துக் கொண்டிருக்கிறது. ஆனால், இயேசுவின் கேள்வி, "மனுஷன் உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்திக் கொண்டாலும், தன் ஜீவனை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபம் என்ன? ". என்பது (மாற்கு 8:36). நித்திய

ஜீவனை இழந்தாலும் பரவாயில்லை, எனக்கு இந்தப் பாவம் தான் அதைவிட முக்கியமானது என்று சொல்லத்தக்கதாக ஏதாகிலும் இவ்வுலகில் இருக்கிறதா? நித்திய ஜீவனை விட மேலானது எது? இந்த முழு உலகமும் கூட ஈடு இணையில்லை!

**சிலர் தங்களுக்கு இரட்சகர் அவசியம் என்பதைக் காண்பதில்லை :** இந்த வகையான மக்கள் தாங்கள் இழந்து போனவர்களாக இருக்கிறோம் என்பதை அறிவதில்லை. அவர்கள் தங்களை நல்லவர்களாகவும், பிரமாணத்திற்குக் கீழ்ப்படிபவர்களாகவும், உயரிய ஒழுக்க நெறிகளை உடையவர்களாகவும் நினைத்துக் கொள்கிறார்கள். தாங்கள் செய்கிறவைகளில் தேவன் திருப்தி பட்டுக் கொள்ள வேண்டும் என்று கூட அவர்கள் உணரலாம். அவர்கள் உயரிய ஒழுக்க நெறிகளைக் கொண்டிருக்கலாம். ஆனால், அவர்கள் ஏனைய எல்லோரைப் போலவும் பாவம் செய்யும் போது எப்படி? பாவத்தின் சம்பளம் மரணம் என்று வேதாகமம் சொல்லுகிறது (ரோமர் 6:23). அந்தப் பாவங்களுக்காக மரிக்க அவர்களுக்கு ஒரு இரட்சகர் தேவை. அதை இயேசு மட்டுமே செய்ய முடியும். இயேசு கிறிஸ்துவின் இரத்தம் மட்டுமே அவர்களுடைய பாவங்களைக் கழுவிச் சுத்திகரிக்கும் (யோவான் 1:7).

**மற்றவர்களால் கேலி செய்யப்படுவோம் என்கிற பயம்:** இயேசு தன்னைக் குறித்தும் தன் வார்த்தைகளைக் குறித்தும் எவன் வெட்கப்படுகிறானோ அவனைக் குறித்து தானும் தம்முடைய மகிமையோடும், பிதாவின் மகிமையோடும், பரிசுத்த தூதர்களின் மகிமையோடும் வரும் போது வெட்கப்படுவதாகக் கூறுகிறார் (லூக்கா 9:26) நானோ இயேசுவின் வருகையில் நித்திய நரகத்திற்குச் செல்லாதபடி, என்னோடிருப்பவர்களை விட்டு விலகி இயேசு வோடு நிற்பேன்.

தங்களைக் கிறிஸ்தவர்களென்று சொல்லிக் கொள்பவர்களின் சிலருடைய விசுவாச உறுதியற்ற தன்மை சிலர் கிறிஸ்தவத்தை விட்டு விலகிச் செல்லக் காரணமாயிருக்கிறது. ஆனால், நான் எண்ணற்ற உண்மையுள்ள கிறிஸ்தவர்களோடு இருப்பதை விட்டு விட்டு, சபையிலுள்ள சில மாயக்காரர்கள் என்னை உற்சாகமிழக்கச் செய்ய ஏன் அனுமதிக்க வேண்டும்? மாயக்காரருக்காக வைக்கப்பட்டிருக்கிற அந்த பயங்கரமான இடத்திற்கு நான் ஏன் செல்ல வேண்டும்?

**சிலர் தங்கள் பாவங்கள் மன்னிக்கப்பட முடியாத அளவுக்கு மோசமாயிருக்கிறது என்று பயப்படுகிறார்கள்:** *ஆயினும், இயேசு என்னிடத்தில் வருகிறவனை நான் புறம்பே தள்ளுவதில்லை என்று சொல்லியிருக்கிறார்* (யோவான் 6:37)

கடைசியாக, சிலர் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிவதைத் தள்ளி வைத்துக் கொண்டிருக்கிறார்கள் அவர்கள் தாங்கள் வாழ இன்னும் அநேக நாட்கள் இருப்பதாகவும், தேவனுடன் சரி செய்து கொள்ள இன்னும் நேரம் இருப்பதாகவும் நினைக்கிறார்கள். இவர்களைக் குறித்து யாக்கோபு எச்சரிக்கிறார். *நாளைக்கு நடப்பது உங்களுக்குத் தெரியாதே. உங்கள் ஜீவன் எப்படிப்பட்டது? கொஞ்சக் காலந் தோன்றிப் பின்பு தோன்றாமற் போகிற புகையைப் போலிருக்கிறதே* (யாக். 4:14).

மேற்சொல்லப்பட்ட எந்தச் சாக்குபோக்குகளும் தேவனால் ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை. சாக்கு போக்கு சொல்பவர்களைப் பார்த்து கர்த்தர் இவ்விதமாகச் சொன்னார். *அழைக்கப்பட்டிருந்த அந்த மனுஷரில் ஒருவனாகிலும் என் விருந்தை ருசி பார்ப்பதில்லை* (லூக். 14:24) என்று.

**நாம் உண்டாக்குகின்ற உலகம்**

நாம் வாழ்கின்ற உலகத்தை
உண்டாக்குகிறோம்
நாம் சேகரிப்பவைகளால்,
நாம் கொடுக்கிறவைகளால்
அனுதின செயல்களால்,
சொல்கின்ற வார்த்தைகளால்
நாம் வைத்திருக்கிறவைகளால்,
தூக்கி எறிகிறவைகளால்

நாம் காண்கின்ற அழகால் இந்த
உலகத்தை உண்டாக்குகிறோம்
வானம்பாடி பறவையில் அல்லது
அழகான மரத்தில்
வண்ணத்துப் பூச்சியின் சிறகில்,
வெள்ளை நிலாவின் உதயத்தில்
நள்ளிரவு வானங்களில்
ஆச்சரியம் நீடித்திருக்கிறது.

நாம் எப்படிப்பட்ட வாழ்க்கையை
நடத்துகிறோமோ அதைக் கொண்டு
இந்த உலகத்தை உண்டாக்குகிறோம்.
நமக்கிருக்கும் நண்பர்களால்,
நாம் படிக்கும் புத்தகங்களால்
பராமரிப்பு வேளையின் போது நாம் காட்டும்
பரிதாபத்தால் நாம் தூக்கும் சுமைகளால்,
நகர்ந்து கொள்ளும் அன்பால்

நாம் அடைய முற்படுகிற இலட்சியங்களால்
இந்த உலகத்தை உண்டாக்குகிறோம்
நாம் தேடுகிற உயரங்களால்,
உயர்வான கருத்துக்களால்
சூரியனைச் சென்றடைகின்ற
நம்பிக்கைகளாலும், கனவுகளாலும்
அந்த உயரங்களை வெல்வதற்கான
போராட்ட மனதால்

நாம் வசிக்கின்ற இடம் எப்படிப்பட்டது,
குடிசையா, அரண்மனையா,
பரலோகமா அல்லது நரகமா
நாம் சேருகிறோம், சிதறுகிறோம்,
நாம் எடுக்கிறோம், நாம் கொடுக்கிறோம்
நாம் உலகத்தை உண்டாக்குகிறோம்,
அங்கே வாழ்கிறோம்.

*- Alfred Grant Walton*

# நாம் தான் சபை

## The Church is Us !

**Ron Bryant**

**ப**ரலோக ராஜ்யத்தின் குடிமக்கள் பற்றி இயேசு சொல்லும் போது, நீங்கள் *" உலகத்துக்கு உப்பாயிருக்கிறீர்கள்... நீங்கள் உலகத்துக்கு வெளிச்சமாயிருக்கிறீர்கள் என்றார் "* (மத். 5:13,14). பின்பு இயேசு, இவ்விதமாய் மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி, உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் *" பிரகாசிக்கக்கடவது "* என்று சொன்னார். இயேசு தம்மைப் பின்பற்றுபவர்கள் இந்த உலகத்தில் வேறுபட்ட, இரட்சிப்புக் கேதுவான தாக்கத்தை ஏற்படுத்த வேண்டுமென்று வலியுத்தினார்.

தேவனுடைய அன்பின் குமாரனுடைய ராஜ்யம் அந்தகாரத்திலிருந்து விடுதலையாக்கப்பட்ட ஆண்களையும், பெண்களையும் உள்ளடக்கியது. அவர்கள் இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தினாலே தேவனிடத்தில் ஒப்புரவானவர்கள். இப்படி ஒப்புரவாக்கப்பட்டவர்கள் செய்வதற்கென்று அநேக கடமைகள் உண்டு. அவர்கள் கிறிஸ்துவின் சுவிசேஷத்தை இந்த உலகத்துக்குப் பறைசாற்றவும், வெளிப்படுத்தவும் அழைக்கப்பட்டிருக்கிறார்கள்.

எந்த சமுதாயத்திலும் சபை அங்கத்தினர்கள் ராஜ்யத்தை அடையாளப்படுத்துகிறவர்களாயிருக்கிறார்கள். சபையின் அங்கத்தினர்கள் தாக்கத்தை ஏற்படுத்துகிறவர்களாக, சுறுசுறுப்புடையவர்களாக இல்லையென்றால் சபையானது தாக்கத்தை சமுதாயத்தில் ஏற்படுத்தாது, சுறுசுறுப்பாகவும் இருக்காது. அதாவது, நாம் கிறிஸ்துவை உடையவர்களாக இருந்தால், நாம் அவரை அடையாளப்படுத்துகிறோம். நம் விசுவாசத்தையும், அன்பையும், பக்தியையும், அர்ப்பணிப்பையும் உலகம் உற்றுப் பார்த்துக் கொண்டிருக்கிறது. கர்த்தருடைய சபை வல்லமை யாகச் செயல்பட வேண்டுமென்றால் நாம் தொடர்ந்து, வல்லமையாக கர்த்தரை அடையாளப்படுத்தவும், அவருடைய நாமத்தை பறைசாற்றவும் வேண்டும். இன்னும் எளிதாகச் சொல்ல வேண்டுமென்றால், நாம் உபசரிக்கிறவர்களாக, மற்றவர்கள் மீது அக்கறைப்படுபவர்களாக இருந்தால் மட்டுமே சபையும் உபசரிக்கிற சபையாக இருக்கும். சபை ஆவிக்குரிய பிரகாரமாகவும் எண்ணிக்கையின் அடிப்படையிலும் வளர்கிறதென்றால் நாம் வேதவசனங்களை படிப்பதினாலும், பகிர்ந்து கொள்வதிலும், பின்பற்றுகிறதிலும், மற்றவர்களை உற்சாகப்படுத்துவதிலுமே சாத்தியப்படும். சபை உதாரத்துவமாக இருக்கவேண்டுமென்றால் நீங்களும், நானும் கர்த்தருடைய வேலைக்கென்று தியாகமாகவும், உதாரத்துவமாகவும் கொடுப்பதினால் மட்டுமே இது சாத்தியம் ஆகிறது. சபை ஆவிக்குரிய பிரகாரமாக உறுதியாகவும், வேத வசனங்களின் அடிப்படையில் ஆரோக்கியமாகவும் இருப்பதற்கு எல்லாவற்றையும் விட நீங்களும், நானும் தேவனுடைய வார்த்தைக்கு நம்மை அர்ப்பணிக்க வேண்டும். சபை ஆத்தும ஆதாயம் செய்கிறதாக இருக்க வேண்டுமானால், சபையிலுள்ளவர்கள் கிறிஸ்துவை மற்றவர்களுக்கு எடுத்துச் சொல்வதால் தான் அது சாத்தியம். நாம் தான் சபையாக இருக்கிறோம்.



### நமது சுமை


ஒரு வருடத்திற்கு நாம் சுமக்க வேண்டிய கஷ்டங்களை எல்லாம் நம்மால் சுமக்கவே முடியாத, குச்சுகளாலான ஒரு பெரிய கட்டோடு ஒப்பிடுகிறேன். ஆனால், தேவன் அக்கட்டை ஒரே நேரத்தில் நாம் சுமக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பதில்லை. அவர் இரக்கத்தில் ஐசுவரியமுள்ளவராக ஒரு நாளைக்கு நாம் சுமக்க வேண்டிய ஒரு குச்சியை மட்டும் தருகிறார்.

அவர் தருவதை நாம் சுமந்தால் எளிதாய் சுமக்கலாம். ஆனால், நாமோ முந்தின நாளின் குச்சியை இன்னும் சுமந்து கஷ்டத்தைக் கூட்டுகிறோம். நாம் சுமப்பதற்கு முன்னே நாளைய சுமை எப்படியிருக்குமோ என்று மற்றொரு குச்சியை நமது சுமையோடு நாமே சேர்த்துக் கொள்ளுகிறோம்.

# சபை முக்கியமானது

## *The Church is Important*

*Dayton Keesee*



கிறிஸ்துவுக்குச் சொந்தமான சபை மிகவும் முக்கியமானது, ஆனால், அந்த முக்கியத்துவம் சம்மந்தமாக நீங்கள் வஞ்சிக்கப்படும் அபாயம் இருக்கிறது. அந்த அபாயம் ஆராதனைக்கு வருகை குறைதல், ஜனங்கள் ஐக்கியத்தையும், மகிழ்ச்சியையும் வேறிடத்தில் நாடுதல் போன்றவைகளால் வெளிப்படையாகத் தெரிகிறது. அநேகருக்கு கிறிஸ்து தேவை, ஆனால், சபை தேவை இல்லை. மதப் பிரிவுகள், கர்த்தருடைய சபையின் முக்கியத்துவத்தைத் தாக்கித் தகர்க்கிறது. சபைக்குள் ஒருவரையொருவர் கண்டுகொள்ளாமை, வேதாகம அறிவு இல்லாமை, முறிந்த ஐக்கியம் போன்றவைகள் சபையின் முக்கியத்துவம் சம்மந்தமாக எதிரான பிரச்சனைகளை ஏற்படுத்துகிறது.

சபை முக்கியமானது என்பதை நாம் எப்படி அறிகிறோம்? கிறிஸ்து தம் சுய ரத்தத்தினாலே சபையை வாங்கினார் (அப். 20:28). உங்கள் இரத்தம் உங்களுக்கு எவ்வளவு முக்கியமானது? உங்கள் வீட்டை விட மதிப்பானதா? உங்கள் வங்கிக் கணக்கை விட மதிப்புள்ளதா? உங்கள் வேலையை விட மதிப்பானதா? கிறிஸ்துவின் இரத்தம் அவருக்கு எவ்வளவு மதிப்புள்ளதாயிருந்திருக்கும்? அதற்கு நீங்கள் பதிலளிக்கும் போது, சபை கிறிஸ்துவுக்கு எவ்வளவு முக்கியமானது என்பதை நீங்கள் அறிந்து கொள்வீர்கள், ஏனென்றால், சபைக்காக கிறிஸ்து தம்முடைய இரத்தத்தையே சிந்தினார்! நீங்கள் சபைக்காக உங்கள் இரத்தத்தைக் கொடுக்க வேண்டியிருந்தால், சபை உங்களுக்கு எவ்வளவு முக்கியமானது என்பதற்கு அதுவே சிறந்த நிருபணமாயிருக்கும்.



சபை முக்கியமானது. ஏனென்றால், சரீரமாகிய சபைக்கு கிறிஸ்து இரட்சகராயிருக்கிறார் (எபே. 5:23). நித்தியத்திற்கும் கிறிஸ்து உங்கள் இரட்சகராயிருக்க வேண்டுமென்று விரும்புகிறீர்களா? (எபி. 13:20). அப்படியானால், நீங்கள் மரண பரியந்தம் உண்மையுள்ள அங்கத்தினராக இருக்க வேண்டும் (வெளி. 2:10). கிறிஸ்து உங்களை இரட்சிக்க நீங்கள் சபையில் அங்கத்தினராக இருப்பது அவசியமாக இருக்கிறபடியால் (பிலி. 2:12). சபை உங்களுக்கும், உங்கள் எதிர்காலத்திற்கும், நித்தியத்திற்கும் முக்கியமானதாகும் (II பேதுரு 1:10).

சபை முக்கியமானது. ஏனென்றால், *எல்லாவற்றையும் எல்லாவற்றாலும் நிரம்புகிறவருடைய நிறைவாகிய சரீரமான சபைக்கு கிறிஸ்து தலையாயிருக்கிறார்* (எபே. 1:22). கிறிஸ்து சபையின் நிறைவாயிருக்கிறபடியால் நாம் சகல பரிபூரணத்தாலும் நிறையப்பட வேண்டுமென்றால் சபையில் இருக்க வேண்டும் (எபே. 3:14-19; பிலி. 1:9-11; மத். 5:48). கிறிஸ்து மனித இனத்திற்கு எவைகளையெல்லாம் செய்ய விரும்புகிறாரோ அவைகளை சபை மூலமாகச் செய்யவே திட்டமிட்டிருக்கிறார். இது தனிப்பட்ட முறையில் உங்களுக்கு சபையை முக்கியமாக்குகிறது.

சபையின் முக்கியத்துவத்தைக் காண மற்றுமொரு வழி, சபையை அடையாளப்படுத்தும் வேதாகம உருவக நடையை கவனிக்க வேண்டும். சரீரமாகிய சபைக்கு கிறிஸ்துவே தலையாயிருக்கிறார் (கொலோ. 1:18). சரீரம் தலையிலிருந்து பிரிந்து சென்றால் அது எவ்வளவு பயங்கரமான காட்சியாயிருக்கும். உங்கள் தலைக்கு உங்கள் சரீரம் முக்கியமானதா? அப்படி முக்கியமானதென்றால் அந்த அளவுக்கு சபை கிறிஸ்துவுக்கும் முக்கியமாக இருக்கிறது.

சபை முக்கியமற்றது என்று சொல்வது சரீரத்திலிருந்து கிறிஸ்துவின் இரத்தத்தை எடுப்பது போன்றதாகும். என்னுடைய மைத்துனர் பிணத்தை அடக்கம் செய்பவர். மரணத்திற்கு பிறகு பிறருடைய சரீரத்தை அவர் அடக்கம் பண்ணுவதை நான் பார்த்திருக்கிறேன். இரத்தம் இல்லாத சரீரத்தை நாம் பார்க்க சகிக்காது! கிறிஸ்து தம்முடைய இரத்தத்தை சபைக்காக கொடுத்திருப்பதால் சபையின் முக்கியத்துவத்தை நாம் குறைப்பதன் மூலம் அவருடைய இரத்தத்தை சரீரத்திலிருந்து நீக்கும் முயற்சியில் ஈடுபடாமலிருக்க தேவன் நம்மைக் காப்பாராக!.

சபை முக்கியமில்லையென்றால், கிறிஸ்து ராஜ்யமில்லாத ராஜாவாகவும், சரீரமில்லாத தலையாகவும், கொடிகளில்லாத திராட்சைச் செடியாகவும், ஆடுகளில்லாத மேய்ப்பராகவும், இரத்தமில்லாத சரீரமாகவும் இருப்பார். இத்தகைய காட்சி நமக்கு நடுக்கத்தைத் தர வேண்டும்!

உங்கள் சிந்தனையில் சபையின் முக்கியத்துவத்தை நீங்கள் உயர்த்த விரும்புகிறீர்களா?.



# வியாபார உலகில் நேர்மை

## HONESTY IN THE BUSINESS WORLD

*Eulene Ramsey*

"**மு**தலாவது தேவன், மற்றவர்கள் இரண்டாவது, நான் கடைசி" என்கிற இத்தாரக மந்திரத்தை கிறிஸ்தவர்களாக இருந்து கொண்டு வியாபாரம் செய்கிற கிறிஸ்தவப் பெண்மணிகள் எப்பொழுதும் மனதில் கொள்ள வேண்டும். ஏனென்றால், ஒருவர் தேவனுக்கும், தன் முதலாளிக்கும், தன் குடும்பத்திற்கும், தனக்கும் கணக்குக் கொடுக்க வேண்டும். வேலைப்பளுவின் காரணமாக ஒருவர் அனுதின அலுவல்களில் சோர்ந்து போகிறபடியால் யாரோ ஒருவரை ஏமாற்ற வேண்டிய சூழ்நிலை சுலபமாக வருகிறது. ஆனால், எல்லாக் கிறிஸ்தவர்களுடைய அன்றாட வாழ்க்கையில் உண்மையும், நேர்மையும் முக்கியப் பங்காக இருக்க வேண்டும்.

இப்பொழுது வியாபாரம் செய்யும் ஒரு கிறிஸ்தவப் பெண்ணின் பொறுப்புகளை தனித்தனியே பார்ப்போம்.

### தேவனுக்கு தன்னுடைய பொறுப்பு

ஒவ்வொரு உண்மையான கிறிஸ்தவருடைய வாழ்க்கையிலும் நம் ஆண்டவரும், அவருடைய வேலையும் எப்போதும் முதலிடத்தில் வர வேண்டும். வியாபாரம் செய்யும் அநேகப் பெண்கள் வியாபார உலகில் எட்டு மணி நேரம் செலவு செய்வதால் வேலைப்பளு மற்றும் அழுத்தத்தினால் ஒய்வு என்கிற



சோதனைக்கு அடிபணிந்து, தேவனுக்குக் கொடுக்க வேண்டிய நேரத்தையும், கனத்தையும் கொள்ளையிடுகிறார்கள். அவர்கள் கிடைக்கும் நேரத்தில் ஆத்துமாக்களை சந்திப்பது, தேவையில் இருப்போருக்கு உதவி செய்வது, செய்யப்பட வேண்டிய ஏதோ ஒரு நற்கிரியைச் செய்வது போன்றவைகளைச் செய்வதற்குப் பதிலாக ஓய்வெடுத்துக் கொள்கிறார்கள். சிலர் வாரத்தின் இடைப்பட்ட நாளில் நடக்கும் வேத பாட வகுப்புகளில் கூட தங்கள் வேலையை சாக்காகப் பயன்படுத்தி கலந்து கொள்வதில்லை. இது கிறிஸ்து நம்முடைய ஜீவியங் களில் முதன்மையானவராக இல்லை என்பதை இந்த உலகுக்குத் தெரிவிக்கிறது! நம் தேவனுக்கு நாம் உண்மையுள்ளவர்களாக இருந்தால் தேவ காரியங்களுக்கு முக்கியத்துவம் கொடுப்போம்.

### முதலாளிக்கு தன்னுடைய பொறுப்பு

ஒருவருடைய தனிப்பட்ட வாழ்க்கையை வீட்டில் விட்டு விட்டு காலை எட்டு மணியிலிருந்து மாலை ஐந்து மணி வரை முற்றிலும் மாறுபட்ட நபராக பணியாற்றுவது கடினமானது தான். ஆனால், ஒரு முழுநாளின் சேவையை தன் முதலாளிக்கு அளித்து உண்மையாயிருக்க வேண்டுமென்றால், அவருடைய மனது வெளியிலுள்ள சிந்தனைகளால் சிதறடிக்கப்படக்கூடாது. இது வீடு மற்றும் குடும்ப செயல்பாடுகளுக்கு நல்ல திட்டத்தை தீட்டும் அவசியத்தை ஏற்படுத்தும். காபி அல்லது டீ குடிப்பதற்கு அதிக நேரத்தை எடுத்துக் கொள்வது, சக ஊழியர்களிடம் நீண்ட நேரம் உரையாடுவது போன்றவைகள் முதலாளியினுடைய நேரத்தைத் "திருடுவதற்கு" சமம் என்பதை அநேகர் உணர்ந்து கொள்ளத் தவறுகிறார்கள். ஒருவருக்கு சிறந்ததைக் கொடுக்கத் தவறும் போது அது நேர்மையற்ற ஒன்றாகி விடுகிறது. அநேக வியாபாரங்கள் நம்பகத் தன்மையை உள்ளடக்குவதால் ஒருவருடைய எஜமான் விசுவாசம் மிக முக்கியமானது. இந்த நம்பிக்கைக்கு துரோகம் செய்து விட்டு ஒருத்தியாள் உண்மையாகவே, நேர்மையாக இருப்பது சாத்தியமா?

### குடும்பத்திற்கு தன்னுடைய பொறுப்பு

ஒரு மனைவி தன் கணவனை வாழ்நாள் முழுவதும் நேசிப்பதாகவும், பராமரிப்பதாகவும் உறுதிமொழி எடுத்திருக்கிறாள். அப்படியிருக்கும் போது அவளுடைய வாழ்க்கை வெளியிலுள்ள விருப்பங்களால் நிரப்பப்பட்டிருந்தால், அதன் காரணமாக தன் கணவனோடு வாழ்க்கையைப் பகிர்ந்து கொள்ள நேரமில்லையென்றால், கணவனிடத்தில் அவளால் உண்மையாயிருக்க முடியுமா? தங்கள் கணவன்மார்களிடத்தில் உண்மையான பங்காளியாக,

ஏற்றதுணையாக இருக்க நேரமில்லாத பெண்களை நீங்கள் உங்கள் அக்கம் பக்கத்தில் பார்த்ததில்லையா? தாய்மார்களாயிருக்கிற, வியாபாரம் செய்கிற எல்லா கிறிஸ்தவப் பெண்களும் வீட்டில் அவர்கள் வகிக்கும் பங்கையும், கர்த்தருடைய வழியில் பிள்ளைகளை வழி நடத்துவதன் அவசியத்தையும் உணர்ந்திருக்கிறார்கள். ஆயினும், தற்கால பொருளாதார நிலைமை மற்றும் நிதிப் பற்றாக்குறை போன்றவை வியாபார உலகில் அவர்கள் பிரவேசிக்க நிர்பந்திக்கிறது. இது தான் உண்மையான சூழ்நிலையென்றால், வெளி வேலையின் மூலம் அவன் தன்னுடைய குடும்பத் தேவைகளை சந்தித்துக் கொள்ள தேவன் உதவி செய்வார். ஆனால், கூடுதலான வருமானத்திற்கு அவசியமில்லையென்னும் சூழலில் குடும்ப வாழ்க்கையை தியாகம் செய்து விட்டு வியாபார உலகின் பொறுப்புகளை ஏற்பதற்கு முன்பு குறிப்பிட்ட காலம் யோசித்து, ஜெபித்து அந்த முடிவை எடுக்க வேண்டும்.

**தனக்கான பொறுப்புகள் :**

அவளுடைய மற்ற பொறுப்புகளைப் பார்த்த பிறகு அவள் தனக்கும் உண்மையாயிருக்க வேண்டுமென்பது ஏறக்குறைய முரண்பட்ட கருத்து போல் தெரிகிறது, ஆனால், இது அவசியமாயிருக்கிறது. அவள் தன்னுடைய சிருஷ்டிகருடைய சாயலில் படைக்கப்பட்டிருக்கிறபடியால் தன்னுடைய ஒவ்வொரு சிந்தனைக்கும், செயலுக்கும் பொறுப்பாளியாயிருக்கிறாள். ஒரு கிறிஸ்தவளாக அவள் தன் சக ஊழியர்களிடத்திலும், முதலாளியிடத்திலும், குடும்பத்திலும், நண்பர்களிடத்திலும் முன் மாதிரியாக இருக்க வேண்டும். அவள் தன்னை சுத்தமாகவும், பாங்காகவும் வைத்துக் கொள்ள நேரத்தைக் கண்டு பிடிக்க வேண்டும். இது கிறிஸ்தவ மாதிரியின் ஓர் அங்கமாக இருக்கிறது. அவள் தன் அறிவைப் பெருக்கிக் கொள்ளும் செயல்களில் ஈடுபட வேண்டும். சுருக்கமாக சொல்வதானால், அவள் மற்றவர்களுக்கான தன்னுடைய பொறுப்பை தனக்கு உண்மையாயிருப்பதற்கு தடையாக இருக்க அனுமதிக்கக் கூடாது.

வெளியில் வேலை செய்யும் எந்த ஒரு பெண்ணும் பிறர் உதவியில்லாமல் தன்னுடைய கடமைகளை நிறைவேற்றமுடியாது. *"அவருடைய கற்பனைகளை நாம் கைக் கொண்டு அவருக்கு முன்பாகப் பிரியமானவைகளைச் செய்கிறபடியால் நாம் வேண்டிக் கொள்ளுகிறதெதுவோ அதை அவராலே பெற்றுக் கொள்ளுகிறோம்"* (1யோவா 3:22). ஒரு பெண் பெற்றிருக்கக் கூடிய வல்லமையான ஆயுதம், பரமபிதாவோடு நெருக்கமான ஜெப உறவை வைத்துக் கொள்ளும் பாக்கியம் தான். அதை நாம் தொடர்ந்து பயன்படுத்துவோம்!





# புத்தி சொல்லுதல்

## EXHORTING

*Tom Kelton*

புத்திச் சொல்லும் ஒருவர், புதுப்பிக்கப்பட்ட தைரியம், எண்ணம் மற்றும் நம்பிக்கையால் மற்றவர்களை ஊக்குவிக்கத் தூண்ட முடியும். இத்தகைய மனிதன் அருகில் இருந்து கொண்டு நம்மை மேம்படுத்தவும், காரியங்களைச் செய்யத் தூண்டவும் செய்கிறார்.

புத்தி சொல்பவர் பல்வேறுபட்ட தேவைகள் சந்திக்கப்படும்படியாக வேறுபட்ட வழிகளில் உங்களை உற்சாகப்படுத்தலாம். ஆனால், அதன் விளைவு எப்போதும் உங்களைக் கட்டவும், சிறந்தவர்களாக்குவதுமாகவே இருக்கும்.

புத்திமதி சொல்லுதலின் தாக்கம் பல்வேறுபட்ட வழிகளில் வெளிப்படுத்தப்படலாம். அப். 11:22,23 வசனங்களில், நாம் இவ்விதமாக சொல்லப்பட்டிருக்கிறோம். *"எருசலேமிலுள்ள சபையார் இந்தக் காரியங்களைக் குறித்துக் கேள்விப்பட்ட போது, அந்தியோகியா வரைக்கும் போகும்படிக்குப் பர்னபாவை அனுப்பினார்கள். அவன் போய்ச் சேர்ந்து, தேவனுடைய கிருபையைக் கண்ட போது, சந்தோஷப்பட்டு கர்த்தரிடத்தில் மனநிர்ணயமாய் நிலைத்திருக்கும்படி எல்லாருக்கும் புத்தி சொன்னான்"*.

பர்னபா அவர்கள் தொடர்ந்து நிலைத்திருக்கும்படி உற்சாகப்படுத்தினார். புத்தி சொல்கிற ஒருவர் நீங்கள் தொடர்ந்து கர்த்தரோடு நடக்கும்படி உங்களை ஊக்கப்படுத்த முடியும். புத்தி சொல்கிறவர்களுக்கு மற்றவர்களிடம் சவால் விட்டு அவர்களிடமிருந்து சிறந்தவைகளை வெளியே கொண்டு வந்து கர்த்தருக்காக தொடர்ந்து அவர்கள் சிறப்பாகச் செயல்படத் தூண்டுவதெப்படி என்பது தெரியும்.

அப். 14:21,22 வசனங்களில் நமக்கு இவ்விதம் சொல்லப்பட்டிருக்கிறது. *"அந்தப் பட்டணத்தில் அவர்கள் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து, அநேகரைச் சீஷராக்கின பின்பு, லீஸ்திராவுக்கும் இக்கோனியாவுக்கும் அந்தியோகியாவுக்கும் திரும்பி*

*வந்து சீஷருடைய மனதை திடப்படுத்தி, விசுவாசத்திலே நிலைத்திருக்கும்படி அவர்களுக்குப் புத்தி சொல்லி, நாம் அநேக உபத்திரவங்களின் வழியாய் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்க வேண்டுமென்று சொன்னார்கள்".*

நெருக்கடியான வேளைகளில் புத்தி சொல்கிறவர் ஒரு பலமான தூணைப் போலிருக்கிறார். சூழ்நிலைகள் கடினமாகும்போது, நாம் தொடர்ந்து செல்ல நம்மை எப்படி ஊக்கப்படுத்துவதென்பது அவருக்குத் தெரியும்.

சந்தேகக் கடலில் மூழ்குகின்ற கிறிஸ்தவனுக்கு விசுவாசத்தைக் காக்கிற ஒருவரை அடையாளம் காட்டுவது எப்படி என்பது புத்தி சொல்பவர்களுக்கு தெரியும். இன்று சபையில் புத்தி சொல்லுதலைப் போல அலட்சியப்படுத்தப்படுகிற ஊழியம் எதுவுமில்லை என்பதை நான் அறிந்திருக்கிறேன். குற்றம் கண்டு பிடிப்பது மிக எளிது. அதே நேரம் ஊக்கப்படுத்துதலைக் கண்டு பிடிப்பது மிகக் கடினம்.

பிறரை உற்சாகப்படுத்தும் ஊழியத்தை விட அதிகம் தேவைபடுகிற ஊழியம் எதுவென்று எனக்குத் தெரியாது. ஒருவேளை, காரியங்கள் எவ்வளவு நன்றாகப் போனாலும் ஒவ்வொருவராலும் பிறரைக் கொஞ்சமாகிலும் உற்சாகபடுத்த முடியும். ❖

## கர்த்தர் என்...

| | | |
|---|---|---|
| ஆசிரியர் | – | நான் போதிக்கப்படுகிறேன் |
| செட்டை | – | நான் மூடப்படுகிறேன் |
| கன்மலை | – | நான் பாதுகாப்பாக இருக்கிறேன் |
| மேய்ப்பர் | – | நான் போஷிக்கப்படுகிறேன் |
| தலைவர் | – | நான் காக்கப்படுகிறேன் |
| இரட்சிப்பு | – | நான் விடுதலையாக்கப்படுகிறேன் |
| வழிகாட்டி | – | நான் வழிநடத்தப்படுகிறேன் |
| நம்பிக்கை | – | நான் உறுதிப்படுத்தப்படுகிறேன் |
| சிருஷ்டிகர் | – | நான் நேசிக்கப்படுகிறேன் |
| தகப்பன் | – | நான் ஏற்றுக்கொள்ளப்படுகிறேன் |





# " ஒருவனுக்கும் கடன்படாதிருங்கள் "

(ரோமர் 13:8)



## "Owe No Man Anything..."

(Romans 13:8)

*Don L. Norwood*

**நாம்** வாழ்கிற நாகரீக சமுதாயத்தில், பெரும்பாலான குடிமக்களுக்கு கடன் மிக எளிதாகக் கிடைக்கிறது. சில வழிகளில் நாம் பார்க்கும்போது இது நன்றாக இருக்கிறது. ஆனால், அதே வேளையில் மக்கள் அதிகமாக செலவழிக்கும்படியான சோதனையையும் உண்டு பண்ணுகிறது. ஒருவர் சுலபமாக கிடைக்கும் கடனை தவறாகப் பயன் படுத்தினால் திரும்பிச் செலுத்த முடியாத அளவுக்கு கடன் சுமையை சுமக்க வேண்டியதாகிறது. அப்போது கடன் வாங்கியவர் மிகுந்த சிரமத்திற்குள்ளாகிறார். ஒரு கிறிஸ்தவனுக்கு இது கர்த்தருடைய போதனையை மீறச் செய்து பாவத்தில் தள்ளி விடுகிறது (*1 யோவா 3:4*), இது ஒருவருடைய குணாதிசயத்தின் மீது அவ நம்பிக்கையையும், கவலையையும், அவப்பெயரையும் ஏற்படுத்துகிறது. வழக்கமாக இது வீட்டில் சந்தோஷமின்மையை ஏற்படுத்துகிறது. இவ்விதமாக ஒருவர் வாங்கிய கடனுக்கு அதிக விலை கொடுக்க வேண்டியதாயிருக்கிறது.

*ஒருவனுக்கும் கடன்படாதிருங்கள்...* (ரோமர் *13:8*). இந்த வசனத்தின் பொருள் என்ன? முதலாவது, வாங்கிய கடனை உரிய காலத்தில் திருப்பிக் கொடுக்கும் போது கடன் வாங்குவதில் தவறு இல்லை. சூழ்நிலை காரணமாக பணத்தைத் திருப்பிக் கொடுக்க முடியாத பட்சத்தில் கடன் கொடுத்தவரிடத்தில் நீங்கள் போய், பிரச்சனையை விளக்கி புதிதாக ஒரு நாளை கடனை திருப்பிச் செலுத்தும் நாளாக ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். நீங்கள் கடனை வாங்கி விட்டு, அதைத் திருப்பிக் கொடுக்க எந்த முயற்சியும் எடுக்காமலிருந்தால் நீங்கள் கர்த்தருக்கு விரோதமாகவும், பணத்தைக் கொடுப்பவருக்கு விரோதமாகவும் பாவம் செய்கிறீர்கள்.

இது மிகவும் முக்கியமான விஷயம். ஏனென்றால், இது ஒருவருடைய அழியாத ஆத்துமாவை நஷ்டப்படுத்திவிடும், அத்தோடு

ஒருவருடைய பெயருக்கும், குணத்துக்கும் அவப்பெயரை ஏற்படுத்தி விடும். திரளான ஐசுவரியத்தைப் பார்க்கிலும் நற்கீர்த்தியே தெரிந்து கொள்ளப்படத்தக்கது; பொன், வெள்ளியைப் பார்க்கிலும் தயையே நலம் " என்று வேதாகமம் சொல்கிறது (நீதி. 22:1). " தாழ்மைக்கும் கர்த்தருக்குப் பயப்படுதலுக்கும் வரும் பலன் ஐசுவரியமும் மகிமையும் ஜீவனுமாம் " (நீதி. 22:4). எனவே, ஒருவர் பணத்தைக் கையாளும் பொறுப்பைப் பற்றி சிந்திக்கும்போது, குறிப்பாக, கடன் வாங்குவதற்கு முன்பு கர்த்தருடைய இந்த வார்த்தைகளை ஆழ்ந்து சிந்தித்தால் உண்மையாக அவர் ஞானமுள்ளவராக இருப்பார்.

ஒருவர் கடன் வாங்கி அதைத் திருப்பிக் கொடுக்கவில்லையென்றால் கடன் கொடுத்தவருக்கும், தனக்கும் தீங்கிழைப்பது மட்டுமின்றி அவர் கிறிஸ்தவராக இருந்தால் தான் தரித்திருக்கும் பரிசுத்த நாமத்திற்கும் அவமானத்தைக் கொண்டு வருகிறார்.

## ஒரு தாயின் ஜெபம்

காலையிலிருந்து மாலை வரை, இனி நான் தேவையில்லையெனும் நிலைவரை
என் பணிகளெல்லாம் முடியும் வரை
தயவாய் என்னைத் தொடர்ந்து வழிநடத்தும் கர்த்தாவே.

என் சிறுபிள்ளைகள் உறுதியாக வளர்வதைக் காணும் வரை
அவர்கள் கண்ணீர் விடும் போது அவர்களுக்கு தோள் கொடுக்கும் வரை
தயவாய் என்னை உயிரோடு வைத்தருளும் கர்த்தாவே.

எங்கள் வீட்டை சந்தோஷமான இடமாக வைத்திருக்கும் வரை
பிள்ளைகளை பாவத்திலிருந்து விலகி காத்துக் கொள்ளும் வரை
நான் முன் உதாரணமாய் இருக்க
தயவாய் எனக்கு உதவி செய்தருளும் கர்த்தாவே.

பாறை போன்ற வாழ்க்கைப் பாதையை அவர்கள் எதிர்கொள்ளும் வரை
எந்தத் தாயாவது தன்னுடைய பாரத்தை இறக்கி வைக்கத் துணிவாளா?

ஒரு தாய் நன்றியோடு மெல்லிய குரலில்
"கர்த்தாவே நான் சிறந்ததை செய்திருக்கிறேன்" என்று சொல்லும் போது தான்
அவள் உண்மையாகவே இளைப்பாறுதலை உணர முடியும்.





# வாலிபனே, தேவனிடத்தில் திரும்பு!

## O! Young Man, Turn to God

*P.R.Swamy*

ஒரு வாலிபன் தன் வாழ்க்கையை சந்திக்கும்பொழுது, அவனுக்குள் எத்தனையோ விதமான போராட்டங்கள், பயம், வருங்காலத்தைப் பற்றி என்னவெல்லாமோ கனவு காண்கிறான். ஆனால், வழியில் எத்தனையோ எதிர்ப்புகள், தடைகள், ஏமாற்றங்கள் இருக்கும். அதை அறியான்.

வாலிபத்தைப் போல் ஒரு சுவாரஸ்யமான, மகிழ்ச்சியான, நாட்களுமில்லை, அதே சமயத்தில் அதைப்போல ஏமாற்றத்திற்குள்ளாக்கும் பருவமும் வேறில்லை. " இளங்கன்று பயமறியாது " என்ற முதுமொழிக்கிணங்க, பிரதிபலனைக் குறித்து கவலைப்படாமல், துணிச்சலோடு எதையும் முயன்று பார்க்கும் சுபாவம், வாலிபப் பிராயத்திலுள்ள ஆண், பெண் இரு பாலருக்கும் உண்டு. வாலிபனின் ஜீவியம் ஒரு சவால் விடக்கூடிய ஜீவியம் தான். அவனுடைய ஜீவியத்தின் வெற்றியும், தோல்வியும் எதைப் பொறுத்திருக்கிறது? அவர்கள் வாழ்க்கையினுடைய வெற்றியின் ரகசியந்தான் என்ன?.

அவர்களது வெற்றியின் ரகசியம், இரண்டு அம்சங்களைக் கொண்டதாக இருக்கலாம்.

### I. எச்சரிக்கையாயிருக்கும் மனோபாவம் :

எச்சரிக்கையாயிருத்தல் என்றால் ஜாக்கிரதையாயிருத்தல் என்று பொருள். அதாவது, எதையும் ஏனோதானோவென்று எடுத்துக் கொள்ளாமல், வினயமாக, ஞானத்தோடு செயல்படுவதைக் குறிக்கும். வாழ்வில் எல்லாம் தானாகவே அமைந்துவிடும் என்ற நோக்கத்தை தவிர்த்து, குறிக்கோளுடன் கூடிய முயற்சியையும் இது குறிக்கும். இவையெல்லாம், வாலிபன் ஞானத்தோடு எதை தேர்ந்தெடுக்கிறானோ அதைப் பொறுத்தது. முன் பின் தெரியாமல் உணர்ச்சிக்கு அடிமைப் பட்டு, கவர்ச்சியை தேர்ந்தெடுத்து அதன் பிரதிபலனாக பலவித இன்னல்களை அடைந்து, மனமொடிந்து, மாளா துக்கத்தில் இருக்கும் வாலிப சகோதர, சகோதரிகளை நாம் அன்றாடம் சந்திக்கிறோம்.

கொஞ்சம் புத்திசாலித்தனமான காரியங்களைத் தேர்ந்தெடுத் திருந்தால், இந்நிலைக்கு ஆளாகி இருக்க மாட்டேனே என்று புலம்பு வோர் ஏராளம். வேதமும் இதைத்தான் கூறுகிறது. " தெளிந்த புத்தியுள்ள வர்களாயிருங்கள், விழித்திருங்கள். ஏனெனில், உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம் போல எவனை விழுங்கலாமோ என்று வகை தேடிச் சுற்றித் திரிகிறான் " (1 பேதுரு 5:8). இப்படிப்பட்ட அநேக எச்சரிக்கைகள் வேதத்தில் கொடுக்கப்பட்டிருக்கிறது.

## II. வெற்றியின் இரகசியம் தெய்வீக வழிகாட்டியில் இருக்கிறது

தெய்வீக வழிகாட்டி என்றால், தேவனுடைய வசனத்தால் வழி நடத்தப்படுதல். நாம் எதைச் செய்தாலும், தேவனுடைய சித்தத்திற்கு உட்பட்டு செயல்பட வேண்டும்.

நம் பெற்றோர்கள் நம் மீது எவ்வளவு அன்பு கூறினாலும், அவர்கள் நமக்கு போதுமான வழிகாட்டியாக இருக்க முடியாது. நம் ஆசிரியர்கள் எவ்வளவு படித்தவர்களாக இருந்தாலும் அவர்களும் நமக்குப் போதுமான வழிகாட்டியாக இருக்க முடியாது. நம் நண்பர்கள் நம்மை எவ்வளவு தான் நேசித்தாலும், அவர்களும் நமக்கு போதுமான வழிகாட்டியாக இருக்க முடியாது. இன்னும் நம்முடைய பிரசங்கிமார்கள், போதகர்கள் கூட நமக்கு போதுமான வழிகாட்டியாக இருக்க முடியாது. (எரேமியா 10:23).

நம்மை நித்திய வழியில் நடத்தவல்லது தேவனுடைய வார்த்தை ஒன்று தான். ஆகவே சாலமோன், " கட்டளையே விளக்கு, வேதமே வெளிச்சம், போதக சிட்சையே ஜீவ வழி " என்றார் (நீதி. 6:23).

வேத வசனங்கள், நாம் பரிசுத்தமானவர்களாகவும் நேர்மையுள்ள வர்களாகவும் இருக்க வேண்டும் என்று போதிக்கிறது. எப்படிப்பட்ட தோழமையைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்றும் கற்றுக் கொடுக் கிறது. தேவனை விசுவாசியாமல், அவரை கனம் பண்ணாத மக்களோடு உறவு வைத்துக்கொண்டால், அது நம்மை அழிவின் பாதையில் அழைத்துச் செல்லும். அதற்குப் பதில் தேவ ஞானத்தை தேர்ந்தெடுத்து, தேவ பக்தியுள்ள மனிதர்களோடு தொடர்பு கொண்டிருக்கும் பொழுது, நாம் நல்ல பாதையில் நடத்தப்படுவோம்.

ஒரு முக்கியமான கேள்வியை சங்கீதக்காரன் தாவீது வாலிபர் களைப் பார்த்து கேட்கிறான். " வாலிபன் தன் வழியை எதினால் சுத்தம் பண்ணுவான்?" யோசேப்பு, தானியேல் மற்றும் தானியேலோடு சிறை வாசத்தில் கொண்டு வரப்பட்ட மூன்று எபிரெய வாலிபர்கள் இவர்கள் எல்லோரும் தங்கள் வழிகளை சுத்தம் செய்தவர்கள்.

வாலிபன் தன் வழியை எதினால் சுத்தம் பண்ணுவான்? அதற்கு விடையளிக்கும் போது தாவீது கூறுகிறார். " உமது வசனத்தின்படி



தன்னைக் காத்துக் கொள்ளுகிறதினால் தானே! இதை செயலாற்ற மிகுந்த பிரயாசம் தேவை. வாலிபன் சுத்திகரிக்கப்படுவதற்கான மாதிரி தேவனுடைய வார்த்தையில் இருக்கிறது. கிறிஸ்துவும் பாவமில்லாத வராக இவ்வுலகத்தில் ஜீவித்து, நமக்கு ஒரு மாதிரியை வைத்துப் போயிருக்கிறார். அவரை நம் முன்னோடியாக வைத்து அவரைப் போல் மாற முயற்சிக்க வேண்டும் ".

## III. வாலிபர்கள் அநேக அபாயங்களுக்கு உள்ளாக்கப்படுகின்றனர்.

முதலாவது காரணம், ஆரம்ப நாட்களில் சரியான பயிற்சி கொடுக்கப்படாமலிருத்தல். இரண்டாவது, வாழ்க்கையில் அனுபவம் இல்லாமை. மூன்றாவது, உண்மையல்லாத வெறும் கவர்ச்சிக்கு ஒப்புக்கொடுத்தல். நான்காவது, பிரதிபலனைப் பற்றிக் கவலைப் படாமல், தற்காலிக உலக ஆசாபாசங்களுக்கு ஒப்புக்கொடுத்தல்.

வாலிபர்கள், சங்கீதக்காரன் தாவீது கூறிய அறிவுரையைக் கேட்டு, தேவனுடைய வசனத்தால் தங்களை சுத்திகரித்துக் கொள்ளுவார்க ளேயானால், இந்த பலவீனங்களிலிருந்தும், ஒழுக்கக் கேட்டிலிருந்தும் காப்பாற்றப்படலாம். தேவனுடைய வார்த்தையை சரியாகப் பின்பற்றும் போது, தங்களைக் கட்டுப்படுத்தவல்ல சக்தியையும், ஞானத்தையும் பெறுவார்கள். இயேசு கிறிஸ்து தாம் சோதிக்கப்படும் போது, தேவ வசனத்தைக் கொண்டு சாத்தானை மடங்கடித்தார். (மத். 4:1-11)

அதைப் போல வாலிபனும் சோதனையிலே விழும்போது, தேவனுடைய வார்த்தையைக் கொண்டு சாத்தானை மேற்கொள்ள முடியும். வாழ்க்கைப் பாதையில் வேத வசனம் ஒரு கலங்கரை விளக்கம் போல இருந்து, அபாயங்களை சுட்டிக் காட்டி, பாதுகாப்பான வழியில் நம்மை நடத்தும். இல்லாவிட்டால், எது சரி, எது தவறு, எது நன்மை, எது தீமை என்று நாம் எப்படி வரையறுக்க முடியும்.

மேலும், வேத வசனம் தீய செல்வாக்கினின்று நம்மை காப்பாற்று கிறது. நாம் வாழும் இந்த உலகத்தில் நம்மை கேட்டில் அமிழ்த்தக் கூடிய எத்தனையோ வித கவர்ச்சிகள் உண்டு. எந்தப் பக்கம் திரும்பினாலும் நம்மைத் தீய வழியில் உந்தித் தள்ளும் கெட்ட செல்வாக்கும் உண்டு. தீய நண்பர்கள், சினிமா போன்ற எத்தனையோ காரியங்கள் உலகில் உண்டு. தாவீது கூறுகிறார். " நான் உமக்கு விரோதமாய் பாவஞ் செய்யாதபடிக்கு, உமது வாக்கை என்னிருதயத்தில் வைத்து வைத்தேன்" (சங். 119:11). நாம் தேவனுடைய வசனத்தில் நடத்தப்படும் பொழுது, தேவன் நம்மை காத்துக்கொள்வார்.

வாலிபர்கள் தங்கள் வாழ்க்கைப் பயணத்தை வெற்றியுடன் தொடர, அவர்களுக்கு ஒரு சரியான அளவீடும், வழிகாட்டியும்

தேவை. அவர்கள் வாழ்க்கைப் படகு, அறியாத கடலிலே செல்ல வேண்டியிருக்கும். சரியான பாதையில் நடத்த ஒரு திசை காட்டும் கருவி தேவை. தேவ வசனத்தைப் பிடித்துக் கொண்டு செல்லும்போது சரியான திசையில் செல்வார்கள்.

அனுபவம் என்பது ஒரு பள்ளிக்கூடம். வாழ்க்கையானது, வேதாகமத்தின் அடிப்படையில் அமைக்கப்படும் பொழுதுதான் அதன் பாடங்களை நன்று கற்றுக்கொள்ள முடியும். வாலிபர்கள் தங்களுக்கு தாங்களே வழிகாட்டியாக இருக்க முடியாது. தேவ வசனத்திற்கு முழுவதும் தங்களை ஒப்புக் கொடுக்க வேண்டும். தேவனுடைய வசனம் வெறும் ஒரு சட்ட புத்தகமல்ல. நமக்கு வேண்டிய ஆலோசனை களைக் கூறி, அவ்வப்பொழுது எச்சரித்து, ஆபத்துக் காலத்தில் உதவி செய்யும் ஓர் நல்ல நண்பன், ஓர் ஆசான்.

ஆகையால் பிரியமுள்ள வாலிப சகோதரனே, சகோதரியே, உன் இருதயத்தை தேவனுடைய வார்த்தையால் நிரப்பு. தேவனுக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்யாமலிருப்பாய் (சங். 119:11). அப்பொழுது நீ உன் நடைகளில் பிசகுவதில்லை (சங். 37:31).

தேவனுடைய வசனம் நம் விசுவாசத்திற்கு ஆதாரம். விசுவாசம் கேள்வியினால் வரும், கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும், (ரோமர் 10:17). நாம் சத்திய வசனத்தினாலே ஜெநிப்பிக்கப்படுகிறோம் (யாக். 1:18). தேவனுடைய வசனத்தின் துணை கொண்டுதான் நாம் சரியான ஆராதனையையும் செய்ய முடியும் (யோவான் 4:24; 17:17).

வாலிப சகோதரனே, சகோதரியே உன் இருதயத்தை தேவனுடைய வார்த்தையினால் நிரப்பு. அப்படியென்றால் தேவனுடைய சித்தத்தை அறிந்து கொள்ள வேண்டும் என்ற வாஞ்சை உண்டாக வேண்டும். அதன் மூலம் நல்ல பழக்க வழக்கங்களை உண்டாக்க வேண்டும். உன் வாழ்க்கையை கூர்ந்து கவனித்து, தேவ வசனத்திற்கு மாறான காரியங்களை விட்டு விலக வேண்டும்.

தேவனுடைய வார்த்தைகளை தினமும் தியானிக்க வேண்டும். அவ்வசனங்களை உள்ளத்தின் ஆழத்தில் பதித்து வைக்க வேண்டும். சங்கீதக்காரன் தாவீது உரைத்தது போல " துன்மார்க்கருடைய ஆலோசனையில் நடவாமலும், பாவிகளுடைய வழியில் நில்லாமலும், பரியாசக்காரர் உட்காருமிடத்தில் உட்காராமலும், கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து, இரவும் பகலும் அவருடைய வேதத்தில், தியானமாயிருக்க வேண்டும். "

**மாயையே**

**நீ உன் இருதயத்திலிருந்து சஞ்சலத்தையும், உன் மாம்சத்திலிருந்து தீங்கையும் நீக்கிப்போடு. இளவயதும், வாலிபமும் மாயையே**
**– (பிரசங்கி. 11:10).**



**ஆராதனை**

# புதிய ஏற்பாட்டில் குறிப்பிடப்பட்டிருக்கும் நான்கு வகையான ஆராதனைகள்

## 4 Kinds of Worship Mentioned in the New Testament

*Ken Tyler*

### I வீணான ஆராதனை

இயேசு தம்முடைய நாட்களில் வாழ்ந்த பரிசேயர், வேதபாரகர் பற்றி, " *மனுஷருடைய கற்பனைகளை உபதேசங்களாகப் போதித்து,* **வீணாய் எனக்கு ஆராதனை செய்கிறார்கள்** " என்று சொன்னார் (மத். 15:9). அந்த ஜனங்கள் தமக்கு வீணான ஆராதனை செய்வதாக இயேசு விவரிப்பதைக் கவனியுங்கள். அவர்களுடைய ஆராதனை வீணான ஆராதனையானதற்கு இயேசு கொடுத்த காரணம், அவர்கள் "மனுஷருடைய கற்பனைகளை" உபதேசங்களாகப் போதித்ததுதான். இன்றும் அநேகர், செய்கிற காரியத்தில் " நீங்கள் உண்மையாயிருக்கும் வரை நீங்கள் எதை நம்புகிறீர்கள் என்பது ஒரு பொருட்டல்ல என்று சொல்லுகிறார்கள் ". இது உண்மையாக இருந்தால் மனுஷருடைய கற்பனைகள் என்று ஒன்று இருக்காது. நாம் மனுஷருடைய கற்பனைகளை உபதேசங்களாகப் போதித்தால் நாமும் இயேசுவின் நாட்களில் வீணான ஆராதனையை செய்த பரிசேயர், வேதபாரகரைப் போலாகி விடுவோம் என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும்.

### II அறியாத ஆராதனை

பவுல் கிரேக்க நாட்டிலுள்ள அத்தனே பட்டணத்தில் பிரசங்கம் செய்த போது, " *...அத்தேனரே, எந்த விஷயத்திலும் நீங்கள் மிகுந்த தேவ பக்தியுள்ளவர்களென்று காண்கிறேன். எப்படியென்றால், நான் சுற்றித் திரிந்து, உங்கள் ஆராதனைக்குரியவைகளைக் கவனித்துப் பார்த்த பொழுது, அறியப்படாத தேவனுக்கென்று எழுதியிருக்கிற ஒரு பலி பீடத்தைக் கண்டேன்; நீங்கள் அறியாமல் ஆராதிக்கிற அவரையே நான் உங்களுக்கு அறிவிக்கிறேன்* " (அப். 17:22,23) என்றார். முப்பதாம் வசனத்தில் பவுல் அந்த ஜனங்கள் அறியாமையுள்ள ஆராதனை

யிலிருந்து மனந்திரும்பும்படியாக அழைப்பு விடுக்கிறார். இன்று உலகில் அநேக கடவுள்கள் வணங்கப்படுகிறார்கள். ஆனால், ஒரே ஒரு கடவுள் இருக்கிறார் என்று தான் நாம் அறிந்திருக்கிறோம் என நம்புகிறேன். இயேசு, மத். 4:10-ல் இவ்விதமாகச் சொன்னார். " உன் தேவனாகிய கர்த்தரைப் பணிந்து கொண்டு அவர் ஒருவருக்கே ஆராதனை செய்வாயாக!" என்று.

## III சுய இஷ்டமான ஆராதனை

பவுல் கொலோசெயர் 2:20-23 வசனங்களில் இவ்விதமாகக் கூறுகிறார். " *நீங்கள் கிறிஸ்துவுடனே கூட உலகத்தின் வழிபாடுகளுக்கு மரித்துண்டானால், இன்னும் உலக வழக்கத்தின்படி பிழைக்கிறவர்கள் போல, மனுஷருடைய கற்பனைகளின்படியும் போதனைகளின்படியும் நடந்து; தொடாதே, ருசி பாராதே, தீண்டாதே என்கிற கட்டளைகளுக்கு உட்படுகிறதென்ன? இவையெல்லாம் அனுபவிக்கிறதினால் அழிந்து போகுமே*". இப்படிப்பட்ட போதனைகள் சுய இஷ்டமான ஆராதனையையும், மாயமான தாழ்மையையும், சரீர ஒடுக்கத்தையும் பற்றிய ஞானமென்கிற பேர் கொண்டிருந்தாலும், இவைகள் மாம்சத்தைப் " பேணுகிறதற்கே ஒழிய மற்றொன்றிற்கும் பிரயோஜனப்படாது" என்று. இந்த வசனப்பகுதியில் புதிய ஏற்பாட்டில் இடம்பெறாத கட்டுப்பாடுகளை சகோதரர்கள் மீது திணிக்கும் கள்ளப்போதகர்களை பவுல் சாடுகிறார். அவர் இயேசுவைப் போல மனுஷருடைய கற்பனைகளையும், போதனைகளையும் குறிப்பிடுகிறார். சுய இஷ்டமான ஆராதனை என்பது தேவன் என்ன விரும்புகிறார் என்பதற்குப் பதிலாக நான் என்ன விரும்புகிறேனோ அதைச் செய்வதாகும். துரதிஷ்டவசமாக, தேவன் எவைகளைக் கட்டளையிடுகிறாரோ அதைச் செய்யாமல் அநேகர் பல்வேறுபட்ட ஆராதனை முறைகளை கடைப்பிடிக்கிறார்கள். அவர்கள் செய்யும் தவறுக்கு உள்நோக்கம் இல்லாமல் இருக்கலாம், ஆனால், விளைவு ஒரே மாதிரியாகத்தான் இருக்கிறது. அதாவது, அவர்கள் மனுஷருடைய கற்பனைகளையும், போதனைகளையும் கடைப்பிடிக்கிறார்கள்.

## IV உண்மையான ஆராதனை

இயேசு யோவான் 4:23,24 வசனங்களில், உண்மையாய்த் தொழுது கொள்ளுகிறவர்கள் பிதாவை ஆவியோடும், உண்மையோடும் தொழுது கொள்ளும் காலம் வரும், அது இப்பொழுதே



வந்திருக்கிறது; ம்மைத் தொழுது கொள்ளுகிறவர்கள் இப்படிப்பட்டவர்களாயிருக்கும்படி பிதாவானவர் விரும்புகிறார். தேவன் ஆவியாயிருக்கிறார், அவரைத் தொழுது கொள்ளுகிறவர்கள் ஆவியோடும், உண்மையோடும் அவரைத் தொழுது கொள்ள வேண்டும் என்றார். இயேசு, ஆராதனை ஆவியோடும், (சரியான இருதயத்தோடும்) உண்மையோடும் (தேவனுடைய வார்த்தையின்படியும்) (யோவா 17:17) இருக்க வேண்டுமென்று சொன்னதை ஜாக்கிரதையாகக் கவனியுங்கள். நம் ஆராதனை ஆவியோடும், உண்மையோடும் இருக்க வேண்டும். அப்போதுதான் நாம் உண்மையாக ஆராதனையை ஏறெடுப்பவர்களாக இருப்போம்.

வாரத்தின் முதல் நாளாகிய ஞாயிற்றுக்கிழமை ஏறெடுக்கப்படும் உண்மையான ஆராதனை ஐந்து பங்குகளை உள்ளடக்கியது (1) கர்த்தருடைய பந்தியில் பங்கு பெறுதல் (மத். 26:26-29; அப். 20:7; அப். 2:42). (2) பிரசங்கம் (அப். 20:7). (3) ஜெபம் (1 தெச.5:17), (4) கொடுத்தல் (1 கொரி. 16:1,2) (5) பாடல் (1கொரி. 14:15; எபே. 5:19). இப்படிச் செய்தால் மட்டுமே அது தேவனுக்குப் பிரியமான ஆராதனையாக இருக்கும்.

இக்கட்டுரை தேவன் ஏற்றுக் கொள்ளத்தக்கதான ஆராதனையை நீங்கள் சிறந்த முறையில் புரிந்து கொள்ள உங்களுக்கு உதவ வேண்டும் என்பது என்னுடைய ஜெபமாயிருக்கிறது. நம் ஆராதனை ஆவியோடும், உண்மையோடும் இருக்க வேண்டும் என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். இதைச் செய்யத்தான் கிறிஸ்துவின் சபை முயற்சித்துக் கொண்டிருக்கிறது. புதிய ஏற்பாட்டிற்குத் திரும்பி, அங்கே என்ன எழுதப்பட்டிருக்கிறதோ அதை மட்டும் விசுவாசித்து, நடைமுறைப்படுத்த வேண்டுமென்றும், முதல் நூற்றாண்டு கிறிஸ்தவர்கள் எவைகளை விசுவாசித்தார்களோ, எவைகளை அப்பியாசப்படுத்தினார்களோ அவைகளை மட்டும் கடைப்பிடிக்க வேணடுமென்றும் நாங்கள் உங்களிடம் மன்றாடுகிறோம். உங்கள் பகுதியிலிருக்கும் பிராந்திய சபைக்குச் சென்று, இந்த உண்மைகளை ஆராய்ந்து பார்க்கத் தனிப்பட்ட முறையில் வேத பாட வகுப்புக்கு நீங்கள் ஏன் ஏற்பாடு செய்யக் கூடாது?.

# மெய்யான ஆராதனை

## TRUE WORSHIP

*Charles Curtis*



*“நம்மை உண்டாக்கின கர்த்தருக்கு முன்பாக நாம் பணிந்து குனிந்து முழங்காற்படியிடக்கடவோம் வாருங்கள்”* (சங். 95:6). ஆராதன்னக்கான பிரதான நோக்கமே தேவனை மகிமைப்படுத்துவதுதான். இது நம் சிருஷ்டிகருக்கு நாம் செலுத்தும் மரியாதையாக இருக்கிறது. தேவன் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆராதனையை ஏறெடுப்பது எப்போதும் எளிதானதல்ல. மெய்யான ஆராதனை அநேக காரியங்களுடன் கூடியது என்று நான் சொல்ல விரும்புகிறேன்.

ஆராதனை நாம் தேவனிடத்தில் காட்டும் நன்றியை ஆழப்படுத்தி நம் தேவைகளையும், பலவீனங்களையும் குறித்து உணர்வை ஏற்றுபடுத்துகிறது. எங்கள் ஊரில் ஒரு மார்க்கப் பிரிவினை சபை உள்ளது. அதில் ஆராதனைக்கு அங்கத்தினர்களை அழைக்கும் முயற்சியாக ஞாயிறு காலையில் மணி அடிப்பார்கள். கிறிஸ்தவர்களாக நாம் ஆராதிக்கும்படி மேலான அழைப்பைக் கேட்கிறோம். ஆண்டவர் உயரமும் உன்னதமுமான சிங்காசத்தின் மேல் வீற்றிருக்கக் கண்ட ஏசாயா *“ஐயோ! அதமானேன், நான் அசுத்த உதடுகளுள்ள மனுஷன் அசுத்த உதடுகளுள்ள ஜனங்களின் நடுவில் வாசமாயிருக்கிறவன் சேனைகளின் கர்த்தராகிய ராஜாவை என் கண்கள் கண்டதே”* என்று சொன்னார் (ஏசா. 6:5).

நாம் தேவனை ஆவியோடும் உண்மையோடு ஆராதிக்கும்



போது அவர் மீது நாம் வைத்திருக்கும் நேசம் உயர்த்தப்படுகிறது. தேவனிடத்திலும், இழந்து போன வர்களிடத்திலும் நம் சகோதரர்களிடத்திலும், நமக்கு மிக ஆழ்ந்த அன்பு இருக்கிறது. அதுபோல, நம்மை விடுதலையாக்கும் சத்தியத்தின் மீதும் நமக்கு ஆழ்ந்த அன்பு இருக்கிறது. நாம் தேவனை ஆராதிக்கும்போது அவர் நமக்கு செய்த எல்லாவற்றையும் நாம் நினைத்துப் பார்க்கிறோம். நாம் கர்த்தருடைய பந்தியில் பங்கு பெறும் போது கடந்த காலம், நிகழ்காலம் மற்றும் வருங் காலம் குறித்து நினைப்பூட்டப்படுகிறோம். அத்தோடு இயேசுவின் சிலுவை மற்றும் மரணம் குறித்து நினைப்பூட்டப்படுகிறோம். மேலும், அவருடைய இரத்தத்தின் வல்லமை பற்றியும், நாம் சுத்திகரிக்கப்படுவதன் அவசியம் பற்றியும் நினைப்பூட்டப்படுகிறோம்.

ஆராதனையானது நம் அனுதின வாழ்க்கைக் கவலைகளிலிருந்து நமக்கு ஆறுதலை அளிக்கிறது. நாம் தேவனை ஆராதிக்கும் போது பலப்படுத்தப்படுகிறோம், புத்துணர்வடைகிறோம். *“இவையெல்லாவற்றிலேயும் நாம் நம்மில் அன்புகூருகிறவராலே முற்றும் ஜெயங் கொள்ளுகிறவர்களாயிருக்கிறோமே”* என்று வேதாகமம் சொல்லும் போது அது உண்மைதான் என்பதை ஆராதனை மீண்டும் உறுதி செய்கிறது (ரோமர் 8:37) ஆனபடியால், *கிறிஸ்து இயேசுவுக்குட்பட்டவர்களாயிருந்து மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படியே நடக்கிறவர்களுக்கு ஆக்கினைத் தீர்ப்பில்லை* (ரோமர் 8:1).

ஆராதனை தேவனைப் பற்றிய நம் புரிந்து கொள்ளுதலை ஆழப்படுத்தும் வாய்ப்பை நமக்குத் தருகிறது. தேவனுடைய வார்த்தை நமக்கு பிரசங்கிக்கப்படும் போது நம் விசுவாசம் பலப்படுத்தப்படுகிறது (ரோமர் 10:17). திறந்த மனதுடனும், மரியாதையுள்ள இருதயத்துடனும் தேவனுடைய வார்த்தையை நாம் படிக்கும் போது, நம் துக்கங்களெல்லாம் சந்தோஷமாக மாறுகிறது. *“அப்பொழுது அவர்கள் ஒருவரையொருவர் நோக்கி; வழியிலே அவர் நம்முடனே பேசி, வேத வாக்கியங்களை நமக்கு விளங்கக் காட்டின பொழுது, நம்முடைய இருதயம் நமக்குள்ளே கொழுந்துவிட்டு எரியவில்லையா?”* என்றார்கள் (லூக். 24:32).

ஆராதனை நம்மை தேவனுடைய பிரசன்னத்திற்குள் இழுத்துச் செல்லுகிறது. எனவேதான், இயேசு கிறிஸ்து *“ஏனெனில், இரண்டு பேராவது, மூன்று பேராவது என் நாமத்தினாலே எங்கே கூடியிருக்கிறார்களோ, அங்கே அவர்கள் நடுவிலே இருக்கிறேன்”* என்றார் (மத். 18:20). ஆராதனையில் நாம் தேவனிடத்தில் மிக நெருக்கமான முறையில் கிட்டிச் சேருகிறோம். ஆராதனையில் தேவனுடைய வாக்குத்தத்தங்களில் நமக்கிருக்கிற விசுவாசம் மீண்டும் ஒருமுறை உறுதி செய்யப்படுகிறது.

கிறிஸ்தவ இல்லம்

# பெற்றோர்களைப் பராமரித்தல்

## PROVIDING FOR OLDER PARENTS



*John Gipson*

**பெ**ற்றோர்கள் எப்படி இருக்க வேண்டுமோ அப்படியில்லாத போது, பிள்ளைகள் எப்படி இருக்க வேண்டுமோ அப்படியில்லாதவர்களாக வளர்க்கிறார்கள். இது ஒரு கட்டத்தில் பெற்றோருக்கு மன வேதனையைக் கொடுத்து அவர்களுடைய எண்ணங்களை வாட்டி எடுக்கும்.

நான் இப்பொழுது பிள்ளைகளிடமிருந்து எவ்வித உதவியையும் பெறாத பெற்றோர் பற்றி சிந்தித்துக் கொண்டிருக்கிறேன். இந்த தோல்வியின் விளைவாக அரசாங்கமும், சபையும் அவர்களுக்கு உதவிச் செய்ய முன்வருகின்றன.

உண்மையில், இந்தப் பொறுப்பு பிள்ளைகளைச் சார்ந்தது. விதவையானவளுக்குப் பிள்ளைகளாவது, பேரன் பேர்த்திகளாவது இருந்தால், இவர்கள் முதலாவது தங்கள் சொந்தக் குடும்பதைத் தேவ பக்தியாய் விசாரித்து, பெற்றார் செய்த நன்மைகளுக்குப் பதில் நன்மைகளைச் செய்ய கற்றுக் கொள்ளக்கடவர்கள்; அது நன்மையும் தேவனுக்கு முன்பாகப் பிரியமுமாயிருக்கிறது (1 தீமோ. 5:4).

சில வசனங்களுக்குப் பின்பு பவுல் இவ்விதமாகச் சொன்னார். "ஒருவன் தன் சொந்த ஜனங்களையும், விசேஷமாகத்தன் வீட்டாரையும் விசாரியாமற் போனால் அவன் விசுவாசத்தை மறுதலித்தவனும், அவிசுவாசியிலும் கெட்டவனுமாயிருப்பான்" (1 தீமோ. 5:8).

பிள்ளைகள் தங்கள் பெற்றோர்களுக்குச் செய்ய வேண்டிய கடமைகளைச் செய்யவிடாமல் தடுத்த யூத ரபிமார்களை இயேசு கடுங்கோபங் கொண்டு வெளிப்படையாகவே சாடினார் (மாற்கு 7:9-13).

யோசேப்பு தன் தகப்பனாகிய யாக்கோபு முதிர்வயதாயிருந்த போது அவரைப் பராமரித்தான். இயேசு தன் தாயைப் பராமரித்திருக்கிறார். நாம் ஒவ்வொருவரும் நம்மால் முடிந்த வரை நன்மைகளைச் செய்ய வேண்டும்.

தாயையாவது, தகப்பனையாவது பராமரிக்காமல், போஷிக்காமல் ஒருவன் தன்னைக் கிறிஸ்தவன் என்று அழைப்பதற்கு தகுதியானவனல்ல. அதற்காக அவன் அவமானப்படவேண்டும். நாம் சாக்குப் போக்குகளை மறந்து வேதாகமம் எதைப் போதிக்கிறதோ அதை நடைமுறைப்படுத்த வேண்டும். ❖

### என் தாயின் கைகள்

நான் சிறுபிள்ளையாக இருந்தபோது
அந்தக் கைகள் என்னைப் படுக்கையில் கிடத்தின
வியாதியின் போது, உபத்திரவத்தின்போது சச்சரவுகளின்போது
அந்த கைகள் என் தவறுகளை எல்லாம் சரியாக்கின

கேக்குகள், இனிப்புப்பண்டங்கள், அழுக்குத் துணிகள்
அந்த முடிவில்லாத வேலை நேரங்கள்;
சாக்ஸ்களையும், உடைந்த இருதயங்களையும் அந்த கைகள் சரிசெய்தன
அந்த கைகள் அவைகளைத் தவிர்க்க முயன்றதில்லை

அவைகள் சுட்டெரிக்கும் வெப்பத்தில் கொப்பளங்களாக மாறின
அந்த கைகள் பனி மற்றும் குளிரால் வெடித்துப் போயிருந்தன
அந்த கைகள் என்னைப் பிடித்து
மரத்தில் ஊஞ்சல் கட்டி ஆட்டிவிட்டன.

அந்தக் கைகள் நல்லநிலையிலும், மோசமான நிலையிலும்
தேவனுக்கு துதிகளை ஏறெடுத்தன
என் தாயின் அன்பும், கைகளும்
ஒப்பிட முடியாத தேவனுடைய ஈவாயிருக்கிறது.

# "தகப்பனைக் கனம் பண்ணுதல்" என்பதன் உட்பொருள் என்ன

## What " Honoring Fathter " Implies

*Glenn Colley*

**நா**மெல்லாரும் பிள்ளைகளாயிருக்கிறோம். தாய், தகப்பனால் தான் நாம் இங்கே இருக்கிறோம். இந்தச் சுருக்கமான பாடத்தில், " *தகப்பனை கனம் பண்ணுவாயாக* " என்கிற கட்டளைக்குக் கீழ்ப்படிவதின் உட்பொருளை நாம் காணப் போகிறோம்.

**அவருடைய வேலையைப் பாராட்டுங்கள்.**

பவுல் கிறிஸ்தவர்களுக்கு எழுதும் போது, " ஆகையால் யாவருக்கும் செலுத்த வேண்டிய கடமைகளைச் செலுத்துங்கள் " என்று எழுதினார் (ரோமர் 13:7). அது நம்முடைய பூமிக்குரிய தகப்பன் மார்களையும் உள்ளடக்கும். தகப்பன்மார்களின் வேலையின் நிமித்தம் பிள்ளைகள் அவர்களைக் கனம் பண்ண வேண்டும். ஒரு தகப்பன் தன் குடும்பத்துக்கு செய்ய வேண்டிய பொறுப்புகள் எப்போதும் எளிதாகவே இருக்காது. தகப்பனாக இருக்கும் போது, மிகப் பெரிய பொறுப்பு வந்து சேருகிறது. " *ஒருவன் தன் சொந்த ஜனங்களையும், விசேஷமாகத்தன் வீட்டாரையும், விசாரியாமற் போனால், அவன் விசுவாசத்தை மறுதலித்தவனும், அவிசுவாசியிலும் கெட்டவனுமாயிருப்பான்* " என்று பவுல் சொன்னார் (1 தீமோத். 15:8), இந்நாட்களில் ஒரு குழந்தை பெரியவனாகும் வரை வளர்ப்பதற்கு அதிக பணம் தேவைப்படுகிறது. பிள்ளைகளை வளர்ப்பதற்கான தேவைகளைச் சந்திக்க தகப்பன்மார்கள் கஷ்டப்படுகிறார்கள். சில தகப்பன்மார்கள் தங்கள் பிள்ளைகளுக்கு தேவையானவைகள் சந்திக்கப்படுகிறதா என்பதை நிச்சயப்படுத்திக் கொள்ள அதிக பிரயாசப்படுகிறார்கள். உங்கள் தகப்பன் உங்களுக்குச் செய்கிற எல்லாவற்றுக்காகவும் கடைசியாக அவருக்கு எப்போது நன்றி சொன்னீர்கள்?

**அவருடைய விருப்பத்தை ஏற்றுக் கொள்ளுங்கள்.**

இது ஒருவர் தன் தகப்பனுக்குக் கீழ்ப்படிவதை விவரிக்கிறது. இது பெற்றோர்களின் அதிகாரத்தின் கீழ் அவர்களுடைய கண்காணிப்பின் கீழ் வரும் பிள்ளைகளுக்கு பொருந்தும் கட்டளையாகும். " *பிள்ளைகளே, உங்கள் பெற்றோருக்குக் கர்த்தருக்குள் கீழ்ப்படியுங்கள், இது நியாயம்* " என்று வேதாகமம் சொல்கிறது. (எபே. 6:1) குமாரர்களும், குமாரத்திகளும் தங்கள் தகப்பனுடைய விருப்பத்திற்குக் கீழ்ப்படிய வேண்டும். ஏனென்றால், தேவன் தகப்பனைத்தான் வீட்டிற்குத் தலைவராக நியமித்திருக்கிறார். இப்படிக் கீழ்ப்படிவது தேவனுடைய பார்வையில் மட்டும் நியாயமானதல்ல, குழந்தையின் நலனுக்கும் நியாயமானதுதான் (நீதி. 6:20-23).

**அவருடைய ஞானத்தைக் கேளுங்கள்.**

பிள்ளைகள் வளர்ந்து குடும்பமாக ஆன பிறகு கூட தகப்பன்மார்களின் ஞானம் நாடப்பட வேண்டும். பெற்றோர்கள் சம்மந்தமாக கீழ்க்காணும் வசனங்களில் சொல்லப்பட்டிருக்கிறவைகளை கவனியுங்கள். " *உன்னைப் பெற்ற தகப்பனுக்குச் செவி கொடு; உன் தாய் வயது சென்றவளாகும் போது அவளை அசட்டை பண்ணாதே* " (நீதி. 23:22). அநேக காரியங்களில் தகப்பனுடைய ஆலோசனையை நாடுங்கள். அவருடைய அனுபவம் மற்றும் புரிந்து கொள்ளுதலை நீங்கள் நாடும் போது அவருக்கும் உற்சாகமாக இருக்கும், உங்களுக்கும் நன்மை கிடைக்கும். அவருடைய ஞானத்தை கண்டு கொள்ளாமல் இருக்க வேண்டாம். அவருடைய வயது மற்றும் அனுபவம் போன்றவைகளால் அவருடைய ஞானம் உங்களுடையதைக் காட்டிலும் அதிகமானதாயிருக்கும்.

**அவருடைய பலவீனங்களை அனுமதியுங்கள்.**

உங்கள் தகப்பன் மனிதனாக இருக்கிறபடியால் அவர் ஒருவேளை தவறு செய்தாலும் அவரை மரியாதையோடு நடத்துங்கள். அவருடைய குறைகளினிமித்தம் உங்கள் இருதயத்திலிருந்து அவரை எடுத்துப்போடாதீர்கள். நாம் எல்லோரும் பாவம் செய்து தேவ மகிமையற்றவர்களாக இருக்கிறோம். (ரோம 3:23) வேத வசனங்களைக் கொண்டு அவரைத் திருத்துங்கள்.

**அவருடைய தேவைகளை சந்தியுங்கள்.**

ஆம், தகப்பன்மார்களுக்கும் தேவை இருக்கிறது! குறிப்புணர்ந்து நடந்து கொள்ளுங்கள். இவ்வுலக வழக்கத்தின் காரணமாக, தகப்பன்மார்கள் குறிப்பாக பிள்ளைகளிடமிருந்து உதவிகளைக் கேட்பதில்லை. அவருடைய தேவைகளின் மீது நம் கண்களைத் திறந்து வைத்துக் கொள்ள வேண்டும். பெற்றோர்களின் தேவைகளை அலட்சியமாகப் பார்ப்பது தவறாகும், குறிப்பாக, அவர்களுடைய வயதான காலத்தில் அவர்களை அப்படிப் பார்ப்பது மிகவும் தவறாகும் (மத். 19:17-20).



# தகப்பன்மார்களே : உங்கள் வீட்டில் அவர்கள் என்னத்தைப் பார்த்தார்கள்?

## Fathers: What Have They Seen In your House?

***Bobby Dockery***

எசேக்கியா ராஜா மோசமான தவறைச் செய்த நல்ல மனிதனாக இருந்தான். எசேக்கியா ராஜா மரிக்கும் தருவாயிலிருந்து சுகம் பெற்றதை வாழ்த்தும் விதமாக பாபிலோனின் ராஜா ஆட்களை அனுப்பிய போது எசேக்கிய ராஜா அவர்களை விருந்தினர்களைப் போல கவனித்து அனுப்பியிருக்கிறான். அவன் அவர்களை வரவேற்று, யூத ராஜாக்கள் பல நூற்றாண்டுகளாக குவித்து வைத்திருந்த பொக்கிஷங்களை எல்லாம் காண்பித்தான். இதைக் கேள்விப்பட்ட ஏசாயா தீர்க்கதரிசி எசேக்கியாவைப் பார்த்து; *உம்முடைய வீட்டில் அவர்கள் என்னத்தைப் பார்த்தார்கள் என்று கேட்டான்* (II ராஜா. 20:15). பாபிலோனியர்கள் தாங்கள் கண்ட பொக்கிஷங்களை இச்சித்து மறுபடியும் வந்து அந்த பொக்கிஷங்களையெல்லாம் அள்ளிக் கொண்டு போவார்கள் என்று ஏசாயா எசேக்கியாவை எச்சரித்தார். மேலும், தேசம் கவிழ்த்துப் போடப்பட்டு, ராஜாவின் பொக்கிஷங்களெல்லாம் பாபிலோனுக்கு எடுத்துச் செல்லபடும். எசேக்கியாவின் சொந்தப் பிள்ளைகளும், பேரப் பிள்ளைகளும் கைதிகளாகக் கட்டப்படுவார்கள். எசேக்கியா ராஜா பெருமையாக தன் பொக்கிஷங்களைக் காட்டியது தன் வீடு வீழ்ந்து போவதற்கு வித்திட்டது.

உம்முடைய வீட்டில் என்னத்தைப் பார்த்தார்கள்? என்கிற கேள்வியானது அநேக தகப்பன்மார்கள் இன்று ஆழ்ந்து யோசிக்க வேண்டிய கேள்வி. எசேக்கியா ராஜாவைப் போல அநேகர் தங்கள் காரியங்கள் வெளியே தெரிய அனுமதிக்கிறார்கள். அவர்கள் இழக்கப்போகிற பொக்கிஷம் நித்திய மதிப்புள்ள ஆவிக்குரிய ஒன்றாக உள்ளது! சிந்தித்துப் பாருங்கள்....



1. தகப்பன்களே, பிறர் உங்கள் வீட்டில் எதைப் பார்க்கிறார்கள்?

நம் நண்பர்களும், அயலகத்தாரும் நம் வீட்டில் என்ன நடக்கிறது என்பதைப் பார்க்கிறார்கள். அங்கே கிறிஸ்துவின் தாக்கத்தை அவர்கள் காண்பது அவசியமாகும்! அவர்கள் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு தேவனை மகிமைப்படுத்தும்படி நீங்கள் அவர்களுக்குள்ளே நல் நடக்கையுள்ளவர்களாய் நடந்து கொள்ளுங்கள். வீடுகளில், கிறிஸ்தவ ஒழுக்க நெறிகள் எளிதில் பார்க்க முடியாமலிருப்பது பரிதாபகரமான நிலைமை.

2. தகப்பன்களே, உங்கள் பிள்ளைகள் உங்கள் வீட்டில் எதைப் பார்க்கிறார்கள்?

சிறிய குழந்தைக்குக்கூட பெரிய கண் இருக்கிறது. அவர்கள் அதிகமாகப் பார்த்து கொஞ்சமாக மறக்கிறார்கள். வீட்டில் அவர்கள் பார்க்கின்ற காரியங்கள் ஒவ்வொன்றும் நித்தியத்தோடு சம்பந்தப்படும். அவர்கள் எதைக் காண்கிறார்கள்? *அவர்கள் பாலியல் ஒழுக்கக் கேட்டைக் காணலாம்.* அவர்கள் ஆபாசக்காட்சிகளை காணலாம். அசிங்கமான புத்தகங்கள், பாலியலைத் தூண்டும் பத்திரிக்கைகள், ஆபாசக் காட்சிகளை அப்பட்டமாக வெளிக்காட்டும் வீடியோக்கள் இன்று அநேக வீடுகளில் பொதுவான அல்லது சகஜமான ஒன்றாகிவிட்டது. பெற்றோர்கள் வீட்டிற்குள் கொண்டு வருகின்ற துன்மார்க்கமான காரியங்களால் ஒன்றுமறியாத பிஞ்சு மனம் மிருகத்தன்மையை அடைகிறது, கெட்டுப்போகிறது. நிறைய வீடுகளில் அவர்கள் மதுபானத்தையும், போதைப் பொருள்களையும் காண்கிறார்கள். மதுபானம் மற்றும் போதைப் பொருள்களால் லட்சக்கணக்கான வீடுகள் இடிந்து தரை மட்டமாகின்றன. இதன் காரணமாக பிள்ளைகள் வீட்டை விட்டு வெளியேறி தங்கள் வழியைப் பார்த்துக் கொள்ள உலகத்திற்கு சென்று விடுகிறார்கள். அவர்கள் வாழ்க்கையை கெடுத்துக் கொள்ளுகிறார்கள். மேலும், அவர்களைத் தாக்கும் சோதனைகளில் விழுந்து விடுகிறார்கள். இவைகளெல்லாம் அவர்கள் வீட்டில் எதைக் காண்கிறார்களோ அதைச் சார்ந்தே இருக்கும்.

3. தகப்பன்களே, தேவன் உங்கள் வீட்டில் எதைப் பார்க்கிறார்?

வாழ்க்கையின் ஒவ்வொரு நாளும் தேவனுடைய பிரசன்னத்தில் வாழப்படுகிறது. (எபி. 4:12) நாம் வீட்டில் நடக்கிறவைகளை நம் அயலகத்தாரின் கண்களுக்கும், ஓரளவு நம்முடைய பிள்ளைகளின் கண்களுக்கும் மறைத்து விடலாம்.

ஆனால், நாம் தேவனிடத்திலிருந்து எதையும் மறைக்க முடியாது! ஒரு நாளில் நாம் தேவன் நம்முடைய வீடுகளில் எதைக் கண்டாரோ அதை அடிப்படையாக வைத்து நீதியாக நியாயந்தீர்ப்பார். (பிர. 12:14)

தேவன், மற்றவர்கள், உங்கள் பிள்ளைகள் என்று எல்லோரும் " உங்கள் வீட்டில் எதைப் பார்த்தார்கள்? பார்க்கிறார்கள்? இதற்கான பதில் உங்கள் நித்தியத்தை தீர்மானிக்கும் ". ❖



# காத்திருப்பு ஸ்தலம்

" தயவு செய்து....
நான் இந்த இடத்தில் இழந்து போன நிலையில் இருக்கிறேன்..... "
தளர்ந்து போன குரலாயிருக்கிறது,
கை கால்கள் தளர்ந்து போகிறது,
என் துணிகள் பறிக்கப்படுகின்றன.


" தயவு செய்து....
நான் இந்த இடத்தில் இழந்து போன நிலையில் இருக்கிறேன்
என் குடும்பத்தார் எனக்காகப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்
ஆனால் நான் இங்கே இருக்கிறது அவர்களுக்குத் தெரியாது.
அவர்களைப் பார்த்தால் நான் இருக்கிற இடத்தை அவர்களுக்குச் சொல்வீர்களா?"

மன்றாடும், வாட்டி வதைக்கப்படும் கண்கள்
பதிலுக்காக என்னைத் தேடுகின்றன.
" ஆம், அவர்களைப் பார்த்தால்
நான் சொல்வேன் .......... "

*Betty Burton Choate*







# நாம் உள்ளே அனுமதித்த அந்நியன்

## The Stranger We Took In

நான் பிறப்பதற்கு சில மாதங்களுக்கு முன்பு என் அப்பா ஓர் அந்நியனை சந்தித்தார். அவன் எங்கள் சிறிய பட்டணமாகிய டென்னீசிக்குப் புதியவனாக இருந்தான். ஆரம்பத்திலிருந்தே இந்த வசீகரமான புதியவரால் என் அப்பா அதிகமாகக் கவரப்பட்டார், உடனே எங்கள் குடும்பத்தோடு வந்து தங்கும்படி அவனுக்கு அப்பா அழைப்பு விடுத்தார். அந்தப் புதிய நபர் உடனே அந்த அழைப்பை ஏற்றுக் கொண்டு சில மாதங்களுக்குப் பிறகு ஒரு புதிய உலகத்திற்குள் எங்களை வரவேற்க காத்திருந்தான்.

நான் வளர்ந்தபோது எங்கள் குடும்பத்தில் அவனுக்குக் கொடுக்கப்பட்ட முக்கியத்துவம் குறித்து ஒருபோதும் ஒருவரும் கேள்வி கேட்டதில்லை. என் இளமனதில் ஒவ்வொரு அங்கத்தினருக்கும் தனி இடம் இருந்தது. என் சகோதரனாகிய பில் என்னைவிட ஐந்து வயது முத்தவர். அவர் தான் என்னுடைய சிறந்த முன் மாதிரி. என் பெற்றோர்கள் மெச்சத் தக்கதான போதகர்கள் -அம்மா தேவனுடைய வார்த்தையை நேசிப்பதற்கு கற்றுக் கொடுத்தார், அப்பா அதற்குக் கீழ்ப்படியக் கற்றுக் கொடுத்தார்.

அந்த அந்நியர் கதை சொல்லுபவர். அவரால் ஆளை மயக்கும் கதைகளை சொல்ல முடியும். சாகசங்கள், இரகசியங்கள், பொழுது போக்கு அம்சங்கள் அவருடைய அன்றாட பேச்சுக்கள். ஒவ்வொரு நாள் மாலைப் பொழுதிலும் முழுக்குடும்பத்தையும் தன்முன் கட்டிப்

போட்டு விடுவார். நான் அரசியல் பற்றி, வரலாறு பற்றி அல்லது விஞ்ஞானம் பற்றி அறிய விரும்பினால், அவருக்கு எல்லாம் தெரிந்திருந்தது. அவருக்கு கடந்த காலம் தெரிந்திருந்தது, நிகழ்காலத்தைப் புரிந்திருந்தார், வருங்காலம் பற்றியும் முன்னறிவிக்கத் தெரிந்தது. அவரால் காட்டப்படும் படங்கள் உயிருள்ளதாயிருந்தது. அவைகளை நான் பார்க்க நேர்ந்தபோது அழவும் நேர்ந்தது, சிரிக்கவும் நேர்ந்தது.

எங்கள் முழுக்குடும்பத்திற்கும் நல்ல நண்பராக இருந்தார். அவர் என்னையும், அப்பாவையும், என் சகோதரனையும் விளையாட்டைக் காண அழைத்துச் சென்றார். அவர் எங்களை திரைப்படத்தைக் காண உற்சாகப்படுத்தினார், திரைப்பட நட்சத்திரங்களை எங்களுக்கு அறிமுகம் செய்ய ஏற்பாடுகள் செய்தார்.

அந்தப் புதியவர் ஓயாமல் பேசுபவர். என் அப்பா அவரைப் பெரிதாகக் கண்டு கொள்வதில்லை, ஆன்ால், சிலவேளைகளில் என் அம்மா கொஞ்சம் கண்டு கொள்வார், மீதமுள்ள நாங்கள் எல்லோரும் அவருடைய சுவாரசியக் கதைகளில் கவரப்பட்டிருந்தோம். அம்மா அவர்களுடைய அறைக்குச் சென்று, வேதாகமத்தை வாசித்து ஜெபிப்பார். புதிதாக வந்தவர் போக வேண்டுமென்று ஜெபித்தார்களோ என்னவோ என்று நான் ஆச்சரியப்படுகிறேன்.

என் அப்பா, வீட்டில் சில ஒழுக்க நெறிகளைக் கடைபிடிக்கும் படி கண்டிப்பு காட்டுவார். ஆயினும், இந்தப் புதியவர் அவைகளை கனம் பண்ண வேண்டும் என்கிற கடமை தனக்கிருப்பதாக ஒருபோதும் உணர்ந்ததில்லை. உதாரணமாக, பக்தி காரியங்களை அலட்சியம் செய்வது எங்கள் வீட்டில் அனுமதிக்கப்படுவதில்லை வெளியிலிருந்தோ, எங்கள் நண்பர்களிடமிருந்தோ, பெரியவர்களிடமிருந்தோ அனுமதிக் கப்படுவதில்லை. ஆயினும், எங்கள் நீண்டநாள் விருந்தாளி எங்கள் காதுகளை எரிக்கத்தக்கதான, அப்பாவை நெளியச் செய்யும் அந்த நான்கெழுத்து வார்த்தைகளை அவ்வப்போது பயன்படுத்தினார். எனக்குத் தெரிந்தவரை அந்த விருந்தாளி ஒருபோதும் விமர்சனம் செய்யப்படவில்லை.

என் அப்பா மதுபானம் அருந்தாதவராயிருந்தபடியால் வீட்டில் மதுபானத்தை அனுமதிக்கவில்லை, ஆனால், அந்த புதியவர் எங்களுக்கு வெளி உலகம் பற்றி அறிவது அவசியம் என அறிவித்தார். உண்மையில், நாங்கள் குடிக்கும்படியாக அவர் மதுபானம் எதையும் தரவில்லை, ஆனால், வாழ்க்கையின் மறுபக்கம் குறித்து நாங்கள்



அறிந்துகொள்ள தொடர்ந்து முயற்சித்தார். அவர் வாழ்க்கையின் உல்லாசம் பீர் மற்றும் வேறு போதை தரும் பானங்களால் கிடைக்கும் என்று காட்டினார்.

அவர் செக்ஸ் பற்றி மிக தாராளமாகப் பேசினார். அவருடைய விமர்சனங்கள் சிலவேளைகளில் வெளிப்படையாகவும், சிலவேளைகளில் ஆலோசனை சொல்வது போலவும், மற்றும் சிலவேலைகளில் பொதுவாக வெட்கத்தை ஏற்படுத்துகிறதாகவும் இருந்தது. ஆண், பெண் உறவு பற்றிய என்னுடைய ஆரம்பகால கருத்துக்கள் இந்தப் புதியவரால் ஏற்படுத்தப்பட்ட தாக்கத்தின் விளைவு என்பதை அறிவேன்.

நான் திரும்பிப் பார்க்கும்போது, தேவனுடைய கிருபையும், சபையிலும், ஞாயிறு வேத பாட வகுப்பிலும் எங்களுக்கு போதிக்கப் பட்டவைகள் தான் அந்த புதியவரால் நாங்கள் வஞ்சிக்காதபடி காத்துக் கொண்டது. நேரத்திற்கு நேரம் அவர் வேதாகமத்தின் ஒழுக்க நெறிகளை எதிர்த்தார். ஆன போதிலும், அதைப் பற்றி ஒருவரும் ஒன்றும் சொல்லவில்லை, அந்த நபரை வீட்டை விட்டுப் போகும்படி கட்டாயப்படுத்தவுமில்லை.


அந்த அந்நியன் எங்கள் குடும்பத்திற்குள் வந்து முப்பது ஆண்டுகள் ஆகி விட்டது. உண்மையாகச் சொல்ல வேண்டுமானால், நான் அவரைப்போல் ஒரு புதியவரைக் கண்டுபிடித்து என் வீட்டிற்கும் அழைத்துச் சென்றேன். இப்போது அவர்கள் இருவரும் பெற்றோர்களுடைய தனிப்பட்ட அறையிலும், என் வீட்டின் அறையிலும் உட்கார்ந்திருக்கிறார்கள். தான் பேசுவதை யாராவது கேட்க வேண்டுமென்று அவர் பொறுமையோடு காத்திருக்கிறார், அதுபோல அவர் பேசும்போது நீங்களும் அவரையே பார்ப்பீர்கள்.

அவருடைய பெயர் ? ....... தொலைக்காட்சிப் பெட்டி.

ஆங்கிலத்தில் சுருக்கமாக TV என்றழைக்கிறோம்.

## யாருடைய ஜெபம் கேட்கப்படுகிறது

- நீதிமான்கள் (யாக். 5:16; 1 பேது. 3:12)
- கீழ்ப்படிதலுள்ளவர்கள் (1யோ. 3:22)
- அவருடைய சித்தம் செய்யும் அவருடைய பிள்ளைகள் (மத். 6:9, 1 யோ. 5:14)



# தனி நபர் ஊழியம்

## Personal Evangelism

**David Pharr**

**யா**ரோ ஒருவர் உங்கள் ஆத்துமாக்கள் மீது போதுமான அக்கறை கொண்டிருந்தபடியால் தான் சபை குறித்தும், கிறிஸ்து குறித்தும், உங்கள் ஆத்துமாக்களின் தேவை குறித்தும் உங்களிடம் பேசியிருக்கிறார். நாமும் பிறருடைய ஆத்துமாக்களை நேசிப்பதால், கிறிஸ்துவின் பணியில் தனிப்பட்ட முறையில் பங்களிக்க வேண்டுமென விரும்பி தனிநபர் ஊழியத்தில் நாம் ஈடுபட விரும்புகிறோம்.

நீங்கள் கற்றுக்கொண்ட காரியங்களைப் பகிர்ந்து கொள்ள பல்வேறு வழிகள் குறித்து நீங்கள் சிந்தித்துக் கொண்டிருக்கலாம். அதுபோல, பல்வேறுபட்ட



மக்களை கிறிஸ்துவுக்குள் வழி நடத்துவது குறித்தும் நீங்கள் சிந்தித்துக் கொண்டிருக்கலாம். இந்த ஆசை உங்கள் வாழ்நாள் முழுவதும் உங்களுக்குள் இருக்க வேண்டும்.

இரண்டு காரியங்கள் உங்களை இக்காரியத்தில் சலிப்பு அடையச் செய்யலாம்.

முதலாவது, நீங்கள் போதிக்க விரும்பும் மக்கள் விருப்பமில்லாமல் இருப்பார்கள். உண்மையாக, சிலருக்கு ஆவிக்குரிய காரியங்களில் விருப்பமே இல்லை. நீங்கள் அவர்களோடு எவைகளைப் பகிர்ந்து கொள்ள விரும்புகிறீர்களோ, அது குறித்து அவர்கள் பரிசிலனை கூட செய்யப் போவதில்லை என்பது முன் கூட்டியே தீர்மானம் செய்து விடுகிறார்கள்.

இரண்டாவது, மற்றவர்களுக்குப் போதிக்கும் அளவுக்கு உங்களுக்கு வேதாகமம் பற்றித் தெரியாது என நீங்கள் நினைப்பது. ஆனால், உங்களுக்கும் போதிக்கப்பட்டு உங்களை ஆதாயம் செய்ய நாட்கள் ஆனது என்பதை நினைவில் கொள்ளுங்கள். ஒருவரை ஆதாயப்படுத்தும் முயற்சியில், உடனே அந்த முயற்சியைக் கை விட்டு விடாதீர்கள். பொறுமையாயிருந்து உங்கள் முன் உதாரணத்தினாலும், அன்பான அணுகுமுறையாலும் பிறர் சுவிசேஷத்தில் விருப்பம் காட்டும்படி செய்யுங்கள். உங்களுக்குத் தெரியாதவைகளை நீங்கள் போதிக்க முடியாமல் இருந்தால் நீங்கள் ஏற்கனவே கற்றுக் கொண்ட சத்தியத்தை பிறரிடம் பகிர்ந்து கொள்ளுங்கள். எல்லா கேள்விகளுக்கும் உங்களால் பதில் அளிக்க முடியாத காரணத்தால், பிறரிடம் பயத்தின் காரணமாகப் பகிர்ந்து கொள்ளத் தயங்க வேண்டாம். உங்களுக்குத் தெரியாத பதில்களை நான் கண்டு பிடித்து பிறகு உங்களுக்குச் சொல்லுகிறேன் என்று சொல்ல முடியும். இது, நமக்குத் தெரியாதவைகளைக் கற்றுக் கொள்வதற்கான மிகச் சிறந்த வழி.

ஒவ்வொரு கிறிஸ்தவனும் பிறரை வேதபாட வகுப்பில், ஆராதனையில் கலந்து கொள்ள அழைப்பு விடுக்கலாம். இது பிறரை கிறிஸ்துவுக்குள் கொண்டு வருவதற்கான சிறந்த வழியாகும். ஒவ்வொரு வாரமும் ஜனங்கள் வரும்படியாக அவர்களை வலியுறுத்துவதில் நாம் அனைவரும் ஈடுபட வேண்டும்.

நீங்கள் ஒருவருக்குப் போதிக்க விரும்பி உங்களால் அப்படிச் செய்ய முடியாது என நீங்கள் உணர்ந்தால், உங்களோடு

வேதத்தில் தேறிய ஒரு கிறிஸ்தவரை அழைத்துச் செல்லுங்கள். கொலோ. 4:5,6 வசனங்களை வாசியுங்கள். நம் வார்த்தைகள் எப்பொழுதும் கிருபை பொருந்தினதாயும், உப்பால் சாரமேற்றப்பட்டதாயிருக்க வேண்டுமென்பதின் பொருள், பிறரிடம் அன்போடும், கருத்தோடும் பேச வேண்டுமென்பதே. சுவையாக இருக்க வேண்டுமென்பதற்காகத் தான் உணவில் உப்பைச் சேர்க்கிறோம். உப்பால் சாரமேறி என்றால், நம் பேச்சு இதமாகவும், மென்மையாகவும் இருக்க வேண்டும். தவறைத் திருத்தும் போதோ அல்லது பாவத்தைக் கடிந்து கொள்ளும் போதோ கூட முரட்டுத்தனமாக பேசக் கூடாது. நாம் சரியானதைப் போதிப்பதில் உறுதியாக இருக்க வேண்டும், ஆனால், அதை எப்போதும் அன்பின் ஆவியோடு செய்ய வேண்டும்.

இப்போது 1 பேதுரு 3:15யை வாசியுங்கள். இங்கே வசனங்களை அறிந்து கொள்வதன் மூலமாக ஜனங்களுக்கு உத்தரவுச் சொல்ல எப்போதும் ஆயத்தமாயிருக்க வேண்டும். சத்தியம் சம்பந்தமாக சின்ன புத்தகம், அதிகாரம், வசனம் என்று சொல்லத்தக்க அளவு நாம் வேதாகமத்தைக் கற்றுக் கொள்ள வேண்டும். நாம் சாந்தத்தோடும், வணக்கத்தோடும் உத்திரவு சொல்ல எப்பொழுதும் ஆயத்தமாயிருக்கும்படி பேதுரு கூறுகிறார்.

சில வேளைகளில் ஒரு கிறிஸ்தவன் மற்றவர்களுடைய உணர்வுகளைக் குறித்து கவலைப்படாமல், சத்தியத்திற்காக மிகவும் பக்தி வைராக்கியமாக இருப்பான். அவன் குற்றப்படுத்துகிறவனாகவும், கடுமையாகப் பேசுகிறவனாகவும் இருப்பான். நாம் கள்ள உபதேசத்தோடு ஒரு போதும் சமரசம் செய்து கொள்ளக் கூடாது. ஆனால், அதே வேளையில், பக்தியோடும், அன்போடும் காரியங்களைக் கையாள வேண்டும். II தீமோ. 2:24-26 வசனங்களை வாசியுங்கள். இந்த வசனப் பகுதி நம்முடைய பணி வாக்குவாதங்களை வெல்வதாயிராமல், ஆத்துமாக்களை ஆதாயம் செய்வதாக இருக்க வேண்டுமென்று நமக்குக் காட்டுகிறது. நம்மை அறிவாளிகள் என்று காட்டுவதற்காக ஜனங்களுக்கு நாம் சத்தியத்தைக் காட்டுவதில்லை. உண்மையாகவே ஆத்தும ஆதாயம் செய்பவர் பொறுமையாகவும், அன்பாகவும் இருப்பர். இவைகளுக்கெல்லாம் ஒரே ஒரு நோக்கம் தான் இருக்க வேண்டும். அது சத்தியத்தைத் தாங்குவதாகவும், இழந்து போன ஆத்துமாவைத் தேடுகிறதாகவும் இருக்க வேண்டும்.



மற்றவர்களுக்கு போதிக்கும்படி உங்களை ஆயத்தமாக்குவதற்கு வேத வசனங்களைப் படிப்பதைத் தவிர வேறுவழி இல்லை. மற்றவர்களுக்கு போதிக்கக் கூடிய சகோதர சகோதரிகள் ஜாக்கிரதையாக வேத வசனங்களைப் படிப்பதன் மூலமாக தங்களை ஆயத்தமாக்கிக் கொள்ள வேண்டும் (II தீமோ. 2:15). வேத வாக்கியங்களைப் பயன்படுத்துவதில் தேர்ந்தவர்களாக மாற நேரமும், முயற்சியும் தேவைப்படும். உங்களுக்கு ஏற்கனவே தெரிந்த காரியங்களை பிறரிடம் பகிர்ந்து கொண்டிருக்க வேண்டும், இன்னும், சிறந்த ஆத்தும ஆதாயம் செய்பவராக விளங்க தொடர்ந்து கற்றுக் கொள்கிறவராக இருக்க வேண்டும். போன ஆத்துமாவைத் தேடுகிறவராயும் இருக்க வேண்டும்.

## திரும்பு – மனந்திரும்பு

சோர்ந்து போகும் நேரத்தில் தேவனிடமிருந்து
கிடைக்கும் 'பு' – அரவணைப்பு

பாவத்தில் இருப்பவர்களுக்கு இயேசுவின் இரத்தத்தினால்
கிடைக்கும் 'பு' – இரட்சிப்பு

தவறு செய்யும் ஒருவன் அதற்காக வருந்தினால் அவரிடத்தில்
கிடைக்கும் 'பு' – மன்னிப்பு

கிறிஸ்துவுக்குள் நாம் வாழும் போது அவர் மூலம்
கிடைக்கும் 'பு' – தேவ அன்பு

வசனத்தின்படி வாழும் போது நமக்கு
கிடைக்கும் 'பு' – பாதுகாப்பு

இப்'பு'க்களை பெற நீ விரும்பினால் நீயும்
திரும்பு – மனந்திரும்பு

# அனுப்புகிற தேவன்

## A Sending God

*Cecil May, Jr.*

**வே**தாகமம் முழுவதும் தேவன் குறிப்பிட்ட ஒருவரை ஏதோ ஓரிடத்திற்கு தேவையானதைச் சொல்ல நிச்சயமாகவே அனுப்பிக் கொண்டுதான் இருக்கிறார்.

" உங்கள் பிதாக்கள் எகிப்து தேசத்திலிருந்து புறப்பட்ட நாள் முதல் இந்நாள் மட்டும் தீர்க்கதரிசிகளாகிய என் ஊழியக்காரரை யெல்லாம் தினந்தினம் ஏற்கனவே உங்களண்டைக்கு அனுப்பிக் கொண்டிருந்தேன் " (எரே. 7:25).

தேவன், " என் ஜனங்களைப் போக விட வேண்டும் என்று பார் வோனுக்குக்குச் சொல்ல மோசேயை அனுப்பினார் " (யாத். 5:1).

தேவன், " நீயே அந்த மனுஷன் என்று சொல்வதற்காக நாத்தானை தாவீதினிடத்தில் அனுப்பினார் " (2 சாமு. 12:7).

தேவன், " உன் தேவனை சந்திக்க ஆயத்தப்படு என்று சொல்ல ஆமோஸை பெத்தேலுக்கு அனுப்பினார் " (ஆமோஸ் 12:7).

தேவன், " மனந்திரும்புங்கள், பரலோக ராஜ்யம் சமீபமாயிருக் கிறது என்று சொல்ல யோவான் ஸ்நானனை அனுப்பினார் " (மத். 3:2).

தேவன், " இந்த இயேசுவை தேவன் எழுப்பினர்; இதற்கு நாங்க ளெல்லாரும் சாட்சிகளாயிருக்கிறோம் " என்று சொல்ல வைக்க பேருதுவை எருசலேமில் தரித்திருக்கும்படி சொன்னார் (அப். 2:32).

தேவன், " இயேசு பற்றி எத்தியோப்பிய மந்திரிக்குப் பிரசங்கிக்க பிலிப்புவை அனுப்பினார் " (அப். 8:35).

தேவன், " சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தை அறிவிக்கவும், விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான் " என்கிற வாக்குத்தத்தத்தை அறிவிக்கவும் நம்மை அனுப்புகிறார் (மாற்கு 16:16).



நீங்கள் இதை அறிந்து கொண்டீர்களா?
அப்படியானால், நீங்கள் போகிறீர்களா?
நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?

பின்பு : யாரை நான் அனுப்புவேன், யார் நமது காரியமாய்ப் போவான் என்று உரைக்கிற ஆண்டவருடைய சத்தத்தைக் கேட்டேன். " அதற்கு நான் இதோ, அடியேன் இருக்கிறேன்; என்னை அனுப்பும் என்றேன் " (ஏசாயா 6:8).

## கிறிஸ்துவின் சபை

- ✻ வேதாகமம் மட்டுமே வழிகாட்டி (ரோ. 1:16; 1 தெச. 2:13)
- ✻ வேதாகமப் பெயரை மட்டும் தரித்துக் கொள்கிறது (ரோ. 16:16)
- ✻ சரியான இடத்தில் நிறுவப்பட்டது – எருசலேமில் (ஏசா. 2:2–3; அப். 2)
- ✻ சரியான காலத்தில் நிறுவப்பட்டது. கி.பி. 33–34ல் (யோவே 2:28–32; அப். 2)
- ✻ சரியான அஸ்திபாரத்தின் மேல் நிறுவப்பட்டது. கிறிஸ்து தான் அந்த அஸ்திபாரம் (மத். 10:18; அப். 2:36)
- ✻ இரட்சிக்கப்பட்டவர்கள் அதன் அங்கத்தினர்கள் ஆவர் (அப். 2:47)
- ✻ இவர்களுடைய பெயர் பரலோகத்தில் பதியப்பட்டுள்ளது (எபி. 12:23)
- ✻ பிதாவினிடத்தில் ஒப்புக்கொடுக்கப்படும் (1 கொரி. 15:24)

செயலில் கிறிஸ்தவம்

# ஊழியப்பணியில் ஒரு கிறிஸ்தவப் பெண்ணின் பங்கு

## A Christian Woman's Role in Evangelism

*Frank Chesser*

**தே**வனுடைய இரட்சிப்பின் திட்டத்தை ஏற்றுக் கொள்ளாதவர்கள் இழந்து போவார்கள் என்பதை உண்மையாகவே நாம் விசுவாசிக்கிறோமா? அதைக் குறித்து நாம் உண்மையாகவே அக்கறைப்படுகிறோமா? அடுத்த இருபத்தி நான்கு மணி நேரத்தில் ஒரு இலட்சம் மக்கள் இழந்து போன நிலையில் காணப்படுவார்கள் என்பது நமக்கு நெருடலாக இல்லையா?

கிறிஸ்தவப் பெண்கள் மீது வேதாகமம் சில கட்டுப்பாடுகளை விதித்திருக்கிறது. ஆவிக்குரிய காரியங்களில் ஆண்களுக்கு அவர்கள் போதிப்பதோ அல்லது ஆண்கள் மீது அதிகாரம் செலுத்துவதோ கூடாது (1 தீமோ. 2:12). ஒரு பெண்ணால் என்ன செய்ய முடியும் என்கிற தவறான புரிந்துகொள்ளுதலால், அநேகப் பெண்கள் எதையும் செய்யாமலிருந்து தங்கள் ஆத்துமாக்களை நரகத்திற்கு அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள். ஆதிக்கிறிஸ்தவர்கள் எங்கும் சுற்றித் திரிந்து இயேசுவைப் பற்றி பிறருக்கு எடுத்துரைத்திருக்கிறார்கள். ஆண்களும், பெண்களும் கூடி வரும் போது ஒரு பெண்ணால் போதிக்க முடியாது என்றாலும், இரட்சிப்பின் இனிய செய்தியை மற்றவர்களுக்கு அவளால் எண்ணற்ற வழிகளில் சொல்ல முடியும்.

பெரும்பாலான ஊழியப் பணியில் இது தற்செயலாகவே நடக்கிறது. நம் அயலகத்தாரோடு ஒரு குவளை தேநீர் அருந்தி மகிழும் போது, நாம் கூடும் சபையின் பெயர் என்ன என்பதைக் குறிப்பிட்டு அப்படியே படிப்படியாக தேவனுடைய இரட்சிப்பின் திட்டத்தை அவர்களிடத்தில் எடுத்துரைக்கலாம். இத்தகைய எளிதான முறையில் ஒரு பெண் தன் அயலகத்தாரில் இரு வரை கர்த்தருக்குள் வழி நடத்தியிருக்கிறார்.

நம் அயலகத்தாரை கிறிஸ்துவுக்குள் வழி நடத்துவது நம் விசேஷித்த பொறுப்பாயிருக்கிறது. உங்களுக்குப் பரிச்சயமான தெருக்களில் நடந்து, மூடப்பட்ட





கதவுகளுக்கு பின்னே வாழும் அந்த மக்களைப் பற்றி நினைத்துப் பாருங்கள். அவர்கள் தங்கள் நித்தியத்தை எங்கே கழிப்பார்கள்? சத்தியத்தை அறிந்து கொள்ள எங்கோ ஓரிடத்தில் ஒரு லீதியாள் காத்திருக்கிறாள். சிலவேளைகளில் முதியோர் தங்கள் தனிமையினிமித்தம் வசனங்களைப் படிப்பதில் இளம்பெண்களை விட அதிக அக்கறையோடு ஏற்றுக் கொள்வார்கள். வீடுவீடாக சென்று மக்களை சந்தித்த போது, இப்படிப்பட்ட ஒரு வயதான பெண்ணை ஒரு கிறிஸ்தவப் பெண் கண்டாள். அந்த கிறிஸ்தவ பெண், தனியாக இருந்த அம்மாவிடம் வேதாகமப் படக்காட்சியைக் காட்டி வாரத்தின் இடைப்பட்ட நாளில் சந்திக்கத்தக்கதாக வசனங்களுடன் கூடிய சில வேதாகமக் கேள்விகளை விட்டுச் சென்று, இவ்விதமாக அவர்களோடு வேத பாடத்தை தொடர்ந்து படித்தாள். இறுதியில், எண்பத்தேழு வயதான அந்த அம்மா ஞானஸ்நானத்தில் கர்த்தருக்குக் கீழ்ப்படிந்தாள்.

இளம் பெண்களும் இதே முறையை பயனளிக்கும் தங்கள் சக தோழிகள் மத்தியில் பயன்படுத்த முடியும். அவர்கள் தங்களோடு படிக்கும் மாணவிகளை வீட்டிற்கு வேத பாட வகுப்புக்கென்று அழைத்து அதில் வேதாகம படக்காட்சியைக் காட்டி அல்லது திறந்த வேதாகம பாடம் நடத்தி வெற்றியடைந்ததை நான் பார்த்திருக்கிறேன்.

ஓர் இளம் பெண் திறந்த வெளி வேதபாட முறையைப் பயன்படுத்தி அநேக பெண்களைச் சந்தித்தாள். இந்த கிறிஸ்தவ இளம் பெண் தன்னோடு பள்ளியில் பணியாற்றும் ஆசிரியைகளை சாயங்காலத்தில் ஒவ்வொரு வாரமும் தன் வீட்டிற்கு வேதாகமத்தைப் படிக்க அழைத்தாள். அவர்கள் சுவிசேஷப் புத்தகங்களில் ஒன்றை வசன வசனமாக படிக்கத் தொடங்கினார்கள். அந்தப் பெண்களில் அநேகர் வேதாகமத்தை வாசித்தது கூட இல்லை. சுவிசேஷப் புத்தகங்களில் ஒன்றை அவர்களோடு படித்தது, தொடர்ந்து அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகத்தை அவர்களோடு படிக்க வழி வகுத்தது. அதில் இடம் பெற்றுள்ள மனமாற்ற சம்பவங்களைப் படித்தவுடன் ஆர்வம் ஏற்பட்டு, ஞானஸ்நானத்தில் கர்த்தருக்குக் கீழ்ப்படிய விரும்பினார்கள்.

ஒரு பெண் அறிமுகமில்லாத பெண்ணுடன் வேத வாக்கியங்களைப் படிக்க தயக்கம் காட்டினால், இன்னொரு வழியிருக்கிறது. அறிமுகமான ஒரு பெண் ஞானஸ்நானம் பெறும் போது, அவளிடத்தில் போய் நான் உங்கள் வீட்டுக்கு வசனங் களைப் படிக்க, சில அடிப்படைப் பாடங்களைப் படிக்க வரலாமா என்று கேளுங்கள். அவளுக்கு வசனங்களை எப்படி



கண்டுபிடிப்பது எனக்காட்டி, பல்வேறுபட்ட தலைப்புகள் குறித்த வசனங்களை ஒரு நோட் புத்தகத்தில் எழுதிக் கொடுக்கும் போது, அந்தப் பெண் அந்தத் தகவல் களை தன் விரல் நுனியில் வைத் துக் கொண்டு எதிர் காலத்தில் மற்றவர்களுக்கு போதிக்க முடியும்.

அஞ்சல் வழிப் பாடங்களைத் திருத்துவது ஒரு கிறிஸ்தவப் பெண் மற்றவர்களுக்குப் போதிக்கும் இன்னொரு வழியாகும். இப்படிப்பட்ட வேலையாட்களை அநேக சபைகள் தொடர்ந்து தேடிக் கொண்டு இருக்கின்றன. ஒரு மருத்துவ மனையில் முடங்கிக் கிடந்த



பெண் இழந்து போனவர்களை சந்திக்கும் முயற்சியில் ஈடுபட விரும்பினாள். அந்த வேலையை எளிதாக்க அந்த பிராந்திய சபையில் உள்ள மூப்பர்கள் அவளுடைய சக்கர நாற்காலியில் ஒரு போர்டை வைத்துக் கொடுத்தனர். சீக்கிரமாக அந்த மருத்துவ மனையிலிருந்தே மற்றொரு பெண்ணை தன்னுடன் பிறருக்குப் போதிக்க தேர்வு செய்து கொண்டாள். ஒரு வருடத்தில் நூற்றுக்கணக்கான மக்களுக்கு இந்தப் பெண்கள் போதித்தார்கள். அந்த பிராந்திய சபையால் கொடுக்கப்பட்ட ஞானஸ்நானங்களை விட இந்த பெண்களுடைய பணியால் அதிக ஞானஸ்நானங்கள் கொடுக்கப்பட்டன!

ஒரு கிறிஸ்தவப் பெண் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியும் யாரோ ஒருவருக்கு போதிக்கும் பணியைச் செய்து விட்டால், போதிக்கப்பட்டவள் அப்படியே இருந்து விடப் போவதில்லை. யாரோ ஒருவரை அடுத்ததாக கிறிஸ்துவுக்காக ஆதாயப்படுத்தும் வரை அவள் சமாதானமாக இருக்கமாட்டாள். அது அவளுக்கு ஒரு தொடர் சிந்தனையாகி விடும், ஆனால், என்ன ஓர் அருமையான அனுபவம்.

## மூன்று வகையான தவறான ஆராதனை

❊ **வீணான ஆராதனை** (மத். 15:8,9)

1. இது வெறுமையாகச் செய்யப்படும் ஆராதனை
2. இதற்கு நோக்கமும், ஆவிக்குரிய ரீதியில் அர்த்தமும் இல்லை.
3. ஆகவே, இது ஏற்றுக் கொள்ள படத்தக்கதல்ல

❊ **சுய இஷ்டமான ஆராதனை** (கொலே. 2:20,23)

1. மனிதனுடைய விருப்பத்தின் படி ஏறெடுக்கப்படுகிறது.
2. இது மனித வழிகாட்டுதலின் படியானது.
3. இது மனிதன் மனிதனை வழி நடத்துவது போன்றது.

❊ **அறியாத ஆராதனை** (அப். 17:23)

1. புரிந்து கொள்ளாமல் ஆராதிப்பது
2. இது நேர்மையானதாகவும், நல்ல நோக்கமுடையதாக இருந்தாலும் கூட, ஏற்றுக்கொள்ளப் பட தக்கதல்ல.

# சிறையில் இருப்பவர்களுக்கும் சுவிசேஷம் தேவை



## People in Jail Need the Gospel, Too

*Bill Nicks*

கடந்த இரண்டு மாதங்களாக ப்ளோரிடாவிலுள்ள ஒரு சிறையில் நம்முடைய சிறை ஊழியர் போதனையில் ஈடுபட்டபோது அவருக்கு உதவியாக இருந்து வருகிறேன். ஒவ்வொரு வியாழக்கிழமையும் இரவு ஏழு மணியிலிருந்து எட்டு மணி வரை சுமார் 20 பேருக்கு சிறையில் வகுப்புகளை நடத்தினேன். நான் டிரினிடாட் தீவிலிருந்து நாட்டுக்கு திரும்பி வந்ததிலிருந்து இந்த நல்ல வேலையில் உதவி செய்ய என்னை ஈடுபடுத்திக் கொண்டதை சிலாக்கியமாக கருதுகிறேன். இந்த பத்திரிக்கையை வாசிக்கும் சிலர் சிறையில் இருப்பார்கள், சிலர் சிறை ஊழியம் செய்பவர்களோடு இணைந்து வேலை செய்து கொண்டிருப்பார்கள். நீங்கள் எங்கே இருந்தாலும், யாராக இருந்தாலும் இது உங்களை உற்சாகப்படுத்தும் என்பது என் நம்பிக்கையாக இருக்கிறது.

மற்றவர்களுக்கு எப்படி உபதேசம் அவசியமோ அதுபோல சிறையில் இருப்பவர்களுக்கும் அவசியப்படுகிறது. அவர்கள் தங்கள் ஆத்துமாக்களைக் குறித்து உண்மையாகவே உணர்வுப் பூர்வமாகப் படிக்கும் நிலையில் உள்ளார்கள். கீழ்க்காணும் பாடங்கள் தான் நான் அவர்களோடு சில எளிய வேதாகம கேள்விகளைப் படித்தபோது சிறையில் உள்ளவர்களால் விரும்பப்பட்டது.

**1. இயேசு ஏன், எப்படி ஞானஸ்நானம் பண்ணப்பட்டார்?** *எல்லா நீதியும் நிறைவேறத்தக்கதாக* அவர் யோர்தான் நதியில் யோவான் ஸ்நானனால் ஞானஸ்நானம் பண்ணப்பட்டார் (மத். *3:14-17*). நாம் பாவமன்னிப்புக்காக ஞானஸ்நானம் பெறுவது போல அவர்



ஞானஸ்நானம் பெறவில்லை, ஏனென்றால், அவர் எந்தப் பாவமும் செய்யவில்லை (1பேதுரு *2:22*). இயேசு ஞானஸ்நானத்தை ஒரு நீதியான செயலாக அறிவித்திருக்கிறபடியால் *நாம் மனந்திரும்பி, பாவ மன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற வேண்டுமென அவர் கட்டளையிடுகிறார்* (அப். *2:38*) அதன் பிறகு தான், நாம் அவருடைய சபையில் சேர்க்கப்படுவோம் அப். *2:47; 22:16* ; கலா. *3:26,27*. ஞானஸ்நானம் இன்றி யாரும் இதுகாறும் இரட்சிக்கப்பட்டதேயில்லை. ஆனால், இரட்சிப்பின் முழுமையான திட்டமாகிய விசுவாசம், மனந்திரும்புதல், இயேசுவை தேவனுடைய குமாரனென்று அறிக்கை செய்தல் ஆகியவைகளை நிறைவேற்றிய பிறகு பெறப்படும் ஞானஸ்நானம் ஒருவரை இரட்சிக்கிறது (*1* பேதுரு *3:21*).

**2. ஏன் ஆவியானவர் " ஒரு புறாவைப்போல் " இயேசுவின் மீது இறங்கினார் [மத்.3:16]** இயேசு தேவனுடைய குமாரனென்று யோவானிடம் காட்டுவதற்காகவும், சிலரை பரிசுத்த ஆவியினால் இயேசு ஞானஸ்நானப்படுத்துவார் என்பதை யோவானுக்குத் தெரியப்படுத்துவதற்காகவும்தான் ஆவியானவர் " ஒரு புறாவைப்போல் " இயேசுவின் மீது இறங்கினார் (யோவா. *1:31-34*) இயேசு மாத்திரமே அப்போஸ்தலர்களை பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானப்படுத்துவதாக வாக்குத்தத்தம் செய்தார் (அப்.*1:5-8*), அவர் அந்த வாக்குத்தத்தத்தை தாம் உயிர்த்தெழுந்து, பரமேறிய பிறகு பெந்தேகொஸ்தே நாளிலே நிறைவேற்றினார் (அப். *2:1-4*). பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் குறித்து வேறொரு சம்பவம் உண்டு. கொர்நேலியு வீட்டில் பரிசுத்த ஆவியின் ஞானநானம் அருளப்பட்டது. இது அப்போஸ்தலர் 10,11 அதிகாரங்களில் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. இரண்டு நிகழ்விலும் அவர்கள் இரட்சிக்கப்படும்படியாக கொடுக்கப்படவில்லை. அப்போஸ்தலர்கள் பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் பெறுவதற்கு முன்பே இரட்சிக்கப்பட்டிருந்தார்கள் (யோவா *15:3*). புறஜாதிகளும் அதைப் பெற்றுக் கொண்ட பிறகு இரட்சிக்கப்படவில்லை மாறாக, அவர்களை இரட்சிக்கும் வார்த்தைகளை பேதுரு மூலமாகக் கேட்க வேண்டியதாயிருந்தது (அப். *11:14*), அதன் பின்பு பேதுரு அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுக்கும்படி கட்டளையிட்டார் (அப். *4:4-6*). இந்த இரு மனமாற்ற சம்பவங்களுக்குப் பிறகு, ஒரு ஞானஸ்நான சம்பவம் நடந்துள்ளது, அது தண்ணீரில் நடந்துள்ளது. (அப். *8:36-38*) அது ஆத்துமாவை இரட்சிக்கப்படும்படியாக கொடுக்கப்பட்டது (மாற்கு *16: 16; 1* பேதுரு *3:21*). இயேசு ஞானஸ்நானம்

பெற்ற போது பரிசுத்த ஆவியானவர் புறாவைப் போல இறங்கினது, அப்போஸ்தலர்களும், கொர்நேலியுவும் அவன் வீட்டாரும் பற்பல பாஷைகளில் பேசினது போன்றவைகளை இன்று நாம் காண முடியாது. நாம் கிறிஸ்துவின் உபதேசத்தில் நிலைத்திருக்கும்போது பரிசுத்த ஆவியானவருடைய வார்த்தையினால் வரும் ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ளுகிறோம் (II யோவா *9-11*). சபை ஸ்தாபிக்கப்படவும், சுவிசேஷம் உறுதியாக்கப்படவும் அற்புத அடையாளங்கள் அவசியப் பட்டது. ஆனால், வசனமாகிய நிறைவானது வந்தவுடன் அது நீக்கிப் போடப்பட்டது (*1* கொரி. *13:8-13*; எபே. *4:7-16*; யாக். *1:25*; *2:12*; எபி. *2:1-4*).

**3. தேவனுடைய ஜனங்கள் தரித்துக்கொள்ளத்தக்கதாக கொடுக்கப் பட்ட புதிய நாமம் என்ன?** அந்த புதிய நாமம் ஏசாயா *62:1,2* வசனங்களில் தீர்க்கதரிசனமாக உரைக்கப்பட்டது. அது புறஜாதிகளின் மனமாற்றத் திற்குப் பிறகு அவர்களுக்கு கொடுக்கப்பட்டது. இது அப்போஸ்தலர் *11:26*ல் நிறைவேறியது. இதற்காகவே பவுல் தேவனால் அனுப்பப் பட்டார். " *அவன் புறஜாதிகளுக்கும் ராஜாக்களுக்கும், இஸ்ரவேல் புத்திரருக்கும் என்னுடைய நாமத்தை அறிவிக்கிறதற்காக நான் தெரிந்து கொண்ட பாத்திரமாயிருக்கிறான்* " (அப். *9:15*). நாம் தரித்துக்கொள்ள வேண்டிய புதிய நாமம் கிறிஸ்தவன் என்பதாகும். இது சத்துருக்களால் பரிகாசமாக கொடுக்கப்பட்ட பெயரல்ல. மாறாக, "கர்த்தரின் வாயினால் கொடுக்கப்பட்ட பெயராகும் ". தேவனுடைய ஜனங்களாக இருக்கிற கிறிஸ்தவர்கள் *கிறிஸ்துவின் சபையார்* என்றழைக்கப்படுகி றார்கள் (ரோமர் *16:16*) ஏனென்றால், சபையானது கிறிஸ்துவால் கட்டப்பட்டது, வாங்கப்பட்டது, அவரே அதற்கு தலையாயிருக்கிறார் (மத். *16:18*; கொலோ. *1:18*).

சிறையில் இருக்கும் ஆண்களும், பெண்களும் இந்த எளிய உண்மையைப் புரிந்து கொள்ள முடியும். மேலும், தேவன் பாவிகளை இரட்சிக்க இரக்கமுள்ளவராயிருக்கிறார் என்பதை அவர்கள் உணரும் போது தங்கள் வாழ்க்கையை மாற்றிக் கொள்ள முடியும். அதன் மூலம் அவர்கள் தேவனுடைய மாபெரும் அன்பையும், மன்னிப்பையும் பற்றிய நம்பிக்கையைப் பெற்றுக்கொள்ள முடியும்.

**ஜெபம் : மனிதன் தேவனோடு பேசுவது.**





# குடும்பத்தில் தம்பதியினரிடம் எழும்பும் பிரச்சனைகளுக்கு வேதாகமத்தின் பதில்

## BIBLE ANSWER TO FAMILY PROBLEMS

*P.C. Philomonraja*

**ஆ**ண்டவர் இயேசு கிறிஸ்துவின் பெயராலே உங்கள் அனைவரையும் வாழ்த்துகிறேன். இன்றைய தலைமுறையில் தம்பதியினரிடம் கருத்து வேறுபாடு உண்டாகும் போது அதை எப்படி சரி செய்வது என்று வேதாகமத்தின் வாயிலாக இன்று நாம் தெரிந்து கொள்வோம்.

குடும்பம் தேவன் விரும்புகிற ஒரு முக்கியமான இடம். குடும்பத்தையும், சபையையும் தேவன் ஒப்பிட்டுப் பேசக்கூடியவராக இருக்கிறார். நீங்கள் ஒருவருக்கொருவர் அவயவங்களாயிருக்கிறபடியினாலே, மெய்யைப் பேச வேண்டுமென்று அவர் சொல்லுகிறார். பிரச்சனை வரும் போது வலியப் போய் ஒருவருக்கொருவர் அன்பு பாராட்டி, இரக்கம் பாராட்டி, சமாதானம் பேசி தேவன் இணைத்த உறவை நெருக்கப்படுத்திக்கொள்ள வேண்டும்.

எபேசியர் *4:26,27* " நீங்கள் கோபங்கொண்டாலும் பாவஞ் செய்யாதிருங்கள்; சூரியன் அஸ்தமிக்கிறதற்கு முன்னாக உங்கள் எரிச்சல் தணியக்கடவது; பிசாசுக்கு இடங்கொடாமலும் இருங்கள் ". 25-ம் வசனம் ஒருவருக்கொருவர் நேர்மையாக நடங்கள் என்று சொல்லுகிறது. 26-ம் வசனம் கட்டுப்படுத்தக் கற்றுக்கொள்ளுங்கள் என்கிறது. கோபம் வராமல் மனுஷன் இருக்க முடியாது. தேவனுக்குக் கூட கோபம் வந்ததல்லவா? அழித்துப் போடுவேன் என்றார் முழு உலகத்தையும். ஆனால், அதற்கு முன்பு அவர் என்ன செய்தார்? அந்த அழிவு அவர்களுக்கு வருவதற்கு முன்பே அவர்கள் தப்பிக் கொள்ளுவதற்கு ஒரு வழி பண்ணினார். அப்படியானால் இங்கு நாம் கற்றுக் கொள்ள வேண்டிய விஷயமென்ன? கோபம் ஒரு பாவமல்ல. இந்த கோபம் கடுங்கோபமாய் மாறுவது பாவமென்றும், கோபத்தினுடைய விளைவு அழிவை ஏற்படுத்துமே என்றால் அதுவும் பாவமே. கோபம் கொடூரமான தாயில்லாதபடி பார்த்துக் கொள்ளுங்கள். கோபம் வரும் போது பாவம் செய்யும்படியாக வார்த்தைகள் போகாத அளவுக்கு கட்டுப்படுத்த கற்றுக் கொள்ள வேண்டும். நான் சும்மா கோபப்படவில்லை. அங்கு தப்பு

நடந்ததினால் தான் கோபப்பட்டேன். தப்பு நடந்தால் அதை தைரியமாக சொல்வது தவறில்லை. ஆனால், அதில் வார்த்தைகள் தடித்துவிடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். இதை வேத வசனம் எச்சரிக்கை கொடுக்கிறது. பிரியமானவர்களே! கோபம் இயல்பு தான். ஆனால், அந்த கோபம் அழிவை ஏற்படுத்தி விடக்கூடாது.

எண்ணாகமம் 25:4ல் "கர்த்தர் மோசேயை நோக்கி; கர்த்தருடைய உக்கிரமான கோபம் இஸ்ரவேலை விட்டு நீங்கும்படி நீ ஜனங்களின் தலைவர் எல்லாரையும் கூட்டிக் கொண்டு, அப்படிச் செய்தவர்களைச் சூரியனுக்கு எதிரே கர்த்தருடைய சந்நிதானத்தில் தூக்கிப் போடும்படி செய் என்றார் ". தேவன் இங்கு கடுங் கோபப்படுகிறார். தப்பு செய்கிறவனை உன் ஜனத்திலிராதபடி தூக்கில் போடு என்கிறார். அழித்துவிடு என்கிறார். கொலை பண்ணிவிடு என்கிறார். உபாகமம் 9:8 "ஓரேபிலும் நீங்கள் கர்த்தருக்குக் கடுங்கோபம் உண்டாக்கினதினால், கர்த்தர் உங்களை அழிக்கத்தக்கதான உக்கிரங்கொண்டார். தேவன் அழிக்கும்படியாக உக்கிர கோபம் கொண்டார். இவை இரண்டும் எதை அடையாளப்படுத்துகிறது. பாவத்தை சமாளித்துக் கொள்ளுங்கள் என்று சொல்லவில்லை. கோபம் கொள்ளும் போது என்ன பாவம் செய்தாலும் பரவாயில்லை என்று தேவன் Adjust பண்ணலாம் என்று சொல்லவில்லை. பாவத்துக்கு விரோதமாய் கோபம் கொள்ளலாம். ஆனால், பாவம் செய்தவனை அழித்து விடும்படியாக கோபம் கொள்ளக் கூடாது என்பதை இது நமக்கு அடையாளம் காட்டுகிறது.

மக்களை உடல் ரீதியாகவும், ஆவிக்குரிய விஷயத்திலும் அழிக்கிற அளவுக்கு நாம் கோபத்தை நாம் அனுமதித்து விடக் கூடாது. பாவத்திற்கு விரோதமாய் நாம் கோபம் கொள்ளலாம். அந்த கோபம் பாவம் செய்தவனை அழித்து விடும்படியாக இருக்கக் கூடாது. நம்மில் அநேகம் பேர் குடும்ப வாழ்க்கையிலே பிரச்ச னைகளை உண்டாக்குவதற்கான காரணம் சின்ன விஷயத்திற்குக் கூட கோபப்படுகிறவர்களாக இருப்பதே. மனிதருடைய சுபாவமே அப்படித்தான் இருக்கிறது.

மனைவி ஒரு தப்பு செய்திருப்பாள் அல்லது புருஷன் ஒரு தப்பு செய்திருப்பான், அப்போது நம் குழந்தை ஒரு டம்ளர் காப்பியை கொட்டி விடுகிறது, நாம் என்ன செய்கிறோம்? உடனே குழந்தையை அடி அடி என்று அடித்து விடுகிறோம். இதற்கு அர்த்தம் என்ன? எதற்கு எரிச்சல்? ஏன் கோபம்? எதை நீ சரி பண்ண, எதை நீ அழிக்க முயற்சிக்கிறாய்? கவனமுள்ளவர்களாய் நாம் இருக்க வேண்டும். ஒருவர் மீது ஒருவருக்கு கோபம் வரும் பொழுது, ஒருவர் மீது ஒருவர் கூறும் குற்றச்சாட்டு இருக்கிறதே அது எதிரே



இருக்கிறவர்களை அழிந்தே போகும் அளவிற்கு கொண்டு போய் விடுகிறது. கோபத்தின் விளைவு என்ன தெரியுமா? ஒரு கோபப்படும் கணவனோ, மனைவியோ என்ன செய்கிறோம் தெரியுமா? சாத்தானிடம் போய் வேகமாக சேர்ந்து கொள்கிறோம். சாத்தானே, சாத்தானே தேவன் எங்களை ஒன்றுப்படுத்தினார். என் புருஷன் சரியில்லை, என் மனைவி சரியில்லை, அதினால் நான் இப்பொழுது, என் கோபத்தை என் கையில் எடுத்துக் கொண்டேன். வா சாத்தானே நாம் இருவரும் சேர்ந்து இந்த குடும்பத்தை ஒன்றுமில்லாமலாக் கிவிடுவோம் என்று அவனுடன் சேர்ந்து கொள்ளுகிறோம் என்று அர்த்தமாம்.

தேவன் குடும்பத்தை இணைத்தார். தேவன் இணைத்ததை மனிதன் பிரிக்காதிருக்கக்கடவன் என்கிறார். நாமாக செய்யக் கூடாததை கோபத்தை கையில் எடுத்துக் கொண்டு, நம் பக்கம் சத்துருவானவனை சேர்த்துக் கொண்டு செய்து விடுகிறோம்.

ஆகவே, கவனமாய் நாம் இருக்க வேண்டியவர்களாய் இருக்கிறோம்.

அடுத்தபடியாக தம்பதியினருக்குள்ளே இருக்கும் கருத்து வேறுபாடுகளை சரி செய்ய, நாம் செய்ய வேண்டிய விஷயம் என்ன தெரியுமா? சரியான வேளையில் செய்ய வேண்டியதைச் செய்யுங்கள். 26-வது வசனத்தைப் பார்ப்போம். வசனம் நமக்கென்ன அழகான ஐடியா கொடுக்கிறது பார்த்தீர்களா? கோபம் கொண்டு விட்டாய், பாவமும் செய்து விட்டாய், பயங்கரமான எரிச்சல் வந்து ஒரு பெரிய பிரச்சனையும் வந்து விட்டது. அப்போது கணவன், மனைவிக்குள்ளிருக்கும் கருத்து வேறுபாட்டைச் சரி செய்ய தேவன் நமக்கு என்ன சொல்லிக் கொடுக்கிறார்? சூரியன் மறைவதற்குள் நீ உன் மனைவியுடன் சரியாகு என்கிறார். கோபித்துக் கொண்டு போய் உன் தாய் வீட்டில் 4 நாள் உட்கார்ந்து கொள் என்று சொல் லவில்லை. காது கேட்கின்றதா? நன்றாய் புரிகிறதா? பிரச்சனை வந்த அன்றே SETTLE பண்ணிவிடு என்கிறார். தேவன் அடுத்த நாள் வரை எடுக்காதே என்கிறார். தேவன் சரியான வேளையில் சரியானதை செய்து விட வேண்டுமென்றும் கசப்பு, எரிச்சல், முறுமுறுப்பு, வைராக்கியம், கோபம் இவைகளை மறுநாள் வரை CONTINUE பண்ணாதே அப்போது தான் பிரச்சனை சரியாகும் என்கிறார்.

பிரச்சனைக்கு உடனடித் தீர்வு காணுங்கள். காபி சரியில்லை, சீனி போதவில்லை அதினாலே டம்ளர் பறந்தது, டம்ளர் மேலே போய் விழுந்தது. அடிப்பட்டு விட்டது. அதினால் அவர்கள் பேசினார்கள். இவர் குடும்பத்தை குடும்பத்தை இவர்கள் பேசி அவர் பேசினார் பெரிய பிரச்சனையாகி, அடித்து பெரிய தகராராகி போய் விட்டது.

இங்கே, தேவன் என்ன சொல்கிறார், சூரியன் அஸ்தமிக்கும் முன்பே, எதினால் இந்த பிரச்சனை ஆரம்பித்ததோ அதை பார்த்து அந்த இரவுக்குள்ளாகவே, நீ சமாதானமாகி விட வேண்டும் என்று வேதம் நமக்குச் சொல்கின்றது. அப்புறம் என்று நாளை தள்ளிப்போடுவது நல்லதல்ல. 2 மாதமாகட்டும் என்று தள்ளிப் போடாதிருங்கள். சூரியன் அஸ்தமிக்கும் முன்பதாகவே எரிச்சல் தணியக்கடவது. ஆனபடியினாலே கணவன் மனைவிக்குள்ளிருக்கும் கருத்து வேறுபாடுகளை உடனே சரி செய்யுங்கள்.

நான் பேச வேண்டும் என்று நினைக்கிறேன். அவள் திருந்த மாட்டாள். அவரிடம் பேசலாம் என்றால் அந்த ஆள் மாறவே மாட்டான். இப்படிச் சொல்லிக் கொண்டேயிருந்தால் எப்படி சமாதானத்திற்கான வேலையை ஆரம்பிப்பது? இதற்கு தான், அந்த காலத்திலி ருந்து சொல்லப் படுவது ஒவ்வொரு கிறிஸ்தவ குடும்பத்திலேயும் குடும்ப ஜெபம் நடக்க வேண்டும் என்று. காது கேட்கிறதுங்களா? நீங்கள் என்ன சாதித்து விட்டு வந்தாலும் பரவாயில்லை குடும்பமாக கூடி ஜெபியுங்கள். குடும்ப ஜெபமில்லாத வீடு கூரையில்லாத வீடு. கூரையில்லா விட்டால் எல்லா அழுக்கும், தூசியும், குப்பையும் மேலே பறக்கும் காக்கா, குருவி கூட எச்சத்தைப் போட்டு விட்டு போகும்.

குடும்ப ஜெபத்தில் தேவனே என் கணவனை ஆசீர்வதியும், என் மனைவியை ஆசீர்வதியும், தேவனே இந்த பிரச்சனையை ஏன் ஆரம்பித்தேன் என்று தேவனிடம் சொல்லுங்கள். இதை கேட்கும் மனைவியோ, கணவனோ சமாதானமாக, தங்கள் மனதை இலகுவாக்கிக் கொள்வார்கள். கூடி ஜெபியுங்கள். குடும்ப ஜெபத்திற்கு கூடி முன்பாக உட்கார்ந்து விட்டோம். நடந்த பிரச்சனை எல்லாம் விட்டு விடுங்கள். தேவனே நாங்கள் எல்லாம் கூடி ஜெபிக்க அமர்ந்திருக்கிறோம் அதற்கு நன்றி என்று சொல்லுங்கள். ஒருவரையொருவர் பாராட்டுங்கள்.

கோபத்திலிருப்பவர்கள் பைபிள் எடுத்து வைத்து விட்டார்கள் என்றால் அதற்கு நன்றி என்று சொல்லுங்கள். எதையோ ஒன்றை பாராட்டுங்கள்; வெறுப்புகளை வளர்க்காதபடி பிரச்சனைகளைக் கையாள கற்றுக் கொள்ளுங்கள். அப்போது நிச்சயமாக கணவன் மனைவிக்குள்ளே ஒரு பெரிய வெற்றியுள்ள, சமாதானமும், சாந்தமும், சந்தோஷமும் நிலவுமென்பதை நீங்கள் மறந்து போய் விடக்கூடாது. தேவன் தாமே குடும்பத்தைக் கட்டும்படியாக நீங்கள் எடுக்கிற எல்லா முயற்சியிலும் வெற்றியை கட்டளையிடுவாராக! ஆமென். ❖





# ஒரே இருதயமும், ஒரே மனமும்

## One Heart and One Soul

*B. Arjunan*

எல்லோருக்கும் ஒரே இருதயமும், ஒரே மனமும் இருக்கிறதா? ஒரே இருதயம் மட்டும் எல்லோருக்கும் இருக்கிறது. ஆனால், ஒரே இருதயமும், ஒரே மனமுமாக எல்லோரும் இருப்பதில்லை. முதல் நூற்றாண்டு கர்த்தருடைய சபையில் இப்படிப்பட்ட ஐக்கியம் காணப்பட்டது. விசுவாசிகளாகிய திரளான கூட்டத்தார் ஒரே இருதயமும் ஒரே மனமுமுள்ளவர்களாயிருந்தார்கள். ஒருவனாகிலும் தனக்குள்ளவைகளில் ஒன்றையும் தன்னுடையதென்று சொல்லவில்லை; சகலமும் அவர்களுக்குப் பொதுவாயிருந்தது (அப். 4:32). இன்றைக்கு என்னுடையது உன்னுடையது என்று எங்கும் சொல்லக் கேள்விப்படுகிறோம். உன்னைப்போல பிறனையும் நேசி என்ற வேத வாக்கியத்தை கைக்கொண்டவர்களாக இருப்போமானால் என்னுடையது உன்னுடையது என்று சொல்லமாட்டோம்.

ஆண்டவர் இயேசு உயிர்த்தெழுந்த பின்பு சபையானது ஆவியில் வளர்ந்து பெருகினது. விசுவாசிகள் உற்சாகமுள்ளவர்களாக இருந்தார்கள். ஆனபடியினாலே அவர்களுக்குள்ளாக இந்த விதமான ஐக்கியம் காணப்பட்டது. ஊழியத்தை வளர்க்க வேண்டும் என்ற நோக்கத்தோடு எல்லாவற்றையும் பொதுவாக வைத்து அனுபவித்தார்கள். மேலும், " அவர்கள் ஒருமனப்பட்டவர்களாய் தேவாலயத்திலே அநுதினமும் தரித்திருந்து, வீடுகள் தோறும் அப்பம்பிட்டு மகிழ்ச்சியோடும் கபடமில்லாத இருதயத்தோடும் போஜனம் பண்ணி, தேவனைத் துதித்து, ஜனங்களெல்லாரிடத்திலும் தயவு பெற்றிருந்தார்கள். இரட்சிக்கப்படுகிறவர்களைக் கர்த்தர் அநுதினமும் சபையிலே சேர்த்துக் கொண்டு வந்தார் " (அப். 2:46,47), அநுதினமும் கூடி ஜெபிக்கிறவர்களாக இருந்தார்கள். இந்நாட்களில் வாரத்தின் முதல் நாளில் கூடி தேவனை ஆவியோடும், உண்மையோடும் தொழுதுகொண்டு வருகிறோம். வாரத்தில் ஒரு நாள் கூடி வருவதிலே கூட, அநேகர் ஒழுங்காக கூடி வருவதில்லை. நினைத்தபொழுது சபைக்கு வந்து போகிறார்கள். இப்படி இருக்கும் போது ஒரு மனம் ஏற்பட வாய்ப்பு இல்லை. முதல் நூற்றாண்டு சபையாரை நோக்கிப் பார்க்க வேண்டும். " காணியாட்சிகளையும் ஆஸ்திகளையும் விற்று, ஒவ்வொருவனுக்கும் தேவையானதற்குத்தக்கதாக அவைகளில் எல்லாருக்கும் பகிர்ந்து கொடுத்தார்கள் " (அப். 2:45). ஒருவனுக்கு குறைச்சல் உண்டு என்று கண்டு அவனுக்குக் கொடா

விட்டால், உங்களுடைய விசுவாசம் எப்படிப்பட்டதாயிருக்கும்? நன்மை செய்ய அறிந்தும் அதைச் செய்யாமற்போனால் அதுவே பாவமாயிருக்கும். ஒரே இருதயமும், ஒரே மனமும் உடையவர்களாக மாற வேண்டுமானால், சபையில் குறைச்சல் உள்ளவர்களைத் தாங்க வேண்டும். விசேஷமாக விசுவாச குடும்பத்தார்களுக்கு நன்மை செய்யக்கடவோம் என்று கலாத்தியர் புத்தகத்தில் வாசிக்கிறோம்.

நாமும் ஒரே இருதயமும், ஒரே மனமும் உடையவர்களாக இருக்க வேண்டும் என வேதாகமம் போதிக்கிறதா என்று நீங்கள் கேட்கலாம். ஆம், நம் ஆண்டவர் "நீங்கள் ஒருவரிலொருவர் அன்புள்ளவர்களாயிருந்தால், அதினால் நீங்கள் என்னுடைய சீஷர்களென்று எல்லாரும் அறிந்து கொள்வார்கள்" என்றார் (யோவா 13:35). நாம் ஆண்டவருடைய சீஷர்கள் என்பதற்கு அடையாளம் பட்டமோ, பதவியோ, உடையோ அல்ல. மாறாக, அன்பு நிறைந்தவர்களாக இருக்க வேண்டும். நான் ஒரு சபைக்குப் பிரசங்கிக்கும்படியாக அழைக்கப்பட்டிருந்தேன். சபை ஆராதனை முடிந்தவுடன், அந்த திருச்சபையார் கண்மூடி கண் திறப்பதற்குள்ளாக எல்லோரும் கலைந்து சென்று விட்டனர். அப்பொழுது புரிந்து கொண்டேன் அவர்களுடைய ஐக்கியம் பற்றி. இவ்வளவுக்கும் அந்த சபையார் ஒரே ஊரைச் சேர்ந்தவர்கள். இன்னும் சொல்லப்போனால், ஒரே தெருவைச் சேர்ந்தவர்கள். இப்படியிருந்தால் ஐக்கியம் எப்படி ஏற்படும். ஆதிசபையார் இப்படியிருந்ததாக வேதாகமத்தில் நாம் வாசிக்கின்றோமா? ஆண்டவர் சொல்லுகிற தான அன்பு நமக்குள் ஏற்பட வேண்டும். ஆண்டவர் நம்மை மீட்கும்படியாக தன்னுடைய ஜீவனையே சிலுவையில் கொடுத்தார். நாமும் ஒருவருக்காக ஒருவர் ஜீவனைக் கொடுக்கக் கடனாளிகளாயிருக்கிறோம். அதை மறந்து விடாதீர்கள். " உங்கள் அன்பு மாயமற்றதாயிருப்பதாக, தீமையை வெறுத்து, நன்மையைப் பற்றிக் கொண்டிருங்கள். சகோதர சிநேகத்திலே ஒருவர் மேலொருவர் பட்சமாயிருங்கள்; கனம் பண்ணுகிறதிலே ஒருவருக்கொருவர் முந்திக்கொள்ளுங்கள் " என்று பவுல் ரோம கிறிஸ்தவர்களுக்கு எழுதியிருக்கிறதை நாம் ரோம. 12:9,10 வசனங்களில் வாசிக்கிறோம். உங்களுடைய அன்பு எப்படிப்பட்டதாயிருக்கிறது? ஆண்டவர் அன்பு செலுத்தியதைப் போல நீங்களும் சகோதரரில் அன்பு செலுத்துங்கள். ஒருவரும் உங்களை இந்த விஷயத்தில் குற்றப்படுத்த இடம் கொடாதிருங்கள். மேலும், கலாத்தியர் புத்தகத்தில் வாசிக்கிறோம்; " ஒருவர் பாரத்தை ஒருவர் சுமந்து, இப்படியே கிறிஸ்துவின் பிரமாணத்தை நிறைவேற்றுங்கள்" (கலா. 6:2). கிறிஸ்துவின் பிரமாணத்தை நிறைவேற்றுவதற்கு சபைக்கு சென்றால் மட்டும் போதாது, மற்ற சகோதரர்கள் படுகிற உபத்திரவத்திலே அவர்களை விசாரிக்க வேண்டும். அவர்களுடைய பாடுகளில் நாமும் பங்கு கொள்ளும்போது, அது அவர்களுக்கு சுமையைக் குறைப்பதாக இருக்கும். இது ஆண்டவருடைய பிரமாணமாக இருக்கிறது. வேதம் வாசிக்கிறோம், அதை மனப்பாடம்



செய்கிறோம், அதன்படி பாவமில்லா வாழ்க்கை வாழ்கிறோம். நல்லதுதான், அதே வேளையில், மற்றவர்களையும் நாம் நோக்கிப் பார்க்க வேண்டும். பவுல் தன்னுடைய வாழ்க்கையில் பிரசங்கிக்கிறவராக மட்டுமல்ல முன் மாதிரி கிறிஸ்தவராக ஜீவித்தார். எடுத்துக்காட்டாக பாருங்கள்; அவர் பிலேமோனுக்கு எழுதிய கடிதத்தில்; "அவன் உமக்கு யாதொரு அநியாயஞ் செய்ததும், உம்மிடத்தில் கடன்பட்டதும் உண்டானால், அதை என் கணக்கிலே வைத்துக்கொள்ளும் " என்கிறார் (பிலோ. 18). ஓடிப்போன ஒநேசிமுக்காக பவுல் பிலேமோனிடம் மன்றாடுகிறார். நான் பெற்ற மகன் என்று சொல்லுகிறார். கிறிஸ்துவுக்குள்ளாக அவனைப் பெற்றெடுத்தார். அவன் தானே தவறு செய்தான். நான் ஏன் அதை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று பிலேமோனோடு வாக்குவாதம் செய்யவில்லை. அதைத் தன் கணக்கிலே வைத்துக்கொள்ளும் நான் அதை செலுத்தித் தீர்ப்பேன் என்கிறார். இவ்விதமாக மற்ற சகோதரர்கள் படக்கூடிய கடனை நாம் ஏற்கிறோமா? இதுதான் அன்பு பிரியமானவர்களே, இதுதான் கிறிஸ்துவின் பிரமாணத்தை நிறைவேற்றுவதற்கான வழி, இதை இன்றைய கிறிஸ்தவம் செய்யுமேயானால் உலகமுழுவதும் கிறிஸ்தவர்கள்தான் இருப்பார்கள். நாம் வேதம் வாசிக்கிறோம், சபைக்கு போகிறோம், கிறிஸ்தவக் குடும்பமாக வாழ்கிறோம். யாருக்காவது உதவி செய்தால் குடும்பத்தில் சண்டை வந்து விடும் என்ற பயத்தில் உதவி செய்வதைத் தவிர்த்து விடுகிறோம்.

ஒரே இருதயமும், ஒரே மனமுமுடையவர்களாக இருக்க நாம் செய்யவேண்டுவதென்ன? ஆண்டவருடைய சிந்தை முதலாவது நமக்குள் இருக்க வேண்டும். இதையே பவுல் பிலிப்பியருக்கு நினைப்பூட்டி எழுதுகிறார். " கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது " என்று. (பிலி. 2:5) அவர் தேவ சித்தம் செய்கிறவராய் எங்கும் சுற்றித் திரிந்தார். இன்றைக்கு இருக்கிற ஊழியன் எதை வாங்கலாம், எதை விற்கலாம், எப்படி பணம் சம்பாதிக்கலாம், யாரை ஏமாற்றலாம் என்ற நோக்கத்தோடு வருவானேயானால் அவன் எப்படி தேவ சித்தம் செய்யமுடியும்? அவனுக்குள்ளாக கிறிஸ்துவின் சிந்தை இருப்பது எப்படி? கிறிஸ்துவுக்கேற்ற சிந்தை நமக்குள் இருக்கும்போது அவருடைய கிருபை நம்மோடு இருக்கும். நாம் செய்வதை தேவன் வாய்க்கச் செய்வார். யாக்கோபு சொல்லுகிறார்; நீங்கள் சொஸ்தமடையும்படிக்கு உங்கள் குற்றங்களை ஒருவருக்கொருவர் அறிக்கையிட்டு, ஒருவருக்காக ஒருவர் ஜெபம் பண்ணுங்கள், நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது (யாக். 5:16).

ஒரே மனமுடையவர்களக இருப்பதற்கு ஜெபம் மிகவும் முக்கியம். முதலாவது ஜெபிக்கிற பழக்கம் இருக்க வேண்டும். ஆண்டவருடைய நாமத்தினாலே நாம் ஒருமனப்பட்டவர்களாக கூடிவந்து ஜெபிக்கக் கற்றுக் கொள்ள வேண்டும். ஆதிசபையார் ஆற்றங்கரையில் கூடி ஜெபித்தார்கள் என்றெல்லாம் வாசிக்கிறோம். நமக்கு கிடைக்கக்கூடிய

நேரங்களில் ஒருமனப்பட்டவர்களாக ஜெபத்திற்கு அதிக நேரம் செலவு செய்ய வேண்டும். ஜெபம் இல்லாத வாழ்க்கையும் கூரை இல்லாத வீடும் ஒன்றுதான். மேலும், மிக முக்கியமான ஒரு வசனத்தை நான் உங்களுக்கு நினைப்பூட்ட விரும்புகிறேன்; ஒருவரையொருவர் தாங்கி, ஒருவர் பேரில் ஒருவருக்குக் குறைபாடு உண்டானால், கிறிஸ்து உங்க ளுக்கு மனித்ததுபோல, ஒருவருக்கொருவர் மன்னியுங்கள் (கொலோ. *3:13*). இந்த சிந்தை ஒவ்வொருவருக்கும் ஏற்பட வேண்டும். அவனை நாம் மன்னிப்பதா? அவன் செய்த காரியத்தை மறக்க முடியுமா? இப்படி சொல்லிக்கொண்டே போகலாம். ஆனால், முடிவில் மன்னியாது போய்விடுவோம். கிறிஸ்து நம்மை மன்னித்தது போல நாமும் மன்னிக்கக் கற்றுக்கொள்ள வேண்டும். குறைபாடுகள் எல்லாருக் குள்ளும் இருக்கும். குறைபாடு இல்லாதவனே இல்லை. எல்லோரும் குறைவுள் ளவர்கள்தான். இதை மனதில் கொண்டு ஒருவர் பேரில் ஒரு வருக்குக் குறைபாடு உண்டானால் கிறிஸ்து உங்கள் குற்றங்களை மன்னித்து ஏற்றுக் கொண்டது போல நாமும் பிறரை மன்னித்து ஏற்றுக் கொள்ள வேண்டும். இது வேதாகமத்தின் போதனையாகவும், ஆவியானவருடைய வெளிப்படுத்தலாகவும் இருக்கிறது.

## இருதயத்திற்கு இருதயம் ஒத்திருக்குமா?

ஒரே சாயலில் ஏழுபேர் இருப்பார்கள் என்று சொல்லக் கேள்விப் பட்டிருக்கிறோம். அவரைப் பார்த்தால் என்னுடைய நண்பனைப் போல் இருக்கிறதே என்று சொல்லுகிறோம் அல்லவா, அதைப் போல இருதயத்திற்கு இருதயம் ஒத்திருக்கும் என வேதம் பதிலளிக்கிறது. தண்ணீரில் முகத்துக்கு முகம் ஒத்திருக்குமாப்போல, மனுஷரில் இருத யத்திற்கு இருதயம் ஒத்திருக்கும் (நீதி *27:19*). இப்படிப்பட இருதயமுள் ளவர்களாக தாவீதும் யோனத்தானும் இருந்தார்கள். முதல் நூற்றாண்டு சபையார் இப்படிப்பட்டவர்களாக இருந்து கர்த்தருடைய ஊழியத் தைச் செய்துவந்தார்கள். இயேசு சொல்கிறார்; உங்களில் இரண்டு பேர் தாங்கள் வேண்டிக் கொள்ளப்போகிற எந்தக் காரியத்தைக் குறித்தாகி லும் பூமியிலே ஒருமனப்பட்டிருந்தால், பரலோகத்தில் இருக்கிற என் பிதாவினால் அது அவர்களுக்கு உண்டாகும் என்று உங்களுக்குச் சொல் லுகிறேன் என்றார் (மத் *18:19*). ஒரு மனம் இருக்கும் போது இருதயத் திற்கு இருதயம் ஒத்திருக்கும். ஒரே காரியத்தை சிந்தித்துச் செய்வார்கள். ஒருமனப்பட்டவர்களாக தேவனை ஆராதிப்பார்கள். எங்கே இருதயம் ஒத்திராமற்போகுமென்றால், அந்நிய நுகத்தில் அவிசுவாசிகளுடன் விசு வாசிகள் பிணைக்கப்படும் போதும், நீதிக்கும், அநீதிக்கும் சம்பந்தம் ஏற்படும் போதும், ஒளிக்கும் இருளுக்கும் ஐக்கியம் ஏற்படும் போதும், அவிசுவாசியுடன் விசுவாசி பங்கு கொள்ளும்போதும் இருதயம் ஒத்து வராமல் ஆசீர்வாதக்குறைவு ஏற்படும். இதைத் தவிர்க்க அவர்கள் நடுவி லிருந்து புறப்பட்டுப் பிரிந்து போய் அசுத்தமானதைத் தொடாதிருந்து, விசுவாசிகளோடு ஐக்கியம் கொள்ளுங்கள். நாங்கள் உங்களுக்காக ஜெபிக்கிறோம்.





# முதல் மனிதனாகிய, ஆதாம்

# *Adam, the First Man*

*Frances Parr*

*" **தேவன்** தம்முடைய சாய லாக மனுஷனைச் சிருஷ்டித்தார். அவனைத் தேவ சாயலாகவே சிருஷ்டித்தார்; ஆணும், பெண் ணுமாக அவர்களைச் சிருஷ்டித் தார் " (ஆதி. 1:27)* தேவனாகிய *கர்த்தர் மனுஷனை பூமியின் மண்ணினாலே உருவாக்கி, ஜீவ சுவாசத்தை அவன் நாசியிலே ஊதினார், மனுஷன் ஜீவாத்துமா வானான் (ஆதி. 2:7).*

ஒருவர் பெரியவராக அல்லது முதிர்ச்சி அடைந்த நிலையில் பிறந்தால் எப்படி இருக்கும்? இந்த பூமியிலே அவ்விதமாக உருவாக்கப்பட்ட தைக் குறித்தும், தேவனோடு தனிப்பட்ட உறவு வைத்திருந்தது குறித்தும் ஆதாம் எவ்வளவாக உணர்ந்திருப்பான்? மற்ற சிருஷ் டிப்பின் அழகையும், கெம்பீரத் தையும் பார்த்து அவன் ஆச்சரியப் பட்டானா? தேவன் அவைகள் எல்லாவற்றையும் அவனுக்குக் கொடுத்த போது உணர்வுகளால் நிரப்பப்பட்டானா? முதல் மனித னாகிய ஆதாமுக்கு இவைகள் எல்லாம் எப்படி இருந்திருக்கும் என்பதை ஒருவரால் கற்பனை தான் செய்து பார்க்க முடியும்.

ஆதியாகமத்தில், தேவனு டைய படைப்பிற்குப் பிறகு "மனிதன்" பற்றி வாசிக்கிறோம். ஆதி. 2:19ல் அவன் ஆதாம் என்ற ழைக்கப்பட்டான். ஆதாம் என்கிற எபிரெய வார்த்தைக்கு "மண்" எனப் பொருளாகிறது. இந்த மண்ணிலிருந்து தான் மனிதன் உருவாக்கப்பட்டான். ஆதாம் என்கிற வார்த்தை மனித இனம் என்பதற்கு இணையான வார்த்தை யாகும். சில மொழிகளில் ஆதாம் என்பது ஒரு ஆணை குறிப்பிடு வதற்கு பயன்படுத்தப்படுகிறது. ஆதியாகமம் *5:1-5*ல், உள்ள ஜனனத்தின் வரிசையில், முதல் மனிதன் ஆதாம் என்று அழைக் கப்பட்டுள்ளது.

நீங்கள் விரும்பினால் இதை கற்பனை செய்து பாருங்கள். தேவன் பூமியையும் அதிலுள்ள யாவற்றையும் சிருஷ்டித்து, ஆதாமை தோட்டத்தில் வைத்து அவைகளுக்குப் பெயர் வைக்கும் படி எல்லா மிருகங்களையும்

அவனுக்கு முன்பாகக் கொண்டு வந்தார். இச்சந்தர்ப்பம் தேவனுக்கும், மனிதனுக்கும் மகிழ்ச்சியான வேலையாகத்தான் இருந்திருக்க வேண்டும். ஆதாம், மஞ்சள் நிறம் உடைய நீண்ட கழுத்துள்ள, காவி நிற புள்ளிகளுடன் கூடிய மிகப் பெரிய மிருகத்தைப் பார்த்து இதற்கு என்ன பெயர் வைக்கலாம் என்று நினைத்து "ஒட்டகச் சிவிங்கி" என்று பெயர் வைத்தான். மலையுச்சியின் மேல் உயரமாக பறக்கும் அந்த கம்பீரமான கறுப்பு பறவையைப் பார்த்து பயத்துடன் அதற்கு "கழுகு " என்று பெயரிட்டான்.

எந்த ஒரு மிருகமும் ஆதாமுக்கு ஏற்ற துணையாக அமையவில்லை. எந்த ஒரு மிருகமும் மனிதனுக்கு ஒப்பாக இருக்கவில்லை (ஆதி.2:20). இது, மனிதர்களின் மூதாதையர் என்று அநேகரால் நம்பப்படும் குரங்கு கூட ஆதாமுக்கு ஏற்ற துணையாக இருக்கவில்லை என்பதை சந்தேகமின்றி நிரூபிக்கிறது.

தேவன் ஆதாமுக்கு அயர்ந்த நித்திரையை வரப்பண்ணி, அவன் விலா எலும்பிலிருந்து மனுஷியை உருவாக்கிக் கொடுத்ததன் மூலம் மனிதனுக்கு ஏற்ற துணையைக் கொடுத்தார். இந்த ஆச்சரியமான படைப்பைக் கண்ட ஆதாமின் அழகான வார்த்தைகளைக் கவனியுங்கள்.

*"இவள் என் எலும்பில் எலும்பும், என் மாம்சத்தில் மாம்சமுமாய் இருக்கிறாள்; இவள் மனுஷனில் எடுக்கப்பட்டபடியினால் மனுஷி எனப்படுவாள் என்றான்"* (ஆதி. 2:23).

அடுத்த இரண்டு வசனங்களில் தொடரும் வார்த்தைகள் இன்றைய வாசகர்களை வெகுவாகக் கவர்ந்துள்ளது. ஒருவரையொருவர் நேசிக்கும் ஓர் ஆணும், ஓர் பெண்ணும் ஓர் அழகான இடத்தில் இருப்பது ஒரு கனவு சித்திரமாகும்.

ஆதாமும், ஏவாளும் எப்படிப் பிள்ளைகள் தங்கள் பெற்றோர்களை முழுமையாக சார்ந்திருக்கிறார்களோ அதைப் போல தேவனை முழுமையாக சார்ந்திருந்தார்கள். அவர்களுடைய சோதனை மற்றும் பாவத்திற்குப் பிறகு, தாங்கள் தேவனுக்குக் கீழ்ப்படியாமல் இருந்ததை உணர்ந்து கொண்டார்கள்.

ஆதாமும், ஏவாளும் தோட்டத்திலிருந்து துரத்திவிடப்பட்டதும், அவர்களுடைய தண்டனையும் அவர்களுக்கு மிகுந்த திகிலை அளித்திருக்கும். தேவன் அவர்களுக்கு மிருகத் தோலை ஆடையாகக் கொடுத்திருந்தார். ஆனால், அவர்கள் தேவனுக்குக் கீழ்ப்படியாமல் போன தன் விளைவாக களைகளோடும், முட்களோடும் போராடி ஆகாரத்தைப் புசித்தார்கள்.



இந்த நேரத்தில் தான் ஆதாம் தன் மனைவிக்கு ஏவாள் என்று பெயரிட்டாள். ஏனென்றால், அவள் ஜீவனுள்ளோருக்கெல்லாம் தாயாக இருந்தபடியால் அப்படிப் பெயரிட்டான். அவர்கள் எந்த ஒரு குழந்தையையும் பார்த்திராத போது, இரண்டு பிள்ளைகளுக்குப் பெற்றோர்களான போது அவர்களுக்கு எப்படி இருந்திருக்கும்?

வேதாகமம் இதைப் பதிவு செய்யாவிட்டாலும் கூட தேவன் ஆதாமோடும், ஏவாளோடும் தொடர்பு வைத்திருந்தார். காயீன் தன் சகோதரனாகிய ஆபேலைக் கொன்ற போது நாம் இதை கற்றுக் கொள்கிறோம். அவர்கள் தேவனுக்குப் பலிகளைச் செலுத்தினார்கள். தேவன் காயீனிடம் ஆபேல் பற்றிப் பேசின போது அவன் ஆச்சரியப்படவில்லை, உண்மையில், அவன் பகையுணர்வுடன் காணப்பட்டான். ஆதி. 4:13ல் அவன் *"எனக்கு இட்ட தண்டனையை சகிக்க முடியாது"* என்று சொன்னான். தொடர்ந்து அவன் தன் பயத்தை வெளிப்படுத்தும்போது தான் தேவனுடைய சமூகத்துக்கு விலகி மறைந்து, பூமியில் நிலையற்று அலைகிறவனாய் இருப்பது குறித்தும், தன்னுடைய பாதுகாப்பற்ற நிலையை குறித்தும் பயந்தான்.

தேவன் காயீனோடும், ஆதாம் மற்றும் ஏவாளோடும் இடைப்பட்ட போது தம்முடைய இரக்கத்தையும், மன்னிப்பையும் நிரூபித்தார். முதல் மீறுதல் நடப்பதற்கு முன்பாகவே தேவன் ஏற்கனவே பாவ பலியாக தம்முடைய ஒரே பேறான குமாரனை மனிதனை மீட்பதற்காக இரட்சிப்பின் திட்டத்தைத் தீட்டியிருந்தார்.

ஆதியாகமம் 4:23 மற்றும் 5:3ல், ஆதாம் தன் மனைவியை அறிந்தான், அவள் சேத் மற்றும் வேறு குமாரர்களையும், குமாரத்திகளையும் பெற்றெடுத்தாள். *இந்த பிள்ளைகள் ஆதாமின் சாயலாகவும், அவனுடைய ரூபத்தின் படியேயும் இருந்தன.* தேவனால் சிருஷ்டிக்கப்பட்ட முதல் மனிதன் ஆதாம் 930 வருடங்கள் வாழ்ந்து மரித்தான்.

அப்போஸ்தலனாகிய பவுல் 1கொரிந்தியர் 15:22,23 வசனங்களில் ஆதாமைக் கிறிஸ்துவோடு ஒப்பிடுகிறார். ஆதாம் மூலமாக மரணம் முதலில் வந்தது, கிறிஸ்து மூலமாக முதலாவது ஜீவன் வந்தது. ஆதாமின் பாவத்தின் காரணமாக, நாமெல்லோரும் மரிப்போம், சிலுவையின் மீது இயேசுவின் மரணத்தினால், விசுவாசித்துக் கீழ்ப்படிகிற எல்லோரும் நித்திய நித்தியமாகப் பிழைப்பார்கள்.

# ஊசாவிடமிருந்து மூன்று பாடங்கள்

(வாசியுங்கள் 2சாமுவேல் 6:1-11; 1 நாளாகமம் 15:1-16)

## Three Lessons from Uzzah

*Ancil Jenkins*

**வி**நோதமான பெயரைக் கொண்டுள்ள இந்த மனிதன் நமக்குச் சிறப்பான பாடங்களைக் கற்றுத் தருகிறான். இந்த ஊசாவின் மரணம் தான் இவனுக்கு புகழைத் தேடி தந்தது! தேவாலயத்தின் மிகப் பரிசுத்தமான தேவனுடைய பெட்டி எருசலேமுக்கு கொண்டு வரப்பட்டது, பெட்டி அசைந்து அது கீழே சாய்ந்தபடியால், ஊசா தன் கையை நீட்டி அதைப் பிடித்தான். தேவன் உடனே அவனை அடித்தார். அவன் பெட்டியண்டையிலே செத்தான்.

*ஊசா பரிசுத்தமானவைகள், சாதாரணமானவைகளாக மாறுவதின் அபாயத்தை நமக்குக் காட்டுகிறார்.* பெலிஸ்தியர் தேவனுடைய பெட்டியை இஸ்ரவேலுக்கு அனுப்பிய பிறகு நூற்று ஐம்பது வருடங்களுக்கு மேலாக அபினதாபின் சந்ததியாரிடத்தில் இருந்தது. அபினதாபின் குமாரனாகிய ஊசா வீட்டில் இந்த உடன்படிக்கைப்பெட்டியோடு சேர்ந்து வளர்ந்தான். இந்த பரிசுத்தப்பெட்டி அவனுடைய வீட்டிலிருந்த மேஜை, நாற்காலி போன்றுதான் அவனுக்கு இருந்திருக்கும். அவன் எவ்வித ஜாக்கிரதையுமின்றி, பயமின்றி அதைத் தொடத்தன் கையை நீட்டியதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை.

இவ்விதமாக பரிசுத்தமானவைகளை நாம் பயமின்றி நடத்துவதும், தொடுவதும் ஆபத்தில் கொண்டுபோய் விடும். தேவனுடைய சமூகத்தில் நாம் அடிக்கடி வருவதால் பயம் மற்றும் ஆச்சரிய உணர்வை நாம் இழந்து போவதற்கு வாய்ப்பிருக்கிறது இல்லையா? பரிசுத்த வார்த்தைகளும், செயல்களும் கேலிப் பொருள்களாக மாறிவருகின்றன. பரிசுத்த பாடல்களை அசிங்கமான பாடல்களாக மாற்றுகிறோம். நாம் தொடர்ந்து எவைகளோடு வாழ்கிறோமோ அவைகளை மரியாதை கலந்த பயத்துடன் பாவிப்பதற்கு உண்மையான முயற்சி அவசியப்படுகிறது. இது " பயங்கரம் " என்கிற வார்த்தையை பயன்படுத்துவதினால் விளக்கப்படுகிறது. ஒருவர் ஞானமாக " தேவன் மாத்திரமே பயங்கரமானவர் " என்று நினைவூட்டினார் (சங். 68:35).

*ஊசா பாரம்பரியத்தின் அபாயத்தை நிரூபிக்கிறார்.* உடன்படிக்கைப் பெட்டி நூற்று ஐம்பது வருடங்களாக ஒரே இடத்தில் இருந்தது. தாவீது அதை எருசலேமுக்கு நகர்த்திச் செல்லத் தீர்மானித்தபோது கடந்த முறை அது எடுத்துச் செல்லப்பட்ட விதத்தை யாரோ நினைவுபடுத்தியிருக்கலாம். பெலிஸ்தியர்கள் உடன்படிக்கை பெட்டியை ஒரு மாட்டு வண்டியில் வைத்து அதை இஸ்ரவேல் புத்திரரிடத்தில் அனுப்பினார்கள் (1 சாமு. 7:8). தாவீதின் நாட்களில் வாழ்ந்த ஜனங்கள் பாரம்பரியத்தை மீற வேண்டாம் என உணர்ந்தது போல தெரிகிறது. அவர்கள் வேத வாக்கியங்களை ஆராய்ந்து பார்த்திருந்தார்களானால் அந்த உடன்படிக்கைப் பெட்டி எடுத்துச் செல்லப்பட வேண்டுமென தேவன் சொன்னதைக் கண்டிருப்பார்கள் (யாத். 25:12-15; எண். 4:15). உடன்படிக்கைப் பெட்டி மாட்டு வண்டியில் ஏற்றப்படாதிருந்தால், ஊசா தேவனால் கொல்லப்பட்டிருக்கமாட்டான்.

பாரம்பரியத்திற்கென்று ஓர் இடம் இருக்கிறது. ஆயினும், பாரம்பரியம் தேவனுடைய வார்த்தையின் வெளிச்சத்தில் சோதித்துப் பார்க்கப்பட வேண்டும். தேவன் பேசின பிறகு பாரம்பரியத்திற்கு வேலையே இல்லை.

*ஊசா கீழ்ப்படியாமையின் ஆபத்தையும் காட்டுகிறான்.* ஊசாவை தேவன் கொன்றது ஊசாவிடத்திலும், ஜனங்களிடத்திலும் தேவன் பிரியமில்லாமல் இருந்ததையேக் காட்டுகிறது. இந்தக் கீழ்ப்படியாமையின் அடிப்படை மிகவும் சுவாரஸ்யமானது. தாவீது இவ்விதமாகச் சொன்னார். " *முதலில் நீங்கள் அதைச் சுமக்காதபடியினாலும், நாம் நம்முடைய தேவனாகிய கர்த்தரை நியாயமானபடியே தேடாதே போனபடியினாலும், அவர் நமக்குள்ளே அடி விழப்பண்ணினார்* " (1 நாளாகமம் 15:13). தேவன் அந்த உடன்படிக்கைப் பெட்டியை கொண்டு செல்ல நேரடியாக மாட்டு வண்டியைத் தடை செய்யவில்லை. ஆயினும், தேவன் அது எப்படிக் கொண்டு செல்லப்பட வேண்டுமென்று சொல்லியிருந்தார். *அந்த கட்டளையிலிருந்து வழிவிலகிச் செல்வதே அவருக்குக் கீழ்ப்படியாமல் போவதாகும்.*



# அசுத்த ஆவிகளிடமிருந்து விடுபட்ட நன்றியுள்ள மரியாள்

## Mary, the Grateful Demoniac

***Sylvia L. Camp***

இயேசு தம் ஊழியத்தின் பாதையில் மக்கள் மத்தியில் அற்புதங்களை செய்து கொண்டு கிராமங்களிலும், பட்டணங்களிலும் சுற்றித் திரிந்தார். அதில் மகதலேனா என்னும் ஊரில் வாழந்த மரியாள் என்னும் பேர் கொண்ட ஒரு பெண்ணிடமிருந்து ஏழு அசுத்த ஆவிகளைத் துரத்தியதும் அடங்கும். நிச்சயமாக அவள், " நன்றி ஆண்டவரே " என்று தன்னுடைய மனமார்ந்த நன்றியை வெளிப்படுத்தினாள், ஆனால், அவள் எப்படி தன் நன்றியை வெளிப்படுத்தினாள் என்பது ஒரு சிறப்பான பாடமாகும்.

யாரோ ஒருவர் " நன்றி என்பது இருதயத்தின் நினைவு " என்று சொன்னார். மரியாள் தன்னுடைய நன்றியை ஆண்டவருக்குக் காட்ட விரும்பினாள். இயேசுவின் ஊழியம் முழுவதும் அவரோடிருந்து அவருக்கு உதவி செய்வதை விட உறுதியான வழி இல்லையென்பதை அவள் உணர்ந்தாள். அது தனக்கு பிசாசுகள் பிடிக்கப்பட்டு, பிறகு சுகம் கிடைத்ததை தாம் ஒரு போதும் மறக்கவில்லை என்பதை இயேசுவுக்கு காட்ட விரும்பினாள்.

மகதலேனா மரியாளும், அசுத்த ஆவி நீங்கிய ஸ்திரீகளும், இயேசுவும், அவரால் தெரிந்து கொள்ளப்பட்ட 12 சீஷர்களும் எங்கெல்லாம் சென்றார்களோ அங்கெல்லாம் சென்றார்கள். இந்த ஸ்திரீகள் தங்கள் தனிப்பட்ட வருமானங்களை சீஷர்களின் தேவைகள் சந்திக்கப்படுவதற்காக கொடுத்திருக்கிறார்கள்.



இந்த ஸ்தீரி பற்றி குறைவாகத்தான் அறியப்படுகிறது. அவளுடைய பெயரான "பிரியம்" என்பது யூத ஸ்திரீகள் மத்தியில் வழக்கமான ஒரு பெயராக இருந்தது. மரியாள் என்கிற பெயர் புதிய ஏற்பாட்டில் 51 முறை இடம் பெற்றிருக்கிறது, அவற்றுள் பதினான்கு முறை மகதலேனா மரியாளைக் குறிக்கிறது. இந்த மரியாளை மற்ற மரியாள்களிடமிருந்து வேறுபடுத்த மகதலேனா மரியாள் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இது அவள் மகதலேஊரைச் சேர்ந்தவள் என்பதை அடையாளப்படுத்துகிறது.

இயேசுவுக்கு ஊழியம் செய்த ஸ்திரீகளில் மகதலேனா மரியாள் துடிப்புள்ளவளாகவும், வைராக்கியம் உடையவளாகவும் இருந்திருக்க வேண்டுமென்று தெரிகிறது. இயேசு அவளுக்குச் செய்த நன்மைக்கு தன்னுடைய நன்றியை அன்புள்ள, உதாரத்துவமுள்ள முறையில் காட்டினாள். சோர்வில்லாத பக்தியுடனும், ஆர்வமுள்ள விருப்பத்துடனும், மங்காத தைரியத்துடனும் அவள் ஆண்டவரைப் பின்பற்றி அவருக்கு சேவை செய்தாள்.

மகதலேனா மரியாள் தனக்குச் செய்ததற்காக அவரை நேசித்து அவரை விசுவாசித்தாள். அவள் இயேசுவோடு மரண பரியந்தம் தொடர்ந்து நிலைத்திருந்து தன் அன்பின் உறுதியை நிரூபித்தாள். அவள் தன் அன்பின் ஆழத்தை நிரூபித்தாள். ஏனென்றால், கல்லறை அவளை அச்சுறுத்த முடியவில்லை. சிலுவையில் கடைசியாக, இயேசு உயிர்த்தெழுந்த பிறகு கல்லறையில் அவரை சந்தித்த முதல் பெண்மணி இவள்தான்.

இந்த மகதலேனா மரியாள் ஓர் எளிய வாழ்க்கையை நடத்தி வந்தப் பெண்ணாக இருந்தாலும் கூட இன்னும் எருசலேம் பட்டணத்தில் ஓர் அழகான கட்டிடம் இவளுடைய பெயரைத் தாங்கி நிற்கிறது. இந்த ஆலயம் பட்டணத்தின் பல்வேறுபட்ட இடங்களிலிருந்தும் பார்த்தால் தெரியக் கூடிய அளவில் அமைந்துள்ளது, இந்த கட்டிடம் வெள்ளை நிறத்திலும், வெங்காய வடிவத்திலான கோபுரங்களைக் கொண்டுள்ளது. இந்த கோபுரங்கள் தங்கத்தால் மூடப்பட்டிருக்கிறது. இது சூரிய ஒளியில் கண்ணாடியைப் போல் மின்னுகிறது. ரஷ்யாவைச் சேர்ந்த Tsar Alexander III என்பவர் மகதலேனா மரியாளுடைய ஆலயத்தை கி.பி. 1885க்கும் 1888க்கு இடைப்பட்ட காலத்தில் தன்னுடைய தாயின் ஞாபகார்த்தமாக கட்டினார்.

மரியாள் தன் வாழ்க்கையில் எஞ்சி உள்ள நாட்களை தனிமையில் கழிக்க மகதலேவுக்கே சென்று விட்டாளா அல்லது பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்திற்காகக் காத்திருந்த அப்போஸ்தலர்களோடு கூட இருந்த பெண்களோடு தன்னை இணைத்துக் கொண்டாளா? ஆதி திருச்சபையின் செயல்பாடுகளில் பெண்களுக்கு தலைவியாக இருந் திருக்க வாய்ப்பு இருக்கிறதா? அசுத்த ஆவிகளிடமிருந்து விடுபட்ட மரியாள் நன்றியறிதலுக்கான மாதிரியில் எல்லோரையும் மிஞ்சி விட்டாள். இயேசு அவளுக்குச் செய்ததை அவள் ஒருபோதும் மறக்கவில்லை. இயேசுவுக்கு ஊழியம் செய்ததன் மூலம் தன்னுடைய நன்றியை வெளிப்படுத்தினாள். ஆனால், அவள் பெண்களுக்கெல்லாம் சிறந்த முன் மாதிரியாய் விளங்கத் தக்கதாக அநேக நற்குணங்களையும் பெற்றிருந்தாள். ❖

## பெற்றுக் கொள்

விதையை விதைத்து – அதன்
அறுவடையைப் பெற்றுக்கொள்!
முயற்சி எடுத்து அதனால் வரும்
வெற்றியைப் பெற்றுக்கொள்!
தீமையை வெறுத்து அதனால் வரும்
நன்மையைப் பெற்றுக்கொள்!
சாத்தானை சத்தியத்தினால் வீழ்த்தி அதனால்
ஜெயத்தை பெற்றுக்கொள்!
பாவத்தை அறிக்கையிட்டு – இன்பம் தரும்
இரட்சிப்பைப் பெற்றுக்கொள்!
வசனத்தில் நிலைத்திருந்து – அதன் பலனாக
நித்திய ஜீவனை பெற்றுக்கொள்!





# பிரிந்து சென்ற தேமா

## Demas, the Forsaker

*Maxie B. Boren*

அப்போஸ்தலனாகிய பவுல் ராயனிடம் அபயமிட்ட பிறகு (அப்.25:11,12) ஓர் ஆபத்தான பிரயாணத்தில் ரோமாபுரிக்கு அழைத்துச் செல்லப்பட்டார். (அப். 27:1; 28:16). அங்கே பவுல் தனக்காக வாடகைக்கு வாங்கியிருந்த வீட்டிலே இரண்டு வருஷம் வீட்டுக்காவலில் இருப்பது போல தங்கியிருந்தார் (அப். 28:30,31). இது நடந்தது கி.பி. 61,62 ஆக இருக்கலாம் என்று அநேக வேத அறிஞர்களால் நம்பப்படுகிறது. அந்த வீட்டுக் காவலில் இருந்து கொண்டு பவுல் நான்கு நிருபங்களை எழுதினார். அவைகள் எபேசியர், பிலிப்பியர், கொலோசெயர் மற்றும் பிலேமோன் என்று அறியப்படுகிறது.

இந்த நிருபங்கள் இரண்டில் பவுல், தேமா என்னும் பெயர் கொண்ட கிறிஸ்தவர் பற்றி குறிப்பிட்டிருக்கிறார். அதில் ஒரு முறை கொலோசெயர் 4:10,14 வசனங்களில் அனுகூலமான விதத்தில் குறிப்பிட்டிருக்கிறார். மறுபடியும் பிலேமோனுக்கு எழுதின நிருபத்தில் தேமாவை மாற்கு, அரிஸ்தர்க்கு, லூக்கா ஆகியோரோடு பவுலின் உடன் வேலையாளாக குறிப்பிட்டிருக்கிறார் (வ. 24).

ஆனால், ஐந்து அல்லது ஆறு வருடங்களுக்குப் பிறகு (சுமார் கி.பி 67 அல்லது 68ல்) பவுல் இரண்டாவது முறையாக ரோமாபுரிக்கு அழைத்துச் செல்லப்பட்டபோது (அங்கே தான் அவர் இரத்த சாட்சியாக மரித்தார்) தேமாவைப் பொறுத்த வரை காரியங்கள் மாறிவிட்டன. அப்போஸ்தலனாகிய பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதின போது, அதாவது தான் மரிப்பதற்கு முன்பாக, முடிந்த வரை சீக்கிரமாக தீமோத்தேயுவை ரோமாபுரிக்கு வருமாறு வலியுறுத்தினார். நீ சீக்கிரமாய் என்னிடத்தில் வரும்படி ஜாக்கிரதைப்படு. ஏனென்றால், தேமா இப்பிரபஞ்சத்தின் மேல் ஆசை வைத்து, என்னை விட்டுப் பிரிந்து, தெசலோனிக்கே பட்டணத்துக்குப் போய் விட்டான் என்று (2 தீமோத். 4:9,10).

பவுல் தேமாவைப் பற்றி இப்பிரபஞ்சத்தின் மேல் ஆசை

வைத்து என்று சொன்ன போது எந்த அர்த்தத்தோடு சொன்னார்? பலர் நினைக்கின்றபடி, வேதாகமம் எச்சரிக்கும் காரியங்களாகிய மது அருந்துதல், களியாட்டம், வெறிகள் போன்ற காரியங்களில் மயங்கி ஆசை வைத்தான் என்று பவுல் சொல்லுகிறாரா? இல்லை. அப்படி இல்லை என்று தான் நான் நம்புகிறேன்.

மாறாக, தேமாவுக்கு இந்த உலகத்திலே தொடர்ந்து வாழ வேண்டுமென்கிற ஆசை, பவுலோடு சேர்ந்து கிறிஸ்துவுக்காகத் தன்னுடைய ஜீவனை விட்டு விடும் ஆசையை விட அதிகமாக இருந்தது. தான் பவுலோடு இருந்தால் ரோமர்கள் தன்னையும் கொன்று விடுவார்கள் என்பதை தேமா உணர்ந்து கொண்டார் என்பது நிச்சயமாகத் தெரிகிறது. எனவே தான், அவர் பவுலை விட்டு தெசலோனிக்கேயாவிற்கு பிரிந்து சென்று விட்டார். நான் கர்த்தராகிய இயேசுவின் நாமத்திற்காக கட்டுப்படுவதற்கு மாத்திரமல்ல, மரிப்பதற்கும் ஆயத்தமாயிருக்கிறேன் (அப். 21:13) என்று கூறும் அளவிற்கு பவுலுக்கு இருந்த அர்ப்பணிப்பு, தேமாவிற்கு இல்லை. எனவே தான், பவுல் அவன் இப்பிரபஞ்சத்தின் மேல் ஆசை வைத்து பிரிந்து போனான் என்று கூறியிருக்கிறார்.

யோவான் மூலமாக இயேசு சிமிர்னா சபைக்கு "நீ மரணபரியந்தம் உண்மையாயிரு; அப்பொழுது நான் உனக்கு ஜீவக் கிரீடத்தைத் தருவேன்" என்று சொன்ன வார்த்தைகளை தேமா உள்வாங்கிக் கொள்ளவில்லை (வெளி. 2:10). நன்றாக கவனியுங்கள்; இங்கே இயேசு கிறிஸ்து "மரண பரியந்தம்" என்று கூறுகிறாரே தவிர, மரணம் நேரிடுகிற தருணம் வரைக்கும் என்று கூறவில்லை. மரண பரியந்தம் என்று சொல்லும் போது அது மரணம் நேரிடுகிற தருணத்தையும் உள்ளடக்குவதாக இருக்கும். இங்கே கருத்து என்னவென்றால், கர்த்தருக்கு உண்மையாயிருக்கும் ஒரு கிறிஸ்தவன் தன்னுடைய ஜீவனையும் கொடுப்பதற்கு தயாராக இருக்க வேண்டும். அப்படிப்பட்ட அர்ப்பணிப்பு தேமாவிடம் இல்லாமல் இருந்தது.

தேமா முடிவு பரியந்தம் நிலைத்திருக்கத் தவறிவிட்டான் (மத். 24:13) ஜெயங் கொள்ளுகிறவனுக்கான வாக்குத்தத்தமாகிய நித்திய பரலோக வாழ்வை விட இந்த பூலோக வாழ்வு தேமாவுக்கு முக்கியமாக இருந்தது. (வெளி. 2:7,11,17,26; 3:5; 12:21). நண்பர்களே, நாம் மேலே படித்த காரணங்களினிமித்தம், என்ன நடந்தாலும் நாம் நம்பிக்கையுள்ளவர்களாயிருக்க தீர்மானித்துக் கொள்வோம். நாம் ஒரு போதும் நம் கர்த்தரை விட்டு விலகிப் போக வேண்டாம்.





# கிறிஸ்துவின் இரண்டாம் வருகை

## *The Second Coming of Christ*

( I Thessalonians 4:13ff)

*W.A. Bradfield*

**முன்னுரை :**

கிறிஸ்து மறுபடியும் வருகிறார் (மத்தேயு 16:27; யோவான் 14:1 3; அப்போஸ்தலர் 1:11)

விவாதம் :

**அவர் எப்படி வருகிறார்?**

A. அவர் தம்முடைய சத்தத்தை, எல்லோரும் கேட்கும் விதத்தில் வருகிறார் (யோவான் 5:28)
B. அவர் எல்லோரும் காணத்தக்கதாக வருகிறார் (வெளி 1:7)
C. அவர் எவ்வித எச்சரிப்புமின்றி வருகிறார் (1 தெச. 5:2)
D. அவர் அக்கினி ஜுவாலையுடன் வருகிறார் (11 தெச. 1:8)

**அவர் எப்போது வருகிறார்?**

A. அவர் எதிர்பாராதவிதமாக திருடனைப் போல் வருகிறார் (11பேதுரு 3:10; மத்தேயு 24:42-44)
B. அவர் வருகை எந்த ஒரு மனிதனுக்கோ, தேவதூதருக்கோ, ஏன் அவருக்கே கூட தெரியாது (மாற்கு 13:32)
C. கிறிஸ்துவின் வருகை பற்றி தேவன் மாத்திரமே அறிவார்.

**அவர் ஏன் வருகிறார்?**

A. போதிப்பதற்கோ, அழைப்பதற்கோ அல்லது தம்மை பலியாக ஒப்புக் கொடுப்பதற்கோ அவர் மீண்டும் வரப் போகிறதில்லை.
B. அவர் ராஜ்யத்தை ஏற்படுத்துவதற்கு வரப்போகிறதில்லை (மாற்கு 9:1; கொலோ 1:13)
C. இந்த உலகத்தை அழித்து ராஜ்யத்தை ஒப்புக் கொடுக்கும்படி வருகிறார் (11 பேதுரு 3:10; 1 கொரி. 15:24)
D. மரித்தோரை உயிரோடு எழுப்பும்படி வருகிறார் (யோவான் 5:28)
E. இந்த உலகை நியாயந்தீர்க்கும்படி வருகிறார் (அப். 17:31; II கொரி. 5:10)

**முடிவுரை :**

A. நம்முடைய கிரியைகளின்படி நாம் நியாயந்தீர்க்கப்படுவோம் (வெளி. 20:12,15; மத்தேயு 16:27)
B. நாம் ஆயத்தமாவதற்கு இது தான் ஏற்ற வேளை.

பிரசங்கக் குறிப்புகள்

# ஒருவர் எப்போது இரட்சிக்கப்படுகிறார்?

[மாற்கு 16:16; ரோமர் 8:1; யோவான் 3:16]

# At What Point Is One Saved?

(Mark 16:16; Romans 8:1; John 3:16)

*J.C. Choate*

**முன்னுரை :**

1. இரட்சிப்பு பற்றிப் பேசும் அநேக வசனங்கள் உள்ளன.
2. ஒருவர் எப்போது தான் இரட்சிக்கப்படுகிறார்?
3. ஒருவர் இரட்சிக்கப்படுவதை நாம் அறிந்து கொள்ள முடியுமா?
4. அதைத் துல்லியமாக அறிந்து கொள்ள முடியுமா என்று நாம் பார்ப்போம்.

விவாதம் :

**I. ஒரு முனையில் வேத வாக்கியங்கள் இரட்சிப்பிற்கு விசுவாசத்தின் முக்கியத்துவம் பற்றி போதிக்கிறது.**

A. விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாத காரியம் (எபிரெயர் 11:6)

B. கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு நாம் இரட்சிக்கப் படுகிறோம் (எபேசியர் 2:7,8)

C. நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்படுகிறோம் (ரோமர் 5:1)

D. தேவன் தம்முடைய ஒரே பேரான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை அடையும் படிக்கு, அவரைத் தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார் (யோவான் 3:16).

E. நீங்கள் விசுவாசிக்கவில்லையென்றால் உங்கள் பாவங்களில் சாவீர்கள் (யோவான் 8:24)

**II. மறுமுனையில் இரட்சிக்கப்பட்ட பிறகு ஒருவர் விசுவாசமாயிருக்க வேண்டுமென்றும் போதிக்கிறது.**

A. விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான் (ரோமர் 1:16,17)

B. நாம் விசுவாசித்து நடக்க வேண்டும் (II கொரிந்தியர் 5:6)

C. நாம் மரண பரியந்தம் உண்மையுள்ளவர்களாக இருக்க வேண்டும் (வெளி. 2:10)

**III. அடுத்ததாக மனந்திரும்ப வேண்டுமென்று வேதாகமம் போதிக்கிறது.**

A. நாம் மனந்திரும்ப வேண்டும். இல்லையென்றால் அப்படியே கெட்டுப் போவோம் (லூக்கா 13:3)

B. எல்லோரும் மனந்திரும்ப வேண்டுமென்று தேவன் கட்டளை யிடுகிறார் (அப். 17:30)

C. இரட்சிப்புக்கு முன்பாக மனந்திரும்புதல் வருகிறது (அப். 2:38)

**IV. கிறிஸ்தவர்களாக, நாம் தேவனை ஆராதிக்க வேண்டும் அவருக்கு சேவைச் செய்ய வேண்டும்.**

A. நாம் அப்போஸ்தலருடைய உபதேசத்தில் நிலைத்திருக்க வேண்டும் (அப். 2:45)

B. நாம் வாரத்தின் முதல் நாளிலே தேவனை ஆராதிக்க வேண்டும் அப். 20:7; 1 கொரி. 11)

C. கர்த்தருடைய கிரியையிலே நாம் பெருகுகிறவர்களாக இருக்க வேண்டும் (1 கொரி. 15:58)

**V. நாம் கிறிஸ்துவை தேவனுடைய குமாரனென்று அறிக்கையிட வேண்டும்**

A. நாம் வாயினால் அறிக்கை பண்ண வேண்டும் (ரோமர் 10:10)

B. நாம் அவரை அறிக்கை பண்ணினால், அவரும் நம்மை அறிக்கை பண்ணுவார் (மத். 10:30,33)

C. எத்தியோப்பிய மந்திரியின் உதாரணத்தைக் கவனியுங்கள் (அப். 8:26-39)

**VI. இரட்சிக்கப்பட்டவர்கள் கிறிஸ்துவிலும், சபையிலும் இருக்கிறார்கள்**

A. இரட்சிக்கப்பட்டவர்களை கர்த்தர் சபையில் சேர்க்கிறார் (அப். 2:47)

B. இரட்சிக்கப்பட்டவர்கள் கிறிஸ்துவுக்குள் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறார்கள் (கலா. 3:26,27)

C. இரட்சிக்கப்பட்டவர்கள் கிறிஸ்துவுக்குள் புது சிருஷ்டிகளா யிருக்கிறார்கள் (II கொரி. 5:17)

**VII. அப்படியென்றால் ஒருவர் எப்போது இரட்சிக்கப்படுகிறார்?**

A. ஞானஸ்நானத்தின் போது தான் ஒருவர் இரட்சிக்கப்படுகிறார் (*1 பேதுரு 3:21*)

B. ஞானஸ்நானத்தில் கர்த்தருக்குக் கீழ்ப்படியும் அளவுக்கு ஒருவர் விசுவாசிக்கும் போது அவர் இரட்சிக்கப்படுகிறார் (மாற்கு *16:16*)

C. ஒருவர் இரட்சிக்கப்பட விரும்பி கர்த்தருடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படிய விரும்பும் போது இரட்சிக்கப்படுகிறார் (அப். *2:38*)

D. வேதவசனங்கள் அடிப்படையிலான ஞானஸ்தானத்தில்

1. ஒருவர் பாவங்கள் போகக் கழுவப்படுகிறார் (அப். 22:16)
2. ஒருவர் கிறிஸ்துவுக்குள் வருகிறார் (ரோமர் 6:3,4; கலா. 3:26,27)
3. ஒருவர் சபைக்குள் வருகிறார் (கொரி. 12:13; அப். 2:47)
4. ஒருவர் புது சிருஷ்டியாகிறார் (யோவான் 3:3-5; II கொரி. 5:17)

**முடிவுரை :**


1. நீங்கள் இரட்சிக்கப்பட்டிருக்கிறீர்களா?
2. நீங்கள் இரட்சிக்கப்பட்டிருக்கிறதை எப்படி அறிவீர்கள்?
3. கிறிஸ்து தமக்குக் கீழ்ப்படிகிற யாவரும் நித்திய இரட்சிப்பை அடைவதற்கு காரணரானார் (எபிரெயர் 5:8,9)

**கோபமானது சரியான முறையில்**
**பயன்படுத்தப்படும் போது அது பயனுள்ளதாயிருக்கும்;**
**உண்மையில், அது ஒரு நல்ல விஷயம்.**
**அது ஒரு போதும் நம் கைமீறிப் போகக்கூடாது.**

**- John H.Erwin**







# தேவனைப் பிரியப்படுத்தும் சபை

(பிலிப்பியர் 1:1-11)

# A Church That Pleases God

*(Philippians 1:1-11)*

***Earl Edwards***

**முன்னுரை :**

பரிசுத்த ஆவியானவரால் வழிநடத்தப்பட்ட பவுல் பிலிப்பி பட்டணத்து சபையினிடத்தில் பிரியமாக இருந்தார் என்பது வெளிப்படையானது. இதன் உட்பொருள் தேவனும் அந்த சபையாரிடத்தில் பிரியமாக இருந்தார் என்பதே. ஆகவே, நாம் தேவனைப் பிரியப்படுத்த வேண்டுமென்றால் அந்த சபையைப் பின்பற்ற வேண்டும்.

**I. அதன் ஆளுகை அமைப்பு (வசனங்கள் 1,2)**

A. பிலிப்பி பட்டணத்து சபை

1. பரிசுத்தவான்கள்
2. மூப்பர்கள்
3. உதவிக்காரர்கள்

B. இன்றைய சபை ஆளுமை அமைப்புகள் - *4:9*

**II தங்கள் சபையைப் பற்றி நினைக்கும் பொழுது, எல்லாவிதத்திலும் சந்தோஷத்தை தந்திருக்கின்றது (வசனங்கள் 3,4,5,9)**

A. பவுல் எப்போதுமே அவர்களுக்காக தேவனை ஸ்தோத்தரித்தார் (வசனம் 6)

B. அவர்களுடைய நல்ல குணாதிசயங்கள்

1. " அன்பு " - (வசனம் 8)
2. சுவிசேஷத்தில் " உடன்பாடு " - (வசனம் 3) (4:16-18)
3. அவர்களையும், நம்மையும் உற்றுநோக்கும் போது நம்மில் காணப்படாத காரியங்களும்

**III சபைக்காக உண்மையான அன்பு கொண்ட முன்னோடிகளைப் பெற்றிருந்தது.**

A. அந்த தலைவர்கள், குறிப்பாக பவுல் :

1. தன்னுடைய இருதயத்தில் அவர்களைத் தரித்துக் கொண்டிருந்தார் (வசனம் 7)
2. உருக்கமான அன்பிலே அவர்கள் மீது வஞ்சையாயிருந்தார். (வசனம் 8)

B. இன்றைய சபை முன்னோடிகளாக நம்முடைய உணர்வுகள் எப்படியுள்ளது?

**IV. சபைக்காக ஜெபிக்கிற முன்னோடிகளைப் பெற்றிருந்தது (வசனம் 6,9–11).**

**A. பவுல் அவர்களுக்காக ஜெபித்தார் :**

1. அதிக அன்பிற்காக - வசனம் 9
2. அதிக அறிவிற்காக - வசனம் 9
3. அவர்கள் உணர்வடைவதற்காக - வசனம் 9
4. அவர்கள் உத்தமமானவைகளை மட்டும் ஏற்றுக்கொள்ளும்படியாக - (வசனம்) 11
5. அவர்கள் கிறிஸ்துவின் நாளுக்கென்று துப்புரவானவர்களாக இருக்கும்படியாக - (வசனம்) 11
6. அவர்கள் நீதியின் கனிகளால் நிறையும்படியாக - (வசனம் 10)

B. இன்று முன்னோடிகளாக நாம் இவ்விதமாக ஜெபிக்கிறோமா?


<u>முடிவுரை :</u>

A. பாராட்டுதலுக்குப் பாத்திரமான அநேக காரியங்கள் அந்த சபையில் இருந்திருக்கின்றன.

B. நாமும் தேவனுக்குப் பிரியமாக இருக்க வேண்டுமென்றால் இந்த சபையை நாம் பின்பற்ற வேண்டும்.





## GOSPEL THROUGH RADIO



Speaker — P.R. Swamy
Days & Time — Friday - Sunday 5.30 PM
Srilanka all Asia Service — SW 25 & 41M


## GOSPEL THROUGH TELEVISION




Speaker — P.C. Philemon Rajah
Days & Time : Pothigai TV 5:30 AM Saturday
Tamilan TV 10:00 PM Sunday

THE VOICE OF TRUTH INTERNATIONAL Quartely English Book Available.
Contact : Cell : 94878-68686, 92442-04420

Speaker — B. Arjunan
Day & Time — Saturday 5.30 PM
Srilanka all Asia Service — SW 25 & 41 M





Days & Time — Tamilan TV 6:00 AM Monday
Tamilan TV 6:15 PM Saturday



EDITED & PUBLISHED BY
S. RAJANAYAGAM



P.o. Box-27, KANGAYAM - 638 701. T.N. India
Cell 098427 - 30382 E-mail rajarichal@yahoo.co.in

# திருமறை தியானம்

## தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பொதிகை | TV | ஞாயிறு | காலை | 5:30 | மணி |
| தமிழன் | TV | திங்கள் | காலை | 7.00 | மணி |
| தமிழன் | TV | சனி | காலை | 7:15 | மணி |


சர்வதேச தரத்தில், தலை சிறந்த
பிரசங்கிகளால் எழுதப்பட்ட

## சத்தியத்தின் குரல்

(காலாண்டு இதழ்)


நூல் வேண்டுவோர்
எங்களைத் தொடர்பு கொள்ளவும்.


- ஆசிரியர்










( தபால் செலவிற்கு பணம் அனுப்பி இந்நூல்களைப் பெற்றுக்கொள்ளலாம் )

# அஞ்சல் வழியில்
# உயர்நிலை வேதாகமக் கல்வி

- Advanced Bible Correspondence Course -

இயக்குநர்

**அஞ்சல் வழி வேதாகமக் கல்வி**

த.பெ.எண் 27, காங்கேயம் 638-701.
தமிழ்நாடு , இந்தியா.

**கிறிஸ்துவின் தூய சத்தியத்தை தாங்கி வரும் மாத இதழ்கள்**
**வேண்டுவோர் தொடர்பு கொள்ளுங்கள்**

| | | |
|---|---|---|
| “திருமறை ஆசான்” | E.Z.S. ராஜநாயகம் | 98427 30382 |
| “சத்தியவழி” | P.R. சாமி | (0)98440 70763 |
| “[illegible]பையுள்ள வார்த்தை” | P.C. பிலமோன் ராஜா | 92442 04420 |
| “[illegible]வின் வசனம்” | B. அர்ச்சுனன் | 94435 58041 |